நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பன்னிரண்டு + VI

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 15 செவ்வாய்க்கிழமை (28.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 153

# கனரக ஆயுத மோதல்கள் நிறுத்தம்; மக்களை மீட்கும் பணிகள் தொடரும்!

## பொதுமக்களை மட்டும் பாதுகாக்க முன்னுரிமை என்று ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 28

விடுதலைப் புலிகளுக்கு எதிரான கனரக ஆயுத மோதல் நடவடிக்கைகள் முடிவுக்கு வந்துள்ளன என்று அரசு நேற்று அறிவித்தது. மோதல் நடவடிக்கைகள் அதன் முடிவை எட்டிவிட்டன என இலங்கை அரசு தீர்மானித்துள்ளது. இந்நிலையில் பொது மக்களுக்கு இழப்புகளை ஏற்படுத்தக்கூடிய தாக்குதல்களை அதாவது விமானங்கள், வான்வெளி ஆயுதங்கள், கனரக ஆயுதங்கள் போன்றவற்றை பயன்படுத்த வேண்டாமென பாதுகாப்புத் தரப்பிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள மக்களை மீட்கும் முயற்சியில் மாத்திரம் பாதுகாப்புப் படையினர் தமது நடவடிக்கையை மட்டுப்படுத்தி மேற்கொள்வர் என்றும் பொதுமக்களை பாதுகாப்பதற்கு மாத்திரம் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களின் நிலை குறித்த சர்வதேச சமூகத்தின் கவலைகள் அதிகரித்துள்ள நிலையில், நேற்று ஜனாதிபதி செயலகம் திடீரென இந்த அறிவிப்பை வெளியிட்டது.

(அ-சி)

## லண்டனில் நேற்று ஆர்ப்பாட்டம் இந்தியத் தூதரகம் மீது தாக்குதல்

லண்டன், ஏப்.28

லண்டனில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு முன்பாக நேற்றுக் காலையில் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் தூதரகத்தை தாக்கி சிறிய சேதத்தை ஏற்படுத்தினர் என இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கை நிலைமைகள் தொடர்பாக கோஷங்களை எழுப்பியவாறு வந்தவர்கள் இவ்வாறு தூதரகத்தை தாக்கி தூதரக ஜன்னல் கண்ணாடிகளை உடைத்தனர் எனவும் தூதரகம் கூறியுள்ளது.

தூதரக வாசல்கள் ஊடாக அத்துமீறி நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்களே 5 பேரை (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு அறிவித்தது யுத்தநிறுத்தமல்ல: இராணுவ நடவடிக்கைகள் தொடரும்

### பாதுகாப்பு அதிகாரிகள் அறிவிப்பு

கொழும்பு, ஏப்.28

அரசு நேற்று விடுத்துள்ள அறிவிப்பு எந்த வகையிலும் போர் நிறுத்தமல்ல. இராணுவ நடவடிக்கைகள் முன்பு போல் தொடரும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகளுக்கு மூச்சு விடுவதற்கு இதன் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:

விடுதலைப் புலிகளிடம் இன்னும் சிக்கியுள்ள 15,000 முதல் 20,000 பொதுமக்களை மீட்பதற்கான மனிதாபிமான நடவடிக்கையை பாதுகாப்பு படையினர் தொடருவார்கள்.

அதேவேளை, பொது மக்களுக்கு சிறிதளவு இழப்பைக் கூட ஏற்படுத்துவதில்லை என்ற கொள்கைக்கு ஏற்ப கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவது தவிர்க்கப்படும்.

அரசின் அறிவிப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனிதாபிமானக் குழுவை வன்னிக்கு அனுப்புவது குறித்த பேச்சுக்கள் தோல்வி!

### ஜோன் ஹோம்ஸ் கவலை



கொழும்பு, ஏப். 28

''ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானக் குழுவை மோதல் இடம்பெறும் பகுதிகளுக்கு அனுப்புவது குறித்து இலங்கை அரசுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லை.''

- இவ்வாறு ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுமாலை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் தனது கவலையை வெளியிட்டார்.

அவர் செய்தியாளர்களுக்கு மேலும் கூறியவை வருமாறு:-

''ஐ.நா. மனிதாபிமானப் பணியாளர்களை இலங்கையில் மோதல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் ஹோம்ஸ், பிரி.அமைச்சர் மைக் வவுனியாவுக்கு தனித்தனியே நேற்று விஜயம்

### நலன்புரி நிலையங்களை நேரில் பார்வையிட்டனர்

வவுனியா, ஏப்.28

வன்னியில் இருந்து வவுனியா வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஐ.நா. மற்றும் பிரிட்டிஷ் உயர் மட்ட அதிகாரிகள் நேற்று ஆராய்ந்தனர்.

ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ், பிரிட்டிஷ் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் மிக் போஸ்டர் ஆகியோர் தனித்தனியே நேற்று வவுனியாவுக்குச் சென்று இடம்பெயர்ந்தோர் தொடர்பாக ஆராய்ந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் விளையாட்டு முடிவடைந்தது: உயிருடன் பிடிக்க முழுமூச்சில் முயற்சி!

### சி.என்.என். தொலைக்காட்சிக்கு ஜனாதிபதி பேட்டி

கொழும்பு, ஏப்.28

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் விளையாட்டு பெரும்பாலும் முடிவடைந்து விட்டது. அவரை உயிருடன் பிடிப்பதற்கான நடவடிக்கைகள் முழுமூச்சில் எடுக்கப்படுகின்றன. விரைவில் அவர் பிடிக்கப்பட்டுவிடுவார் என நம்புகின்றோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்படித் தெரிவித்திருக்கிறார். (12 ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் 6 பக்கங்கள் கொண்ட இலவச கல்விச்சுடர் இணைப்பிதழ் உள்ளே

## மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள மக்கள் வெளியேறுவதற்கு போர் நிறுத்தம் அவசியம் என வலியுறுத்துகிறது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, ஏப்.28

இராணுவம் மேற்கொள்ளும் பாரிய தாக்கியழிக்கும் நடவடிக்கைகள் முடிவடைந்திருப்பதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்திருப்பதை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றுள்ளது. அதேவேளை ஆபத்தான நிலைமையிலுள்ள மக்கள் போர்ப் பகுதியில் இருந்து வெளியேறுவதற்கு வசதியாக உடனடியாக போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியிருக்கின்றது.

இலங்கையின் வடக்கில் தொடரும் போரினால் ஏற்பட்டுள்ள பெரும் எண்ணிக்கையான உயிரிழப்புக்கள், மோசமடையும் மனிதாபிமான நிலைமைகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார அமைச்சர்கள் தமது கவலையை மீண்டும் வெளிப்படுத்தியிருக்கின்றனர். அங்குள்ள பொதுமக்கள் தொடர்ந்தும் 'மிகவும் ஆபத்தான நிலையிலேயே' இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

''போர் பகுதியில் அகப்பட்டுள்ள மக்களை அங்கிருந்து ஐ.நா. வின் ஆதரவுடன் வெளியேற்றுவதற்கு அனுமதிக்கும் வகையில் மனிதாபிமான அடிப்படையிலான உடனடிப் போர் நிறுத்தம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும்'' எனவும் ஒன்றியத்தின் வெளிவிவகாரத்துறை அமைச்சர்கள் வலியுறுத்தியிருக்கின்றனர்.

கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை (12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தென்மராட்சியில் மூன்று பாடசாலைகள் தவிர ஏனையவற்றில் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 2 ஆம் தவணை கல்விச் செயற்பாடுகள் நேற்று ஆரம்பமாகின.

தென்மராட்சி கல்வி வலயத்தில் நலன்புரி நிலையங்கள் இயங்கும் மூன்று பாடசாலைகள் த்விர்ந்த ஏனைய பாடசாலைகள் இரண்டாம் தவணைக் கல்விச் செயற்பாட்டுக்காக நேற்று ஆரம்பமாகின.

நலன்புரி நிலையங்களாக இயங்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. ஆகியவற்றில் கல்வி பயிலும் தரம் 5, தரம் 11, தரம் 13 ஆகிய வகுப்புகளில் பொதுப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மாற்றுச் செயற்பாடுகள் மூலம் கற்றல் நடவடிக்கையினை வலயக் கல்வி அலுவலகத்தினர் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

# சாவகச்சேரி இந்துவின் வகுப்புக்கள் நாளை முதல் தனியார் கல்வி நிலையங்களில்

யாழ்ப்பாணம், ஏப்.28

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ளதால், மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக தற்காலிக மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கல்லூரி அதிபர் ஏ.கயிலாயபிள்ளை இதனைத் தெரிவித்தார்.

கீழ் குறிப்பிடப்படும் தனியார் கல்வி நிலையங்களில் நாளை புதன்கிழமை காலை 8 மணி முதல் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என அவர் தெரிவித்தார்.

* பிறைற்றின் கல்வி நிலையம், சங்கத்தானை - தரம் 12, 13 கலை வர்த்தக, கணித, விஞ்ஞான வகுப்புக்கள்.
* ஞானோதயா கல்வி நிலையம் - தரம் 9, 10, 11 வகுப்புக்கள்.
* நியூ மற்ஸ் சென்றர், மீசாலை - தரம் 6, 7, 8 வகுப்புக்கள்.

குறிப்பிட்ட வகுப்புக்களைச் சேர்ந்தவர்களை அந்த அந்த இடங்களுக்கு சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (1)

# இந்திய இராஜதந்திரிகளின் விஜயத்தின் பின்னர் பாதுகாப்பு வலயத்தில் மோதல் அதிகரிப்பு

## புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பேட்டி

கொழும்பு, ஏப்ரல் 28

இந்திய இராஜதந்திரிகள் கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டு அரசுடன் பேச்சுகளை நடத்திய பின்னர் பாதுகாப்பு வலயத்தின் மீதான தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன் இந்தியாவின் 'த ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொடரும் மோதலை நிறுத்துவதற்காக இந்திய அரசு ஆக்கபூர்வமான பங்களிப்பையாற்றத் தவறியுள்ளது எனவும் நடேசன் மின்னஞ்சல் செவ்வியில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல். துறைப் பொறுப்பாளர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடுகள், நடவடிக்கைகள், செயற்பாடுமின்மைகள் மிகுந்த ஏமாற்றமளிக்கின்றன.

அவர்கள் தமது கேந்திர பகுதியின் உண்மையான நண்பர்களை, இயல்பான சகாக்களை அடையாளம் காணவில்லை. மாறாக அவர்களுக்கு எதிராக செயற்படுகின்றனர்.

தற்போதைய இந்திய அரசு தமிழர்களுக்கு எதிரான யுத்தத்திற்கு சகலவிதமான இராணுவ, இராஜதந்திர உதவிகளையும் வழங்கி வருகிறது.

இலங்கையில் யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வைக் காண்பதற்காக இந்திய அரசு ஆக்கபூர்வமான வகையில் எதனையும் செய்யவில்லை.

சனிக்கிழமை கடுமையான விமானத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. பல ஆயிரக்கணக்கானவர்கள் தஞ்சம் புகுந்துள்ள பாதுகாப்பு வலயத்தில் உள்ள முள்ளிவாய்க்காலின் வட,தென் பகுதிகள் மீது விமானத்தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்திய இராஜதந்திரிகள் கொழும்பிற்கு விஜயம் மேற்கொண்டு அரசுடன் பேச்சுகளை மேற்கொண்டு திரும்பிய மறுநாள் தாக்குதல்கள் தீவிரமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது. (அ-சி)


### செஞ்சிலுவைச் சங்கம், யாழ்கிளை - வரைதல் போட்டி

உலக அரங்கில் 150 வருடங்களாகவும், யாழ்ப்பாணத்தில் 60 வருடங்களாகவும் செஞ்சிலுவைச் சங்கம் சேவை செய்து வருவது குறித்து, உலக செஞ்சிலுவை தினத்தை (08.05.2009) ஒட்டி கல்லூரி மாணவர்கள் மத்தியில் (15-18 வயதினருக்கு) 06.05.2009 பிற்பகல் 2 - 4 மணி வரை யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் ஒரு வரைதல் (Painting) போட்டியினை நடத்தவுள்ளோம். சிறந்தவர்றுக்கு பரிசுகள் அளிக்கவுள்ளோம். விவரத்துக்கு எம்மிடம் தொடர்பு கொள்க.

கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்கிளை,
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.


### காணவில்லை



### வி.யோசப்

27.04.2009 அன்று மு.ப. 10 மணியளவில் வீட்டிலிருந்து யாழ்.பெரிய தபாலகத்திற்குச் சென்ற வி.யோசப் (வயது 82, ஓய்வுபெற்ற ஆசிரியர்) இதுவரை வீடு திரும்பவில்லை. இவர் வெளிர் நீல நிற சேர்ட்டும் கறுப்பு லோங்கும் அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் கீழ் காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இல.3, கே.கே.எஸ். வீதி, இரத்தினம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (தட்டாதெருச்சந்தி அருகில்)

### மரண அறிவித்தல்

### சக்தியகுமாரன் ஆரணி



கொழும்பைப் பிறப்பிடமாகவும் தற்போது உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சக்தியகுமாரன் ஆரணி நேற்று (27.04.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சக்தியகுமாரன் (பொது சுகாதார பரிசோதகர், கொழும்பு) - ஜெயகௌரி (புள்ளிவிவர உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) தம்பதியினரின் அன்பு மகளும் அருணன் (மாணவன், மானிப்பாய் மகளிர் கல்லூரி - தரம் 1), சுஹாபரணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவகடாட்சம்பிள்ளை - தேவி, காலஞ்சென்றவர்களான குமாரகுலசிங்கம் - பொன்னம்மா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"குமார் இல்லம்",
உடுவில் தெற்கு, சுன்னாகம்.
021 4591101, 0777714556

தகவல்: சி.சக்தியகுமாரன் (தந்தை)
(பொதுச்சுகாதார பரிசோதகர், கொழும்பு).

# யாழ்.பல்கலையில் சிறப்பு விரிவுரை

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ்.விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் ஏற்பாட்டிலான சிறப்பு விரிவுரைத் தொடரில் ''கற்றறிவு எழுத்தாக்கத்திற்கான அணுகுமுறை'' என்னும் தலைப்பிலான விரிவுரை நாளை புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வ.கலாமணி சிறப்புரையாற்ற விருக்கிறார்.

ஆர்வம் உள்ளவர்களையும் ஆய்வுக் கட்டுரை எழுதுபவர்களையும் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

# தென்மராட்சியில் மெய்வன்மைப் பயிற்சி

மண்டுவில், ஏப்.28

தென்மராட்சி பாடசாலை மாணவர்களுக்கான மெய்வன்மைப் பயிற்சி முகாம் நாளையும் மறுதினமும் மே இரண்டாம் திகதியும் சாவகச்சேரி றிபேக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-59)

# களனிப் பல்கலைக்கழக உளச்சார்புப் பரீட்சை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.28

களனி பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி கற்கைநெறி அனுமதிக்கான உளச்சார்புப் பரீட்சை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 10 மணிக்கு இராமநாதன் மண்டபத்திலும் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண மாணவர்களின் போக்குவரத்து சிரமங்களை கருத்தில் கொண்டு இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார். (1)

### மரண அறிவித்தல்கள்

### Dr.அருளம்பலம் பேரின்பநாதன்



புங்குடுதீவு, 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கிறேஸ் லேன், உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட Dr.அருளம்பலம் பேரின்பநாதன் நேற்று (27.04.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும் ராதா மணாளன், யசோதா, சுபாஷினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அனுராஜின் அன்பு மாமனும் அனோஜின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.04.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'மணிமன்றம்'
கிறேஸ் லேன்,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

### தியாகராசா அருளம்பலம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா அருளம்பலம் நேற்று (27.04.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா - நவநாயகம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற லோகநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இரத்தினகோபால், கோபாலசிங்கம், இராசதுரை, திருமதி நவரத்தினம் செல்லம்மா மற்றும் பொன்னுத்துரை, திருமதி குமாரசாமி இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலக்கம் 355, கண்டி வீதி, அரியாலை என்னும் முகவரியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (28.04.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டி வீதி,
அரியாலை.

தகவல்: சகோதரி
(திருமதி குமாரசாமி இராசலட்சுமி)


எமது நிறுவனத்தின் மற்றுமோர் சேவை

April 27 முதல் மணமக்கள் சங்கமமாகும்

"கெட்டி மேளம்" திருமண சேவை
Keddy Melam Wedding Service
(நிறுவன மயப்படுத்தப்பட்ட நம்பகரமான துரித சேவை)

உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை விரைவாகவும் விரும்பியபடியும் இனிதே நிறைவேற்றிக் கொள்ளவும் அந் நிகழ்வுகளை சிறந்த முறையில் படம் பிடித்திடவும் (Video & Photo)

எமது நிறுவனத்தில் அடையாள அட்டை, பாஸ்போட் புகைப் படங்களை படம் பிடித்து உடனுக்குடன் பெற்றுக்கொள்ள 80/= மட்டுமே

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
82/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். E.Mail: moorthydigital@gmail.com

விற்பனைக்கு

மிகமிகக் குறுகிய நாள்கள் பாவித்த புத்தம் புதிய நிலையில் உள்ள தையல் மெசின் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772208475

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்
BIT
விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
University of Colombo School of Computing
புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது
(A/L) எத்துறை சார்ந்த மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்
BIT பட்டமளிப்பில் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
விண்ணப்படிவங்களிற்கும் பதிவுகளுக்கும்
MCS, 324, Palaly Road, Jaffna.
Supported by UNDP/JRRP


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

## எதிர்பார்க்கப்பட்ட தேர்தல் முடிவுகள்

நீதி கோரி - நியாயமான உரிமைகள் வேண்டி - சமத்துவத்துடன் கூடிய கௌரவ வாழ்வைக்கேட்டு - போராட்டம் நடத்திவரும் சிறுபான்மை இன மக்கள், அந்தப் போராட்டத்தில் வலிமை பெறும் போதெல்லாம் தேசிய இனப் பிரச்சினைக்குச் சமரச வழியில் இணக்கத் தீர்வு காண முயல்வதும், அப்போராட்டங்களில் அவர்கள் நலிவுறும் போதெல்லாம் அவர்களுக்கு எதிரான அடக்குமுறையை மேலும் தீவரப்படுத்துவதும் பெரும்பான்மை இனத்தின் பொதுவான போக்காகும்.

பிரிட்டிஷ் பிடியிலிருந்து இலங்கைத் தீவு விடுபட்ட காலம் முதல் கடந்த ஆறு தசாப்த காலமாக இங்கு அரங்கேறி வரும் அரசியல் அபத்த நாடகத்தின் கதைப் போக்கு இதுதான். காலத்திற்குக் காலம் இந்த நாடகத்தின் வகிபாகத்தை அலங்கரிக்கும் கதாபாத்திரங்களாக அரசியல்வாதிகள் மாறினார்களே தவிர,கதையின் பிரதான போக்கு மாறவேயில்லை.

சிறுபான்மையினரான ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்ட வடிவங்கள் மாறிய காலத்தில் கூட, அவர்களின் வலிவின் போது சமரசம் பேசுவதும், நலிவின் போது அடக்குமுறையைத் தீவிரப்படுத்துவதுமான தனது நிலைப்பாட்டைப் பேரினவாதம் கைவிடவேயில்லை.

இராணுவ வலுச் சமநிலையில் பெரும் பாதிப்புக்குள்ளாகிப் பின்னடைவு நிலையில் இலங்கைப் பெரும்பான்மையினரின் சிங்களப் படைகள் இருந்த 2001 ஆம் ஆண்டு கால கட்டத்தில் சமரசத் தீர்வுக்கான முயற்சியில் ஈடுபடுவதற்கு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு ஆணை வழங்கிய தென்னிலங்கை மக்கள் இப்போது தலைநகரை உள்ளடக்கிய மேல்மாகாணசபைத் தேர்தலில் என்றுமில்லாதவாறு ஆளும் பொதுமக்கள் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்புக்கு பெருவாரி வாக்குகளை அள்ளிக் குவித்து, அடக்குமுறை நடவடிக்கைக்கு முழு ஆதரவு வழங்கியிருக்கின்றார்கள்.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவின் கோட்டையான மேல் மாகாணத்திலேயே அதற்குப் பெரும் பின்னடைவு. தமிழர்கள் அதிகம் வாழும் சொற்ப தொகுதிகளில்தான் ஐ.தே.க. ஓரளவு தப்பிப் பிழைத்திருக்கின்றது. ஏனைய இடங்களில் எல்லாம் அதற்கு ஒரேயடியாகச் சரிவு.

தமிழர் தாயகத்தின் மீது இலங்கை அரசுப் படைகள் ஒரேயடியாக மேற்கொண்டுவரும் வெற்றிகரமான படை நடவடிக்கைகளுக்கு ஒட்டு மொத்தமான ஆதரவு என்ற சூறாவளிக் காற்றில் தன்னுடைய ஆதரவு வழமையாக மிஞ்சி நிற்கும் தலைநகரக் கோட்டையைக் கூட கோட்டை விட்டுவிட்டது ஐ.தே.கட்சி.

பெரும்பான்மை இனத்தின் - பேரினவாதத்தின் - ஒன்றுபட்ட கருத்து நிலைப்பாடு என்னவென்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் அப்பட்டமாக - வெளிப்படையாக - அப்படியே வெளிப்படுத்தி நிற்கின்றன என்பது உண்மைதான்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டமை போல மனிதாபிமான நடவடிக்கை(?) என்ற பெயரில் வன்னி மண் மீது அவரது படைகள் தொடுத்துள்ள நடவடிக்கைக்குத் தென்னிலங்கை மக்கள் வழங்கிய ஏகோபித்த ஆதரவையே இந்தத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன என்பது உண்மைதான். அதில் சந்தேகமோ, ஆட்சேபமோ இல்லை.

சிறுபான்மையினரின் உரிமைப் போராட்டங்களை அடக்கும் ஆட்சிப் பீடத்தின் உறுதியான - தீவிரமான - நடவடிக்கைகள், தெற்கில் அரசுக்குப் பெரும் வாக்கு ஆதரவாக விஸ்வரூபம் எடுக்கும் என்ற உண்மையையும் -

அதற்காகவே சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கும் எதேச்சாதிகாரப் போக்கில் தென்னிலங்கை அரசியல் சக்திகள் தீவிரம் காட்டுகின்றன என்ற யதார்த்தத்தையும் -

இந்தத் தேர்தலும் மீள ஒரு தடவை நிரூபித்து நிற்கின்றது என்று கூறுவதில் தப்பில்லை.

சிறுபான்மையினருக்கு எதிரான அடக்குமுறை தெற்கில் பெரும் வாக்குத் தேடித்தரும் வங்கியாகப் பரிணமிக்கும் என்ற உண்மை நீடிக்கும் வரை -

ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்கான வாக்குகளைச் சம்பாதிப்பதற்கு இந்தக் குறுக்கு வழியே சுலபமானது என்ற அரசியல் சூத்திரத்தில் தென்னிலங்கை அரசியல் சக்திகள் தங்கியிருக்கும் வரை -

மக்கள் எண்ணிக்கையில் மாத்திரமல்லாமல், தங்கள் வலிமையிலும் சிறுபான்மையினர் நலிவுற்றிருக்கையில் அவர்களுக்கு இந்த இலங்கைத் தீவில், நியாயமும், நீதியும், கௌரவமான வாழ்வும், அவற்றின் அடிப்படையிலான சமரசத் தீர்வும் கிட்டுவது துர்லபமே.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடயத்திலும், அதையொட்டிய பேரழிவுகளுக்கு முடிவு கட்டும் எத்தனத்திலும் அதிக ஆர்வமும் ஈடுபாடும் காட்டிவரும் சர்வதேசத் தரப்புகள் இந்த யதார்த்தப் புறநிலையை - உண்மைச் சூழலை - புரிந்து கொள்ளாமல் செயற்படுவது விசனத்துக்குரியது.

சிறுபான்மையினரான ஈழத் தமிழர்கள் இலங்கைத் தீவில் நலிவுற்றிருக்கையில் - அரசியல் ரீதியாகவும் வலுச் சமநிலையிலும் பலவீனமுற்றிருக்கையில் - அவர்களுக்கு நியாயமும், நீதியும் வழங்கும் தாராளம் தென்னிலங்கைக்கு வராது. மாறாக, சிறுபான்மையினரை மேலும் அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தி, புறம் ஒதுக்கும் வன்மமே அவர்கள் மத்தியில் தீவிரமாகத் தலைதூக்கும்.

அதுதான் இப்போது நடக்கின்றது. இதை சர்வதேசத் தரப்புகள் காலம் கடந்து இப்போதாவது புரிந்து கொள்வது நல்லது.

# மக்கள் பாதுகாப்பு வலயத்தினுள் மனிதாபிமானக் குழுவை அனுமதிக்குக!

## வெளிவிவகார அமைச்சரிடம் ஹோம்ஸ் வேண்டுகோள்

கொழும்பு, ஏப்ரல், 28

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஆணையாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் நேற்று வெளிவிவகார அமைச்சர் ரோஹித பொகொல்லாகமவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நேற்றுக்காலை வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானப் பணியாளர் குழுவொன்றை மக்கள் பாதுகாப்பு வலயத்திற்குள் அனுமதிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்கீமூனால் விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது எனவும் கூறப் பட்டது.

பாதுகாப்பு வலயத்திற்குள் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானக் குழு செல்வதை விட அப்பகுதியிலுள்ள மக்களை வெளியேற்றுவதே தற்போதைய முக்கிய விடயம் என அரசதரப்பால் ஜோன் ஹோம்ஸிடம் தெரிவிக்கப்பட்டது. அக் கருத்தை ஜோன் ஹோம்ஸும் ஏற்றுக்கொண்டார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பின்போது அரச தரப்பில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன, மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க மற்றும் அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை ஜோன் ஹோம்ஸ் இலங்கை வந்தடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(சி)

# விடுதலைப் புலிகளைப் போல இலங்கை அரசும் போர்நிறுத்தம் செய்வதற்கு முன்வரவேண்டும்

## மோதலில் சிக்கியுள்ள மக்களுக்கு இது உதவியாக இருக்கும் என்கிறார் பிரி.அமைச்சர் மில்லிபான்ட்

கொழும்பு,ஏப்.28

தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள ஒருதலைபட்ச போர்நிறுத்தத்தை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டு அதற்கு ஏற்றாற்போல் தானும் போர்நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டேவிட் மில்லி பாண்ட் அறிக்கையொன்றில் வலியுறுத்தியுள்ளார்.

போர் நடக்கும் பகுதிகளில் சிக்கியுள்ள பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு இது உதவியாக இருக்கும் என்று பிரிட்டிஷ் அமைச்சர் கூறியுள்ளார்.

மனிதாபிமானக் காரணங்களுக்காக போர்நிறுத்தம் செய்யப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை நாம் கொண்டிருக்கின்றோம். அதையே வற்புறுத்தவும் செய்கின்றோம்.

விடுதலைப் புலிகள் தன்னிச்சையான போர்நிறுத்தத்தை அறிவித்திருக்கிறார்கள் என்று தெரியவந்துள்ளது. எனவே நான் இலங்கை அரசாங்கத்தையும் அவர்களது போர்நிறுத்தத்தை மீண்டும் அமுல்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு செய்யின் போர் நடைபெறும் பகுதியில் சிக்குண்டு போயுள்ள பொதுமக்கள் பத்திரமாக வெளியேறிச் செல்ல உதவுவதாக இருக்கும். இரண்டு தரப்பினரும் சர்வதேசச் சட்டங்களை கடைப்பிடிக்கவேண்டும். அதன் மூலம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும் என்று மில்லிபான்ட் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பபவை வருமாறு:

பிரிட்டிஷ் பிரதமர் இலங்கை ஜனாதிபதியுடன் பேசியிருப்பதற்கிணங்க நான் ஏப்ரல் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை அங்கு விஜயம் செய்வேன். என்னுடன் பிரான்ஸ் மற்றும் சுவீடன் வெளியுறவு அமைச்சர்களும் வருவார்கள். வட இலங்கையில் மனிதாபிமான நிலைமைகளை ஆராய்வதே எனது முக்கிய குறிக்கோள்.

மோதல் பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறியவுடன் அவர்கள் இடம்பெயர்ந்த மக்களாகக் கருதப்பட்டு ஏனையவர்களுடன் இணைந்து செயற்பட அனுமதிக்கவேண்டும் என்றும் இடம்பெயர்ந்தவர்களின் முகாம்களை மேம்படுத்துவதற்கு ஒப்புக்கொண்ட உறுதிமொழிகளை நிறைவேற்றும்படியும் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

(ப)

# ஈழத் தமிழரைக் காப்பாற்றக் கோரி வைகோ ஒபாமாவிற்கு வேண்டுகோள்

கொழும்பு, ஏப்ரல், 28

ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுமாறு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

இது தொடர்பாக நேற்று திங்கட்கிழமை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு வைகோ அனுப்பியுள்ள மின்னஞ்சல் வருமாறு :-

இந்தியாவிலும், உலகம் முழுமையும் வாழ்கின்ற பத்துக் கோடி தமிழர்கள் சார்பிலும் இலங்கை அரசு இலங்கைத் தீவில் வாழ்கின்ற தமிழர்களை இனப்படுகொலை செய்து வருவதை இரத்தம் கசியும் இதயத்தோடு தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவதுடன் இலங்கையில் வாழும் தமிழர்களைப் பாதுகாக்கக்கோரி இந்த விண்ணப்பத்தைத் தங்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

கடந்த 30 ஆண்டுகளில் ஒரு இலட்சம் தமிழர்கள் இலங்கைத் தீவில் இலங்கை அரசின் இராணுவத் தாக்குதல்களினால் படுகொலை செய்யப்பட்டனர். தொன்றுதொட்டு வாழ்ந்து வந்த பத்து இலட்சம் தமிழர்கள் தங்களது தாயக மண்ணை விட்டுத் துரத்தியடிக்கப்பட்டனர்.

இப்பொழுது இலங்கை முல்லைத் தீவில் மூன்றரை இலட்சம் தமிழர்கள் உணவும் மருந்தும் இன்றி சிக்கித் தவிக்கின்றனர். அவர்கள் மீது இலங்கை வான்படை சரமாரியாகக் குண்டுகளை வீசி கொத்துக் கொத்தாக படுகொலை செய்து வருகிறது.

இலங்கை அரசின் இத்தகைய இனப்படுகொலைத் தாக்குதல்களை எதிர்த்துத்தான் விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

உலகின் தொன்மையான பழங்குடி இனங்களுள் ஒன்றான தமிழர்களாகிய நாங்கள், அமெரிக்க அரசு மனிதாபிமான நோக்கோடு இலங்கைப் போரைத் தடுத்து நிறுத்துவதற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

விடுதலைப்புலிகள் இயக்கம் 2001 ஆம் ஆண்டு நத்தார் பண்டிகையை முன்னிட்டு தாங்களாகவே முன்வந்து போர்நிறுத்தத்தை அறிவித்தனர்.

உலக நாடுகள் கொடுத்த அழுத்தத்தால் வேறு வழியின்றி இலங்கை அரசும் போர்நிறுத்தத்தை அறிவித்தது. பின்னர் அந்தப் போர் நிறுத்தத்தை இலங்கை அரசுதான் முறித்துக் கொண்டு படுகொலைத் தாக்குதல்களை இன்றுவரை தொடர்கிறது.

கடந்த 2008 ஆம் ஆண்டிலும் விடுதலைப்புலிகள் இயக்கம் போர் நிறுத்தத்தை அறிவித்தபோதும் இலங்கை அரசு அதை ஏற்கவில்லை. இப்போதும் தாங்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று விடுதலைப்புலிகள் இயக்கம் உடனடியாக நேற்றுமுன்தினம் (26.04.2009) போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். ஆனால், இலங்கை அரசு அதையும் ஏற்கவில்லை.

இலங்கைத் தமிழர்கள் படுகொலை குறித்து 1995 ஆம் ஆண்டு அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனுக்கு நான் கோரிக்கை விண்ணப்பம் அளித்திருந்தேன். அதை அவர் ஏற்றுக்கொண்டு எனக்குப் பதில் கடிதம் எழுதியிருந்தார்.

தங்களுக்கு இப்பிரச்சினை குறித்து நான் விண்ணப்பங்கள் கொடுத்து உள்ளேன். நெருக்கடியான இவ்வேளையில் தமிழர்களின் நம்பிக்கை ஒளிக்கீற்றாக தாங்கள் திகழ்கிறீர்கள்.

இலங்கையில் வாழும் தமிழ் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தி அவர்களைப் பாதுகாக்கத் தாங்கள் மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கு நாங்களும் எங்கள் தலைமுறையினரும் நன்றியோடு இருப்போம் - என்று அதிலுள்ளது.

(சி)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 16 | 29.04.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | மு.இ.11.28 வரை |
| நட்சத்திரம்: | மிருகசீடம் |
| | மு.ப. 08.30 வரை |
| சுபநேரம்: | 04.28 - 05.58 |
| ராகுகாலம்: | 11.58 - 01.28 |

## ஜனாதிபதி மஹிந்தவுடன் கடாபி உரையாடல்

கொழும்பு, ஏப்.28

லிபிய நாட்டு ஜனாதிபதி முஹம்மர் கடாபிக்கும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் தொலைபேசி உரையாடல் ஒன்றுசமீபத்தில் இடம்பெற்றது

இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு தனது நாடு பூரண ஆதரவளிக்கும் என லிபிய ஜனாதிபதி இதன்போது உறுதியளித்துள்ளார்.

இலங்கை அரசு விடுத்த அழைப்பிற்கு முன்னுரிமை கொடுத்து இலங்கைக்கு விஜயம் ஒன்றை விரைவில் மேற்கொள்ளவுள்ளார் என்றும் அவர் அதன்போது தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

மேலும் நலிவடைந்திருக்கும் இலங்கைப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப 50 கோடி அமெரிக்க டொலர்கள் கடனாக வழங்க லிபியா தீர்மானித்துள்ளது.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



வேலணை கிழக்கு, செட்டிப்புலம், காளவாத்துறை

# அருள்மிகு ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் திருக்கோயில்

நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா

## மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2009

**சித்திரைத் திங்கள் 16ஆம் நாள் (29.04.2009)**
**புதன்கிழமை காலை 7.15 மணிமுதல் 07.45 மணிவரை**

**இன்று (28.04.2009) செவ்வாய்க்கிழமை** காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை தைலாப்பியங்கம் (பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல்) **நாளை (29.04.2009) புதன்கிழமை** அதிகாலை 5 மணிமுதல் விநாயகர் வழிபாடு, கொடிமர பூஜை, யாக பூஜைகள் (காலம் 04) விஷேட நிறைவு ஆகுதி, மஹாபூர்ணாகுதி, தீபாராதனை, சர்வாஞ்சலி, உபசார சமர்ப்பணம், 6.30 மணிமுதல் கும்பங்கள் திருவீதி உலா, காலை 7.15 மணிக்கு ஸ்தூபி அபிஷேகம், 7.45 மணிக்கு ஹரிஹரபுத்திர ஐயனாருக்கு மஹாகும்பாபிஷேகம் தொடர்ந்து பரிவார மூர்த்திகளுக்கு மஹாகும்பாபிஷேகம் நிறைவுறும்.

மங்கள தரிசனம், ஆசீர்வாதம், ஆசியுரை தொடர்ந்து மஹாபிஷேகம், விஷேட பூஜை, திருவருட்பூஜை. மாலை 4.30 மணி முதல் விஷேட பூஜை, சுவாமி வீதியுலா வலம் வருதல்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேக விழாக்காலங்களில் அடியார்கள் ஆசார சீலர்களாக வந்து தங்களால் இயன்ற பால், தயிர், இளநீர், பூ வகைகள், தேங்காய் எண்ணெய் போன்ற சிவத்திரவியங்களை ஆலயத்தில் சமர்ப்பித்து எம்பெருமானின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்வீர்களாக.

காளவாத்துறை,
செட்டிபுலம், வேலணை. **ஆலய பரிபாலன சபையினர்.**

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## வெளிவாரிப் பரீட்சைகள் - 2008

1. வணிக முதற் தேர்வு - 2007 & 2008
2. வணிகமாணி பகுதி - I - 2007
3. வணிகமாணி பகுதி - II - 2006 & 2007
4. வணிகமாணி பகுதி - III - 2005 & 2006

மேற்படி பரீட்சைகளை 18.05.2009 (திங்கட்கிழமை) தொடக்கம் 02.06.2009 (செவ்வாய்க்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் பின்வரும் ஒழுங்கில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| வணிக முதற் தேர்வு -2007 & 2008 | 18.05.2009-26.05.2009 | 8.45-11.45 |
| வணிகமாணி பகுதி -II - 2006 & 2007 | 18.05.2009-23.05.2009 | 12.30-3.30 |
| வணிகமாணி பகுதி -I - 2007 | 25.05.2009-01.06.2009 | 12.30-3.30 |
| வணிகமாணி பகுதி - III - 2005 & 2006 | 27.05.2009-02.06.2009 | 8.45-11.45 |

பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 14.05.2009 (வியாழக்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.
27.04.2009

---

### உடற்பயிற்சிப் போட்டி

தென்மராட்சி பாடசாலைகளிற்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (1-59)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சக ஆசிரியை
திருமதி கனேந்திரவதி சிவநேசன்
அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி புஸ்பம் மாணிக்கம்

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்**
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

(சி/558234)

---

# வர்த்தக அனுமதிப் பத்திரம் பெறும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது

## வலி.தெற்கு பிரதேச சபை செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.28

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக் குட்பட்ட வர்த்தக நிலையங்கள் தமது வியாபார அனுமதிப்பத்திரத்தை பெறும் கால எல்லை நாளை வியாழக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

சகல வர்த்தக நிலையங்களும் வியாபார அனுமதிப் பத்திரத்தை கடந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக பெற்றுக் கொள்ளவேண்டுமென முன்னர் அறிவிக்கப்பட்டது. எனினும் வர்த்தகர்களின் நலன்கருதி மேற்படி அனுமதிப்பத்திரம் நாளை மறுதினம் வியாழக்கிழமைவரை நீடிக்கப் பட்டுள்ளதாக வலி.தெற்கு பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

சகல வர்த்தக வியாபார நிலையங்கள் அனைத்தையும் இந்த ஆண்டுக்கான வியாபார உரிமக்கட்டணங்களை சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்களில் செலுத்தி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி அனுமதிப் பத்திரத்தை பெறத் தவறினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் 147, 148, 149, 150,152, 154 பிரிவின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

(1-201)

---

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியர்
திரு.E.பிரபாகரன் அவர்களின் அன்பு மாமனார்

### செல்லையா சீவரத்தினம்

காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய வட்டம்,**
**யாழ்.மத்திய கல்லூரி,யாழ்ப்பாணம்.**

(84740)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி ரஜிதா சுரேஷ்
அவர்களின் பாசமிகு தந்தை

### S.அலோசியஸ்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

**ஆ[illegible]ர் சங்கம்,**
புனித [illegible]யார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(84741)

---

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் பொன்னம்மா

காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், செட்டித்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் பொன்னம்மா (ஆச்சிஅக்கா) (26.04.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் சிவசுப்பிரமணியத்தின் (முன்னாள் கல்வித்திணைக்கள எழுதுவினைஞர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா- தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற விசுவலிங்கம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் சங்கரப்பிள்ளை (வவுனியா), கதிரமலைநாதன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (28.04.2009) மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
50/20, செட்டித்தெரு, நல்லூர்.
கதிரமலைநாதன் (சகோதரன்)

---

## தவறிவிட்டது

தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த தேவராஜா ஆனந்தி என்பவரது தே.அ.அ. (69745 2915 V) 13.04.2009 அன்று யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். தொ.பே: 0775002361

---


நீங்களும் **Engineer**

Microsoft New Batch :01.05.2009 07.30 AM

- Microsoft நிறுவன அதிபர் Bill Gates[illegible]
- Network Manager, System Admin., System Engineer [illegible]
- USA,UK, [illegible] BSc,MSc
- Student Visa, Work Permit _Career guidance

விபரங்களுக்கு நேரில் MCS
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
Supported By UNDP/JRRP
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764


---

## விற்பனைக்கு

நிறைசினை நல்லினப் பசு, Q.S.90, மோட்டார் சைக்கிள், M.12 வில்லியஸ் (Indian) நீரிறைக்கும் இயந்திரம், தெளிகருவி என்பன விற்பனைக்குண்டு. சந்திக்கும் நேரம் மு.பகல் 11 - 2 மணிவரை.

தொடர்பு: [illegible]

(84736)

---

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை இராசரத்தினம்



அரியாலை மேற்கைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட பட்டு என அன்பாக அழைக்கப்படும் சின்னத்துரை இராசரத்தினம் (26.04.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், ஜேர்மனியில் வசிக்கும் மகிந்தன்(M.B.A)மற்றும் இந்தியாவில் வசிப்பவர்களான கஜந்தன், ஜெயந்தன், முகிந்தன்(M.A), மேகலை(B.Sc) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவரான கனகரத்தினம் மற்றும் பஞ்சரத்தினம், சந்திரலேகா, சந்திரசேனா, சற்குணவதி, ராஜரட்ணம், செல்வநாயகம், சந்திரகலா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவரான பவளமணி மற்றும் சின்னத்தம்பி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), கதிரேசு(ஓய்வுபெற்ற நடத்துநர் இ.போ.ச), பொன்றோஸ் பஞ்சாட்சரம், தயாளினி, பத்மரஞ்சினி லோகேஸ்வரன்(இ.மி.ச) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.04.2009) செவ்வாய்க்கிழமை புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 10 மணியளவில் நல்லூர் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புவனேஸ்வரி அம்பாள் வீதி,
நல்லூர். (84738)
தகவல்: **சகோதரர்கள்.**

### திருமதி மாணிக்கம் அருளம்மா (ராசு)



நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தை 37ஆவது ஒழுங்கை, 50 3/2 ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் அருளம்மா கடந்த 24.04.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் முன்னாள் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் காலஞ்சென்ற மயில்வாகனம் மாணிக்கத்தின் அன்பு மனைவியும் அமரர் மனோகர ராசா மற்றும் கலாவதி (கொழும்பு), சத்தியவதி, தர்மாகரன் (கொழும்பு), வாசுகி (கொழும்பு) கனடாவில் வதியும் மாலதி, கெங்காவதி, வசீகரன், வளர்மதி ஆகியோரின் பாசமிகு தாயும் அமரர் தங்கரத் தினம் அமரர் வேலாயுதபிள்ளை மற்றும் கயிலாயபிள்ளை (கொழும்பு), வள்ளிநாயகி (கனடா), கதிர்காமநாதன் (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்), சிவசோதி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்..

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.04.2009) புதன்கிழமை கல்கிசை மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பெருங்குளம் வீதி,
சாவகச்சேரி.
**குடும்பத்தினர்.**
தொ.பே. 0112503588, 060 221 2961.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகிரியாவில் நடைபெறவுள்ள கண்காட்சியில் யாழ்ப்பாணக் கூட்டுறவு அமைப்புகளின் பொருள்கள்

## பார்வைக்கு வைக்கவும் சந்தைப்படுத்தவும் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவு அமைப்புகளால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சிகிரியாவில் நடைபெறும் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவு அமைப்புகளால் உற்பத்தி செய்யப்படும் உள்ளூர் உற்பத்தி பொருள்களைக் கண்காட்சியில் பார்வைக்கு வைப்பதற்கும் அவற்றைச் சந்தைப்படுத்தவும் வடமாகாணக் கூட்டுறவுத் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

ஜூன் மாதம் 5ஆம் திகதி சிகிரியாவில் ஆரம்பமாகும் இக்கண்காட்சி தொடர்ந்து நான்கு நாள்கள் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத்தின் சித்தவைத்திய மருந்துப் பொருள்கள், சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத்தின் 'ஜசுபி' நிறுவன உற்பத்தி பொருள்கள், திக்கம் வடிசாலை பனஞ்சாராயம், பண்டத்தரிப்பு, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நல்லெண்ணெய், மீனவர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் கருவாடு மற்றும் பொருள்கள், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் பொருள்கள் என்பவற்றுடன் பல்வேறு உற்பத்திப் பொருள்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன எனக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் தெரிவித்தார். (50-224)

## ஒரு தொகுதி அகதிகள் சாவகச்சேரி இந்துவுக்கு மாற்றப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம்,ஏப்.28

சாவகச்சேரி மகளிர் கல்லூரி நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளவர்களில் ஒரு தொகுதியினர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி நலன்புரி நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மகளிர் கல்லூரி நலன்புரி நிலையத்தில் தற்போது தங்கியுள்ள 2 ஆயிரத்து 224 பேரில் ஆயிரத்து 500 பேர் தவிர்ந்த ஏனையோர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி நலன்புரி நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-207)

## ரயர், ரியூப் போதியளவு இல்லாமையால் பருத்தித்துறைக்கான இ.போ.ச. பஸ் சேவை பாதிப்பு

வடமராட்சி,ஏப்.28

பஸ்வண்டிகளுக்குத் தேவையான ரயர், ரியூப் போதியளவு இன்மையால் பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவினால் நடத்தப்பட்டு வரும் பஸ் சேவைகள் பெரிதும் சீர்குலைந்துள்ளன.

குறிப்பாகப் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நெல்லியடி ஊடாகவும், வல்வெட்டித்துறை ஊடாகவும் நடைபெற்று வரும் பஸ் சேவைகளே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் இ.போ.ச. பஸ் சேவைகளை நம்பியிருந்த பயணிகள் பெரிதும் சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவுக்குச் சொந்தமாக 48 பஸ்வண்டிகள் இருந்தபோதும் அவற்றில் 6 பஸ்வண்டிகள் மாத்திரமே சேவையில் ஈடுபடக்கூடிய நிலையில் உள்ளதாகவும் ஏனையவற்றிற்கு ரயர்கள், ரியூப்கள் போன்ற உதிரிப்பாகங்கள் இன்மையால் டிப்போவுக்குள் முடங்கிப் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சீர்குலைந்துள்ள பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ பஸ்சேவையை ஆகக்குறைந்த அளவுக்கேனும் வழங்கும் முகமாக காரைநகர் இ.போ.ச. டிப்போவிலிருந்து இரண்டு பஸ்வண்டிகளையும் யாழ்ப்பாணம் டிப்போவிலிருந்து ஒரு பஸ்வண்டியையும் பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ பெற்று பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பாதையில் சேவையிலீடுபடுத்தியுள்ளது. (236)

## பின்தங்கிய மாணவர்களுக்கு பரிகாரக் கற்பித்தல்

கரவெட்டி,ஏப்.28

வடமராட்சி வலயத்தில் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவர்களில் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்குக் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் பரிகாரக் கற்பித்தல் செயற்பாடுகள் பின்வரும் பாடசாலைகளில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப்பணிமனை அறிவித்துள்ளது.

மே மாத நடுப்பகுதியில் இருந்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, வதிரி திரு இருதயக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் காலை 8.30 மணிமுதல் முற்பகல் 10.30 மணிவரையும், பின்னர் முற்பகல் 10.30 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரையும் இப்பரிகாரக் கற்பித்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் மேற்படி இப்பரிகாரக் கல்வி வகுப்பிற்குத் தவறாது சமுகம் தருமாறும் கேட்டுள்ளது. (50-70)

## கைதடி முதியோர் இல்லத்திற்கு 'யுனிசெவ்' நிறுவனம் உதவி

வண்ணை,ஏப்.28

கைதடி அரச முதியோர் இல்லத்திற்கு 'யுனிசெவ்' நிறுவனம் சில பாவனைப் பொருள்களை வழங்கியுள்ளது.

சவர்க்காரம், பற்பசை தூரிகை, சீப்பு என்பவற்றுடன் உடுபுடைவை காயவிடுவதற்கான கயிறு, காற்றில் பறந்துவிடாமல் இருப்பதற்கான கிளிப், சம்போ, வோசிங் பவுடர் ஆகிய பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (203-160)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## இரவு பகலாக ஒளிரும் மின்குமிழ்கள்

வடமராட்சி,ஏப்.28

வடமராட்சிப் பிரதேசத்தில் தெரு வீதிகளில் மக்களால் ஏற்படுத்தப்பட்ட மின்குமிழ்கள் இரவுபகலாக ஒளிர்வதால் மின் இணைப்புப் பெற்ற பாவனையாளர்கள் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதில் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இப்பிரதேசத்திலுள்ள தெரு வீதிகளில் உள்ளூராட்சிச் சபைகளோ, மின்சார சபையோ இரவுநேரம் ஒளிர்வதற்கான மின்குமிழ்களை கடந்த பல வருடங்களாகப் பொருத்தவில்லை.

ஏற்கனவே சில பிரதான வீதிகளில் இரவு நேரம் ஒளிரும் விதத்தில் ரியூப் மின்குமிழ்களை மின்சார சபை பொருத்தியிருந்தது.

அவை பழுதடைந்ததும் அவற்றை மின்சார சபை பராமரிக்கவோ அவற்றைச் சீர்திருத்தம் செய்யவோ இல்லை.

இதனால் வீதியோரம் வசிக்கும் மக்கள் தமது பாதுகாப்புக் கருதி ஆங்காங்கே மின்சார இணைப்பு வழிகளுடன் உள்ள மின் தூண்களில் மின்குமிழ்களையும் அவற்றை ஒளிரவைப்பதற்கும் அணைப்பதற்கும் வசதியாக மின்தூண்களில் மின்விசைகளையும் பொருத்தி மின்குமிழ்களை ஒளிரவிட்டனர்.

இவ்வாறு வீதிகளில் ஒளிரும் மின்குமிழ்கள் விடிந்ததும் மின்விசை மூலம் அணைக்கப்படாமல் இருக்கும் நிலை பல வீதிகளில் இப்போது காணப்படுகின்றது.

இதனால் வீதி மின்குமிழ்கள் இரவு பகலாக ஒளிர்ந்தவண்ணம் இருக்கின்றன. இவை இரவு பகலாக ஒளிர்வதனால் மின் இணைப்புகளைப் பெற்ற மின்பாவனையாளர்களுக்குச் சீரான, ஒழுங்கான மின்சாரம் கிடைக்காத நிலைமை ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-236-70)

## உயர்தரத்திற்கு மாணவர்களை இணைக்க பாடசாலைகளில் மாறுபட்ட நடைமுறைகள்

வலி.வடக்கு,ஏப்.28

கடந்த வாரம் ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ள நிலையில் மாணவர்களின் உயர்வகுப்பு சம்பந்தமாகப் பாடசாலைகளில் வேறுபட்ட நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதாக பெற்றோர்களும் மாணவர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதுவரை காலமும் ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றி கணித பாடத்தில் சித்தி அடையாவிட்டாலும் கூட உயர்தர வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டு அடுத்த வருடம் கணித பாடத்திற்குத் தோற்றிச் சித்தி அடையலாம் என்ற அடிப்படையில் மாணவர்கள் உயர்தர வகுப்பிற்கு அனுமதிக்கப்பட்டார்கள்.

இம்முறை இந்த நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டு கணித பாடத்திலும் ஒரே தடவையில் சித்திய அடைந்தால் மட்டுமே உயர்தர வகுப்பில் கல்வி கற்க அனுமதிமதிக்கப்படுவார்கள் என்ற சுற்றுநிருபம் கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்டதாகக் கூறி சில பாடசாலைகள் கணித பாடத்தில் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கு உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்கு அனுமதி வழங்காது மறுத்துள்ளன.

இதேவேளை சில பாடசாலைகள் கணித பாடத்தில் சித்தியடையாதபோதிலும் உயர்தர வகுப்பில் கற்பதற்கு அனுமதி வழங்கியுள்ளன.

இத்தகைய நிலைமையினால் பெற்றோர்களும் மாணவர்களும் சரியான அறிவித்தல் இன்றிப் பெரும் திண்டாட்டத்திற்கு ஆளாகியுள்ளனர்.

இந்த விடயத்தை உரிய அதிகாரிகள் கவனத்தில் கொண்டு உரிய அறிவுறுத்தலை வழங்கவேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மாணவர்களும் பெற்றோர்களும் கேட்டுள்ளனர். (203-86)

## கணனிப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,ஏப்.28

ஸ்ரீலங்கா தொழில் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் நல்லூர், கோப்பாய், உடுவில், யாழ்ப்பாணம், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் கணனித் தொழில்நுட்ப பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் அரச, தனியார் ஊழியருக்கான கணனித் தொழில்நுட்ப பயிற்சி அடிப்படையில் இருந்து தேவைக்கேற்ப கற்பிக்கப்படவுள்ளது.

தேசிய கல்வியியல் கல்லூரி தேவை கருதிய மாணவர்களும் சனி, ஞாயிறு நடைபெறும் வகுப்புகளில் அனுமதிக்கப்படவுள்ளனர்.

மேற்படி பயிற்சி நெறியில் இணைய விரும்புவோர் தமது சுயவிவரக்கோவையை 103/01, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட இணைப்பாளர் அறிவித்துள்ளார். (201)

## சாவகச்சேரி நலன்புரி நிலையத்தில் பெரும் சுகாதார நெருக்கடி

யாழ்ப்பாணம்,ஏப்.28

சாவகச்சேரி மகளிர் கல்லூரி நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்கள் பெரும் சுகாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கல்லூரியில் ஒரு கிணறும், மலசலகூடமும் உள்ளதால் தங்கியுள்ள 2ஆயிரத்து 500க்கு மேற்பட்ட மக்கள் இயற்கைகடன் மற்றும் குளிப்பதற்கு தண்ணீர்ப்பற்றாக்குறையினால் பெரும் சிரமங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கல்லூரி, மைதானம் சிறுவர்களால் இயற்கைக் கடனுக்கு பயன்படுத்துவதால் அயலில் உள்ள குடும்பங்கள் சுகாதாரச் சீர்கேட்டினை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-207)

## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.28

தென்மராட்சி பிரதேசத்தில் [illegible] நிஷா பெருவெள்ளம் மற்றும் இரு [illegible] கள் (ஜனவரி, மார்ச்) பெய்த கடும் மழை ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை நட்டஈடு வழங்கப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கப்பட்டது.

மூன்று தடவைகள் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் அழிவு ஏற்பட்டதாகவும் இவற்றுக்கு நட்டஈடு வழங்குவதாக விவசாயத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டபோதிலும் இதுவரை தமக்கு ஏதும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (50-207)




ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் நிறுவுநர் தின விழாவும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் சென்.ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் நிறுவனத்தின் பயிற்சி இயக்குநர் எஸ்.பிரபாகரன் மங்கள விளக்கேற்றுவதையும் நிறுவனத்தின் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் இயக்குநர் கு.விக்னேஸ் மாணவி ஒருவருக்குச் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம். (50-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே மாதத்தில் தேசிய நூலக வாரத்தை நாடளாவிய ரீதியில் அனுஷ்டிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.28

மே மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை நாடு முழுவதிலும் தேசிய நூலக வாரத்தினை அனுஷ்டிக்க தேசிய நூலக ஆவணங்கள் சபையினரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்திற்கமைய வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சிமன்ற பொதுநூலகங்கள் தேசிய நூலக வாரத்தைக் கொண்டாடவேண்டுமென சபையின் உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை வாழ்க்கை நீடித்த கல்விக்காக ஒவ்வொரு நூலகங்களையும் தயார்படுத்தல், சகல வயதினரும் முதியோர், இளைஞர், சிறுவர்கள் பொதுநூலகத்தைப் பயன்படுத்தக்கூடியவாறு நூலகங்களை உருவாக்குதல், சமூகம் பற்றிய தகவல்களைச் சகல குடிமக்களும் பெற்றுக்கொள்வதற்கு ஊக்கமளித்தல், நூலக சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு நூலக சேவையை விரிவுபடுத்த உதவுதல், நூலகம் சம்பந்தமான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள், புத்தகக் கண்காட்சிகளையும் தொடர்ச்சியாக நடத்துவதற்கு ஊக்கமளித்தல், தனிநபர் ஆற்றல்களினை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் சந்தர்ப்பங்களை வழங்கி ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகள் நூலக வாரத்தில் மேற்கொள்ளப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-236)

# கசிப்பு வைத்திருந்த 6 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

கசிப்பு வைத்திருந்த ஆறு பேருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் 26 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சாவகச்சேரி கச்சாய் வீதி, மட்டுவில் சந்திரபுரம், மட்டுவில் கிழக்கு, மந்துவில் கிழக்கு, கைதடி மத்தி, சரசாலை வடக்கு ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போது அகப்பட்ட ஆறு பேருக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இவ்வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அனைவரும் குற்றங்களை ஒப்புக்கொண்டதால் நால்வருக்குத் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 5 மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் ஏனைய இருவருக்குத் தலா 3ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்துச் செலுத்தத் தவறின் தலா மூன்று மாத சாதாரண சிறை அனுபவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (50-207)

## செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர்களுக்கென நாளை புதன்கிழமை நடைபெறவிருந்த செயலமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இச்செயலமர்வு அடுத்தமாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.கல்வி வலயத்தில் நடைபெறும் என யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (50-236)

| முதலாம் ஆண்டு நினைவஞ்சலி | 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி |
|---|---|
| தோற்றம் 04 . 11 . 1926 — மறைவு 09 . 05 . 2008 | தோற்றம் 21 . 03 . 1913 — மறைவு 18 . 12 . 2000 |





திருமதி கனகரத்தினம் நாகம்மா — திதி: சதுர்த்தி

அமரர் முருகேசு கனகரத்தினம் — திதி: அட்டமி

*காலங்கள் சென்றாலும் கலையாது உங்கள் ஞாபகங்கள்*
*ஓராண்டு போனாலும் ஓயாதம்மா உங்கள் நினைவுகள்*
*ஒன்பது ஆண்டுகள் கழிந்தாலும் உறங்காதய்யா உங்கள் நினைவுகள்*
*அம்மா நீங்கள் சுமந்த பிள்ளைகள் நாங்கள்*
*இன்று உங்களை எம் இதயத்தில் சுமந்து கொண்டுள்ளோம்*
*தெய்வத்தைப் பார்த்ததில்லை ஆனால் ஐயா உங்களைப் பார்த்துள்ளோம்*
*எல்லோருக்கும் உதவிய உங்கள் கரங்கள் இன்று மடிந்துவிட்டது*
*ஆனால் அது தெய்வத்திற்கு சேவை*
*செய்வதற்காகவே என்று பூரித்துக்கொள்வோம்*
*உங்கள் இனிய உள்ளங்கள் தான் இன்று*
*எம் வளர்ச்சிக்கு ஊன்று கோலாயிற்று*
*உங்கள் நல்ல ஆத்மாக்கள் இன்று தெய்வத்திடம் சங்கமமாயிற்று*
*உங்கள் ஆத்மாவின் சாந்திக்காக நாமும் இறைவனைத் துதிப்போம்.*


*இல.32, திருமகள் வீதி, அரியாலை.*

*என்றும் உங்கள் நீங்கா நினைவுடன் வாடும்:*
**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

## ஓராண்டு நினைவுத் துளிகள்

## அமரர் வைரவி இராமு

திதி: 28.04.2009 (சதுர்த்தி)



மண்ணில் 15.12.1918

மனதில் 08.05.2008

எல்லோரும் போற்ற ஏற்றமுடன்
வாழ்ந்தவரே!
எல்லாச் செல்வமும் பெற்று நாம் வாழ
என்றும் உழைத்தவரே!
எங்களைக் கண்போல் காத்த எங்கள்
ஐயாவே!
கிராம சபை உறுப்பினராய் சமூகத்திற்காய்
பாடுபட்டீர்கள்
கல்விக் கூடம் அமைத்து கல்வி ஓங்க
வைத்தீர்கள்
எங்கள் வாழ்வின் ஒளி விளக்காய்
திகழ்ந்தவரே!
எங்களை விட்டு எங்கையா சென்றீர்கள்
ஏக்கத்தோடு உங்கள் ஆத்ம சாந்திக்காய்
வேண்டுகின்றோம்.

*விக்னேஸ்வரா வீதி, சங்கானை.*


**குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் தருமலிங்கம் சிவநேசன் (குட்டி)

ஆண்டவன் படைப்பு 08.01.1975

அநியாய அழிப்பு 28.04.2008



என் அன்புத் தெய்வமே!
தாங்கள் பூவுடல் மறைந்து அகவை ஒன்று ஆயிடினும்
என் நெஞ்சக் கனல் இன்னும் சுவாலை விட்டெரிகிறது
அனலிடை மெழுகாகி நான் உருகித் துடிக்கின்றேன்
தாங்கள் குருதி சொரிந்த புழுதி மண்ணில்
இன்று அறுகு பெருகி நிற்குது – அஃதே
தாங்கள் மனிதன் அல்ல புனிதன் என்று
அவனி எங்கும் கூறிவிட்டது
ஐயா! தங்களை இழந்தேன் என்பதனால்
பூ இழந்தேன், பொட்டு இழந்தேன், பட்டும் இழந்தேன்
புகுந்த வீட்டையும் இழந்தேன்,
பிறந்த ஊரையும் இழந்தேன்
அனைத்தையும் இழந்த எனக்கு காப்புறுதி
செய்து கௌரவமாய் வாழ வைத்தீர்கள்
உற்றவரும் உடன்பிறப்பும் உறுதுணையாய்
கொண்டு உத்தமியாய் உலகினில் வாழ்ந்திடுவேன்
காலங்கள் மாறும் காட்சிகள் மாறும்
என் கவலைகள் என்றும் மாறாது
நான் சிந்தும் ஒவ்வொரு துளி கண்ணீருக்கும்
ஆண்டவன் பதில் சொல்லுவான் – தங்கள்
ஆத்மசாந்திக்காய் இந்நாளில் பிரார்த்திக்கும்.

*தங்கள் அன்பு மனைவி*
**சி.மதனிகா.**

(சி/558221)

அன்பு மகனே குட்டி!
குட்டி என்ற குரலுக்கு என் முன்னே நிற்பாயடா!
இன்று கூப்பிட்ட குரலுக்கு ஆளின்றித் தனியே
தவிக்கிறேனடா!
இந்த தள்ளாத வயதிலும் உன் நிழலே
துணையாக வாழ்கிறேனடா!
கனவுகள் நனவாகும் என்பர் – என்
நனவுகள் கனவாகிப் போனதடா!
நின் பெயர் சொல்ல ஒரு பிள்ளை
இருந்தால் எனக்கு இக்கதி நேராதடா!
எல்லாம் இழந்து நிர்க்கதியாய்
நிற்கிறேன் அன்பு மகனே!
தந்தையும் தனயனுமாய் நாம் என்றும்
வாழ்ந்ததில்லை நல்ல தோழர்களாகவே
கூடி வாழ்ந்திருந்த வேளையில்
கடிதென வந்த காலன் இரக்கமின்றி
உன் உயிர் கவர்ந்த மாயமென்ன?
ஆண்டு ஒன்றாயிடினும் அகலவில்லை
என் சோகம் மீதி நாளும் கூட
வருமே இத்துன்பம் மௌனமாய்
அழுது மாய்கின்றேன் ஐயா!
*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*நின் பிரிவால் துயருறும்:*
**அன்புத் தந்தை க.தருமலிங்கம்.**
**உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தவர்களின் சடலங்களை பாதுகாப்பதில் வவுனியா வைத்தியசாலையில் சிக்கல் நிலை!

வவுனியா,எப்.28

வவுனியா வைத்தியசாலைக்குத் தொடர்ச்சியாக இறந்தவர்களின் சடலங்கள் வந்து கொண்டிருக்கின்றன என்றும், அங்கு நிலவுகின்ற இடப்பற்றாக்குறை காரணமாகச் சடலங்களை உறவினர்கள் அடையாளம் கண்டு, அவற்றைப் பொறுப்பேற்பதற்காக வரும் வரையில் வைத்துப் பராமரிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டு கின்றது.

இடம்பெயர்ந்து வருபவர்களுடன் கொண்டுவரப்படுகின்ற சடலங்கள், இவ்வாறு வரும்போது காயமடைந்து சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழப்போர், ஓமந்தைப் பகுதிக்கு வந்துள்ள மக்கள் மத்தியில் பல்வேறு காரணங்களினால் உயிரிழப்பவர்கள், இடைத்தங்கல் நிவாரண முகாம்களில் வயோதிபம் மற் றும் சுகவீனம் காரணமாக உயிரிழக்கின்றவர்கள் போன்றோரின் சடலங்களே வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்படுகின்றன.

தற்போது 30 சடலங்கள் வரையில் இவ்வாறு உறவினர்களின் வருகைக்காக வைக்கப்பட்டிருக்கின்றன என்றும், கடந்த வியாழக்கிழமை இரண்டாவது தொகுதியாக 28 சடலங்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய, இவை அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா சவச்சாலையில் இடப்பற்றாக்குறை நிலவுவதுடன், அங்கு ஒரேயொரு குளிரூட்டியே செயற்படுகிறது என்றும் மாதக்கணக்கில் பழுதடைந்திருந்த மற்றுமொரு குளிரூட்டி திருத்தப்பட்டுள்ள போதிலும் அதில் உள்ள இடவசதிக்கு ஏற்ற அளவில் சடலங்களை வைக்க முடியாதிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதனால் பல தினங்கள் சவச்சாலையில் வைக்கப்பட்டிருக்கின்ற சடலங்கள் மிகவும் பழுதடைந்து அந்தப் பகுதி முழுதும் துர்நாற்றம் வீசுகிறது. இந்த நிலைமை பொது சுகாதாரத்திற்கும், வைத்தியசாலையின் பொதுவான சுகாதாரச் சூழலுக்கும் கேடு விளைவிக்கின்றது என்றும் பொது மக்கள் பலர் தெரிவிக்கின்றார்கள்.

இதேவேளை, அதிகரித்துள்ள சவச்சாலைப் பாவனையையடுத்து, அதனை விஸ்தரித்து கட்டுவதற்கான கட்டட நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (50)

# பிரிட்டனில் உண்ணாவிரதமிருக்கும் பரமேஸ்வரனின் நிலைமை மோசம்!

லண்டன், ஏப். 28

வன்னியில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து லண்டனில் 20ஆவது நாளாக உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்டு வரும் பரமேஸ்வரன் தொடர்ந்து மேலும் ஒரு வார காலம் மேற்கொண்டால் அவர் உயிரிழக்கும் அபாயத்தை எதிர்நோக்க வேண்டி வரும் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறிதளவு தண்ணீர் உட்கொள்வதால் தான் அவர் இன்னும் உயிர் வாழ்கிறார் எனவும் வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்து அவர் உண்ணாவிரதத்தை மேற்கொண்டால் அவரின் முக்கிய உடற்பாகங்கள் செயலிழக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் உள்ளன என வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தனது கோரிக்கைகள் நிறைவேறும் வரை தான் தொடர்ந்து உண்ணாவிரதம் மேற் கொள்வார் என பரமேஸ்வரன் கூறியுள்ளார். (அ-சி)

# முல்லைத்தீவிலிருந்து இடம்பெயர்ந்தோரை புல்மோட்டையிலும் தங்க வைக்க ஏற்பாடு

புல்மோட்டை,ஏப்.28

முல்லைத்தீவு பாதுகாப்பு வலையத்திலிருந்து புல்மோட்டைக்கு வந்து சிங்கள மகாவித்தியாலயம், முஸ்லிம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ள 1900 பேரையும் மேலும் அங்கிருந்து வருகை தரவுள்ள மக்களையும் புல்மோட்டையில் தங்க வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு வலயத்திலிருந்து சென்று மன்னார்,வவுனியா மாவட்டங்களில் தங்கியுள்ள ஒரு தொகுதி மக்களும் புல்மோட்டைக்கு அழைத்துவந்து தங்கவைக்கப்படவுள்ளனர். இதற்கென 100 ஏக்கர் காணியொன்று ஒதுக்கப்பட்டு சுத்தம்செய்யப்பட்டு வருவதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-06)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.28

அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் 9 ஆம் திகதி பூங்காவனமும் நடைபெறவுள்ளன. (203)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.28

நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி முற்பகல் 9 மணியளவில் தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (50-9)

* * *

சங்கத்தானை இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (50-9)

* * *

கல்வியங்காடு வீரபத்திரர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை காலை 9 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (50-9)

* * *

புலோலி தென்மேற்கு இப்பில் எல்லை வீரபத்திரர் ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 6.31 மணியளவில் நடைபெறவுள்ளது. (50-9-236)

* * *

உடுவில் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் சுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (50-9)

* * *

சிறுவிளான் இளவாலை வல்லவாம்பிகா சமேத மூஷிக விநாயகர் ஆலய புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 6 மணியளவில் அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். தொடர்ந்து 12 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. (50-09-86)


# சங்கக் கிளை புனரமைப்பு

சுழிபுரம்,ஏப்.28

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பண்ணாகம் பகுதியில் உள்ள கிளை 5 இன் கட்டடம் திருத்தப்பட்டு சுவர்களுக்கு வர்ணம் பூசும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த வருடம் 'நிஷா' புயல் காற்றினால் அரச மரம் வேரோடு சாய்ந்ததனால் கட்டடம் முற்றாக சேதமடைந்திருந்தது. திருத்த வேலைகள் இன்னும் சில நாள்களில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (28)

# வங்கிகள், காப்புறுதி நிறுவனங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளில்....



மக்கள் வங்கி சுன்னாகம் கிளையின் 'சிசு உதான' அலகு திறப்பு விழா அண்மையில் ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் த.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர், சு.ஹென்றி, பிரதி முகாமையாளர் சு.இராசமனோகரன், சிசு உதான பொறுப்பு உத்தியோகத்தர் க.ஜெகதீஸ்வரன் ஆகியோரை அதிபர், மாணவர்கள், அழைத்துச் செல்வதைப் படத்தில் காணலாம்.



'செலிங்கோ' ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் வாடிக்கையாளரான கனகரட்ணம் கஜேந்திரன் என்பவரது மரணத்தினை அடுத்து ''செலிங்கோ பிரதீபா'' இழப்பீட்டுத் தொகையான இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான காசோலையினை நெல்லியடிக் கிளையின் முகாமையாளரான து.நிரோஜன் இழந்தவரது குடும்பத்தவர்களான மகள் கஜானா, மகன் சிந்துஜன், மனைவி கஜேந்திரன் கமலேஸ்வரி ஆகியோரிடம் கையளிப்பதனையும்-

அருகில் விற்பனை நிறைவேற்றுனரான சி.ராஜ்குமார் மற்றும் விற்பனை ஆலோசகரான க.ஜெயவாணி ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.




கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரிக் கிளையின் 3 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் மீசாலை வீரசிங்கம் அதிபர் கே.சிவானந்தம் உரையாற்றுவதையும் கிளை முகாமையாளர் எஸ்.பி.குருபாதம், மட்டுவில் கமலாசினி வித்தியாலய அதிபர் எஸ்.பேரின்பநாதன் மற்றும் வங்கி உத்தியோகத்தர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (50-59)



இலங்கை வங்கியின் வல்வெட்டித்துறை விரிவாக்கற் கிளையின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளரின் பாரியார் திருமதி [illegible]ணம் நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு மரம் நடுகை விழா இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் சங்கத்தின் முன்னாள் தலைவர் த.சிவலிங்கம் மரம் ஒன்றினை நடுவதையும் கிராம உத்தியோகத்தர் எஸ்.அருள்ராஜ் சங்கத் தலைவர் அ.சரவணபவன் மற்றும் பணியாளர்கள் நிற்பதையும் முன்பள்ளி ஆசிரியர் ஒருவருக்கு சங்கத்தின் பொதுமுகாமையாளர் க.சற்குணலிங்கம் மரக்கன்று வழங்குவதையும் படங்களில் காணலாம். (9)

## கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி முதலாம் திகதியே ஆரம்பம்

யாழ்.மாவட்ட விளையாட்டுப் பிரிவு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே நடைபெறும் ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் எதிர்வரும் முதலாம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

தெல்லிப்பழை எதிர் நெடுந்தீவு; சங்கானை எதிர் யாழ்ப்பாணம், சாவகச்சேரி எதிர் உடுவில், மருதங்கேணி எதிர் பருத்தித்துறை, கரவெட்டி எதிர் நல்லூர், காரைநகர் எதிர் வேலணை, சண்டிலிப்பாய் எதிர் ஊர்காவற்றுறை, கோப்பாய் பிரதேச செயலகம் இரண்டாம் சுற்றில் இருந்து விளையாடும். (50-86)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் ஆசிரியர்
திரு.லோகேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை
**திரு.செ.அருணாசலம் செல்லத்துரை**
அவர்கள் 12.04.2009 அன்று சிவபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (84737)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள். யா/சென்மேரிஸ் வித்தியாலயம் (O.L.R)

## துயர் பகிர்கின்றோம்



எமது சக ஆசிரிய மாணவர்களாகிய திரு.ம. முகுந்தன் அவர்களின் அன்புத் தந்தையும், திருமதி அருந்ததி முகுந்தன் அவர்களின் பாசமிகு மாமனுமான வட்டுக்கோட்டை வடக்கு, சித்தங்கேணியைச் சேர்ந்த
**அமரர் பொன்னுத்துரை மகாதேவன்**
அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு அவர்களின் துயரிலும் பங்குகொள்கின்றோம்.

யாழ்ப்பாணக் கல்வியியல் கல்லூரி. (84739)
கல்விமாணிக் கற்கைநெறி ஆசிரிய மாணவர்கள், 2ஆம் வருடம் (2007/2010)

## நெல்லியடி ம.ம.வி. மாலை நேரப் பாடசாலை நேற்று ஆரம்பமாகியது

கரவெட்டி,ஏப்.28

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டு, இடைத்தங்கல் முகாமாக மாற்றப்பட்டுள்ளதால், அப்பாடசாலை மாலை நேரப் பாடசாலையாக அருகில் உள்ள மற்றொரு பாடசாலையில் நேற்றுத் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் மாத்திரமே வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை தங்க வைக்கும் இடைத்தங்கல் முகாமாக மாற்றப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இவ் வித்தியாலயத்தின் கல்விச் செயற்பாடுகள் யாவும் தினமும் முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை மாலை நேரப்பாடசாலையாக அருகில் உள்ள வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இயங்கி வருகிறது.

இதனால் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் செயற்பாடுகள் யாவும் காலை 7 மணிமுதல் பகல் 11 மணிவரை நடைபெற்று வருகிறது. (203-70-236)

## எயிட்ஸ் தினப் போட்டியில் தீவக வலயத்தில் 11 மாணவர்கள் தெரிவு

வேலணை, ஏப்.28

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட சர்வதேச எயிட்ஸ் தினப் போட்டிகளில் தீவக வலயத்தில் இருந்து 11 மாணவர்கள் தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரம்:

**கட்டுரைப் போட்டி**

கிறேஸ் லொயலா-நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி, சிந்துஜா கனகரட்னம் -கலாநிதி ஆ.தியாகராசா.ம.ம.வி, சண்முகலிங்கம் மோகனப் பிரியா-நயினாதீவு ம.வி

**கவிதைப் போட்டி**

றொமன்சா அன்ரன்- வேலணை மத்திய கல்லூரி , சிந்துஜா இராசநாயகம்-வேலணை மத்திய கல்லூரி.

**சித்திரப் போட்டி**

யாழினி கிருஸ்ணகுமார்- வேலணை மத்திய கல்லூரி, குயேந்தினி குகதாசன்-வேலணை மத்திய கல்லூரி, சிவகுமரன் திலக்ஷன் -வேலணை மத்திய கல்லூரி, நீக்கிளாஸ் நந்தகுமார்-வேலணை மத்திய கல்லூரி,செல்வரத்தினம் ஐங்கரன்- கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, உ.தனேஸ்வரன் - யாழ்ரன் கல்லூரி. (203-267)

## வடமராட்சி வலய உடற்பயிற்சிப் போட்டி

கரவெட்டி,ஏப்.28

வடமராட்சி வலய மட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறும்.

வடமராட்சி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் தலைமையில் நடைபெறும் மேற்படி போட்டியில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொள்வார்.

போட்டிகளில் பங்கேற்கும் பாடசாலை மாணவர்கள் உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50-70)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 ★ 03 ★ 1931 | 30 ★ 03 ★ 2009 |



**திருமதி சின்னம்மா தங்கராசா**
(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை)

கடந்த 30.03.2009 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பவிளக்கு திருமதி சின்னம்மா தங்கராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (29.04.2009) புதன்கிழமை காலை 6 மணியளவில் புலோலி மேற்கு திருநாவலூர் தெணியம்மன் ஆலய மடத்தில் நடைபெறவுள்ளன. அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள சபிண்டீகரண நிகழ் விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோயில் ஒழுங்கை, பருத்தித்துறை (சி/558213) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிவபாதம் சுகந்தன்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சிவபாதம் சுகந்தன் (23.04.2009) வியாழக்கிழமை கனடாவில் சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் சிவபாதம் - ஞானகலை தம்பதியரின் மூத்த மகனும் கேகஜன், உஷாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், சிவசம்பு மற்றும் அருமைநாயகி, பூபதி மாணிக்கம், விசாலாட்சி ஆகியோரின் பேரனும் சந்திரலிங்கம், நாகேஸ்வரி, கெங்கேஸ்வரன் (புதைபொருள் ஆராய்ச்சி நிலையம், உடுவில்), கிருஷ்ணவேணி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மருமகனும் நடராசா, இருதயரஞ்சினி, நடராசா, பரமேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் சுதர்சன் (டயலொக்), சுஜீவன் (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் கஜேந்திரன் (இடைக்காடு மகா வித்தியாலயம்), Dr.அசோக்குமார், பிரதீபா, திவ்வியா (கல்வியியல் கல்லூரி, கோப்பாய்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (27.04.2009) திங்கட்கிழமை கனடாவில் நடைபெற்றன.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பக்கஸ்லேன் உடுவில் றோட், மானிப்பாய்.
தகவல்: C.நாகேஸ்வரி - 060 221 66[illegible] (84733)

மேற்குறிப்பிட்ட துக்க அனுஷ்டிப்பு பக்கஸ்லேன் உடுவில் றோட் மானிப்பாயில் உள்ள ச.நாகேஸ்வரியின் இல்லத்தில் நடைபெற்றது.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 ★ 10 ★ 1962 | 17 ★ 03 ★ 2009 |



**அமரர் கந்தசாமி ஸ்ரீதரர் (கண்ணன்)**

கடந்த 17.03.2009 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தசாமி ஸ்ரீதரர் (கண்ணன்) அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை மறுதினம் (30.04.2009) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

1A, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி/558224) குடும்பத்தினர்.

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் ஒளிவீச | விண்ணில் பிரகாசிக்க |
|---|---|
| 18 ★ 11 ★ 1936 | 05 ★ 05 ★ 2003 |



சிவத்தமிழ்மணி
**அமரர் மாப்பாணர் துரைராசா**
(முன்னாள் பிரதம எழுதுவினைஞர், நகரசபை, சாவகச்சேரி, செயலாளர், நகரசபை, கிண்ணியா)

அன்பால் அரவணைத்து அறிவூட்டி எமது உயர்வுக்காய்
அத்தனையும் ஈந்து உயிராகி உறவாகி நின்றவரே!
என்றும் நீங்காத நினைவுகளில்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்....

மீசாலை மேற்கு, மீசாலை. (84731)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**சிவபாக்கியம் சிவபாதராசா**
(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்)

மண்ணில்:15 ★ 08 ★ 1936
விண்ணில்:29 ★ 03 ★ 2009

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த எங்கள் தெய்வமே!
எங்களை விட்டு விண்ணுலகு சென்று திங்களொன்று
கடந்த பின்பும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு நீங்காது
உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.04.2009) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணியளவில் அன்னாரின் 'ராஜபாக்கியம்' இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து மு.ப. 11 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(தயவுசெய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

"ராஜபாக்கியம்", தம்பி வளவு, அல்வாய் கிழக்கு, அல்வாய். (சி/55607)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாக். நகரங்களைத் தாக்குவதற்கென 300 தலிபான் தீவிரவாதிகள் ஊடுருவல்!

## உளவுத்துறை தகவல்

இஸ்லாமாபாத், ஏப். 28

பாகிஸ்தான் நகரங்களைத் தாக்குவதற்காக தலிபான் தலைவர் பைத்துல்லா மசூத், 300 தீவிரவாதிகளை அனுப்பி வைத்துள்ளார் என பாகிஸ்தான் உளவுத் துறை தெரிவித்துள்ளது.

''இத்தீவிரவாதிகளுடன் 5 தளபதிகளும் அனுப்பப்பட்டுள்ளார்கள். இவர்கள் தலைநகரான இஸ்லாமாபாத், ராவல் பிண்டி, லாகூர் ஆகியவை உட்பட பாகிஸ்தான் நகரங்கள் மீது தாக்குதல்கள் நடத்தக்கூடும்'' என்றும் அது எச்சரிக்கை விடுத்துள்ளது.

''இந்த 300 தீவிரவாதிகளில் தற்கொலைத் தீவிரவாதிகளும் உள்ளார்கள். இவர்கள் மேற்கொள்ளும் தற்கொலைத் தாக்குதல்களை மசூத்தின் 5 தளபதிகளும் பார்வையிடுவார்கள். இது தொடர்பான இரகசியத் தகவல்களும் வெளியாகியுள்ளன'' என்றும் உளவுத்துறை சுட்டிக் காட்டியுள்ளது.

''தீவிரவாதிகளோடு ஷிகாரி, இனாயத்துல்லா, வாலித், முஜாஹித், அப்தலி என்னும் 5 தளபதிகளே அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்'' என்றும் பாகிஸ்தான் உளவுத்துறை மேலும் குறிப்பிட்டுள்ளது.

''அதேவேளை, வடக்கு வசீரிஸ்தானிலிருந்து வெடிகுண்டுகள் ஏற்றப்பட்ட டொயோட்டா காரில், கடந்த 11 ஆம் திகதி தலைநகரான இஸ்லாமாபாத்தை நோக்கி தீவிரவாதிகளில் பலர் புறப்பட்டுள்ளனர். அக்காரின் பதிவு எண் ஐ.டி. ஜி. 8720 ஆகும்'' என்றும் உளவுத்துறை தெரிவித்துள்ளது.

''தீவிரவாதிகள் இஸ்லாமாபாத்தை அடைந்து விட்டார்களா? அல்லது தம் திட்டத்தை ஒத்திவைத்துவிட்டார்களா? என்பது தெரியவில்லை. எது எப்படியிருப்பினும், தீவிரவாதிகளின் நடமாட்டங்கள் கண்காணிக்கப்படுகின்றன. அவர்களின் தாக்குதல்களை முறியடிக்க இராணுவமும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது'' என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

# ஈராக் தலைநகரில் கைதானவர் அல் - குவைதா தலைவர்களில் ஒருவர்




பக்தாத், ஏப். 28

ஈராக்கின் தலைநகரான பக்தாத்தில் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட அபு ஒமார் அல்-பஹ்தாதி, அல்-குவைதாவின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவர் என ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளார்.

''இவர் நீண்டகாலமாக தேடப்பட்டு வந்தவர். ஈராக்கிய பாதுகாப்புப் படையினர் இவரது நடமாட்டங்களை உன்னிப்பாகக் கண்காணித்து வந்துள்ளனர். இறுதியில் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளார்'' என ஈராக்கிய பிரதமர் நூரி மாலிகி தெரிவித்தார்.

''ஈராக்கிய பாதுகாப்புப் படையினர் கடந்த இரு மாதங்களாக இவரது போக்குவரத்துகள், நடவடிக்கைகள், தொலைபேசி உரையாடல்கள் ஆகியவற்றை கண்காணித்து வந்துள்ளனர்'' என்றும் மாலிகி பி.பி.ஸி.செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

''அபு-ஒமார் அல்-பஹ்தாதி 'ஈராக்கிய இஸ்லாமிய தேசம்' என்னும் ஓர் அமைப்பின் தலைவராவார். இது அல்-குவைதாவின்கீழ் இயங்கும் ஒரு பிரிவு ஆகும். இது சுனி முஸ்லிம் தீவிரவாதக் கிளர்ச்சிக் குழுக்களில் ஒன்று'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

அபு-ஓமாருடன் முன்னர் பணியாற்றிய ஊழியர்களால் இவர் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். இவர்களில் பலர் ஒமாரின் 'ஈராக்கிய இஸ்லாமிய தேச' அமைப்பின் அங்குரார்பண நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களாவர்.

# ஸ்வாட் பகுதியிலுள்ள தலிபான்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப் பேச்சு

இஸ்லாமாபாத், ஏப். 28

பாகிஸ்தானின் ஸ்வாட் பகுதியிலுள்ள தலிபான் தீவிரவாதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பாக, பாகிஸ்தான் அதிகாரிகளும், மதத் தீவிரவாதக் குழுக்களின் தலைவர்களும் கலந்தாலோசனை நடத்தி வருகிறார்கள்.

அதேவேளை, தலிபான் தீவிரவாதிகள் தங்கள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும். அப்படியானால்தான் உத்தேச மன்னிப்பு வழங்கல் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

ஸ்வாட் பகுதியிலுள்ள தலிபான் தீவிரவாதிகளுக்கும், அரசுக்குமிடையே சமீபத்தில் அமைதி ஒப்பந்தம் ஏற்படுவதற்கு, தெக்ரிக் இ நிபாஸ் இ ஷரியா முஹம்மதி என்ற மதத் தீவிரவாதக் குழுதான் காரணமாக இருந்தது. இக்குழுவுடனும் தற்போது,பாகிஸ்தான் அதிகாரிகள் பேச்சுகள் நடத்தி வருகிறார்கள்.

# பன்றிக் காய்ச்சல் நோய்க் கிருமி பரவுவதைத் தடுக்க நடவடிக்கை



வாஷிங்ரன், ஏப். 28

பன்றிக் காய்ச்சல் என்னும் நோயை உருவாக்கும் புதுவகை வைரஸ் கிருமி பரவுவதைத் தடுக்க பரவலாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உலகம் முழுவதிலுமுள்ள சுகாதார, உடல்நலத் துறை அதிகாரிகள் இது விடயத்தில் கூடிய அக் கறை செலுத்த ஆரம்பித்து விட்டார்கள்.

ஆசிய நாடுகளிலும், லத்தீன் அமெரிக்க நாடுகளிலுமுள்ள பல விமான நிலையங்களில் இக்கிருமிக்கான சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விமான நிலையங்களில் வந்திறங்கும் பயணிகள் தீவிர மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

அமெரிக்கா, மெக்சிக்கோ, கனடா ஆகிய நாடுகளில் ஏராளமானோர் இந்த புதுவகை வைரஸ் நோயால் பாதிக் கப்பட்டுள்ள னர். இது தாக்கியவர்களில் பலர் உயிரிழந்துள்ள னர். இதுவரை ஆயிரத்து 614 பேரை இந்த வைரஸ் தாக்கியுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 103 பேர் உயிர் இழந்துள்ளனர். இறந்தவர்களில் 100 பேர் மெக்சிக்கோவைச் சேர்ந்தவர்கள். இங்குதான் பாதிப்பு அதிகமாகவுள்ளது. இதற்கு ''சுவைன் ப்ளூ வைரஸ்'' என பெயரிட்டுள்ளனர். இந்த வைரஸ்ஸை கொல்ல உரிய மருந்து இல்லை. நோய் எதிர்ப்புச் சக்தி மருந்தையே இதற்கும் கொடுக்கின்றனர்.

ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர் களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மெக்சிக்கோவிலிருந்து ஜப் பான் உட்பட இதர நாடுகளுக்கு வரும் பயணிகளின் உடல் வெப்பநிலை, மருத்துவ அதிகாரிகளால் பரிசோதனைக்குட்படுத்தப்படுகிறது. அதேவேளை, இந்த புதுவித மான வைரஸ் தொடர்பாக உலக சுகாதார நிறுவனம், சர்வதேச ரீதியாக எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளது.

இந்தப் பன்றிக் காய்ச்சல் ஏற்கனவே அமெரிக்காவுக்குப் பரவியுள்ளது. அங்கு இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளோரில் 11 பேர் இந்த வைரஸ் தாக்குதலுக்கு இலக் காகியுள்ளமை பரிசோதனை வாயிலாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

மெக்சிக்கோவிலிருந்து அண்மையில் நியூஸிலாந்துக்குத் திரும்பிய 10 மாணவர்களும் தீவிர மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள். இவ்வைரஸினால் இவர்களில் எவராவது பீடிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது என நியூஸிலாந்து உடல் நலத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# பாக். படைகளுடன் தலிபான்கள் மோதல்; தீவிரவாதிகளின் தளபதி ஒருவர் பலி!

இஸ்லாமாபாத், ஏப். 28

பாகிஸ்தானின் வடமேற்குப் பிராந்தியத்தில் பாகிஸ்தான் பாதுகாப்புப் படைகளுக்கும், தலிபான் தீவிர வாதிகளுக்குமிடையே மூண்ட துப்பாக் கிச்சமரில் ஒரு தலிபான் தளபதி உட்பட அநேக தலிபான்கள் கொல்லப்பட்டார் கள் என இராணுவ வட்டாரம் தெரிவித்தது.

வட- மேற்கு முனை மாகாணமான கீழ் திர் மாவட்டத்தில் இத்துப்பாக்கிச் சமர் மூண்டது. படை வாகன அணி சென்று கொண்டிருந்தபோது தீவிரவாதிகள் அதனை நோக்கிச் சுட்டார்கள். இதையடுத்தே இரு சாராருக்குமிடையே சண்டை மூண்டது என்றும் அது குறிப் பிட்டது.

இதே பிராந்தியத்தில்தான் கடந்த சனிக்கிழமை குண்டு வெடிப்பில் 13 சிறார்கள் பலியாகியுள்ளார்கள். அநாதரவாகக் கிடந்த பொம்மையொன்றை எடுத்து சிறார்கள் விளையாடிக்கொண்டிருந்தபோது அது பயங்கரமாக வெடித்துச் சிதறியது. இதில் 4 வயது முதல் 12 வயதுக்குட்பட்ட 13 சிறார்கள் உயிரிழந்தார்கள்.

மறு தினமான ஞாயிற்றுக்கிழமை இதே பிராந்தியத்தில்தான் பாகிஸ்தான் பாதுகாப்புப் படைகளுக்கும் தலிபான் தீவிரவாதிகளுக்குமிடையே துப்பாக்கிச் சமர் மூண்டது. தலிபான்களின் கோட்டையாகத் திகழும் ஸ்வாட் பள்ளத்தாக்குக்கருகில் இப்பிராந்தியம் அமைந்துள்ளது.

உலக அரங்கில்

# பாகிஸ்தானில் தடைசெய்யப்பட்ட இயக்கங்கள் ஐக்கிய இராணுவம் என இயங்க தமக்குள் ஏற்பாடு

லாகூர், ஏப். 28

பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட தீவிரவாத இயக்கங்கள் ஒன்றாக இணைந்து முஸ்லிம் ஐக்கிய இராணுவம் என்ற பெயரில் இயங்கத் தமக்குள் ஏற்பாடு செய்துள்ளன. இவை தலிபான் தீவிரவாத இயக்கம் போல செயற்படத் தீர்மானித்துள்ளன.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் செயற்பட்டு வந்த லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ- முகமது, லஷ்கர்-இ-ஜங்வி ஆகியவை தடைசெய்யப்பட்ட இயக்கங்களாகும். இந்த 3 இயக்கங்களும் முஸ்லிம் ஐக்கிய இராணுவம் என்ற பெயரில் இணைந்துள்ளன.

இப்படி இணைந்ததன் மூலம் இக் கூட்டமைப்பு வலுப்பெற்றாகி விட்டது. இதனால் இது அரசுக்கு புதிய சவாலாக மாறியுள்ளது. இராணுவத்தை எதிர்கொள்வதற்காகவே இந்த 3 அமைப்புகளும் ஒன்றாக கைகோர்த்து உள்ளன என பொலிஸார் நம்புகின்றனர்.

லஷ்கர்-இ-ஜங்வி அமைப்பின் தலைவர்களான மாலிக் இஷாக், அக்ரம் லகோரி ஆகியோர் முறையே முல்தான், கராச்சி ஆகிய நகரங்களிலுள்ள சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் சிறையில் இருந்தவாறு தங்கள் இயக்கத்தை நடத்தி வருகிறார்கள். இதற்கு சிறை அதிகாரிகள் உதவியாக உள்ளார்கள் என கூறப்படுகிறது.

இவ்விருவர் மீதும் பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. எனினும், இவர்களுக்கு இன்னும் தண்டனை வழங்கப்படவில்லை. இவர்களுக்கு எதிராக சாட்சியமளிக்க மக்கள் பயப்படுகிறார்கள் என பொலிஸார் கூறுகிறார்கள்.

ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பின் தலைவர் மசூத் அசார் இந்தியாவால் தேடப்பட்டுவரும் 20 தீவிரவாத குற்றவாளிகளின் [illegible] விட்டார் என [illegible]

# சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள் வறிய நாடுகளில் பாதிக்கப்படக்கூடாது

## உலக வங்கித் தலைவர் கருத்து

வாஷிங்டன், ஏப். 28

''வறிய நாடுகளில் சமுதாய மேம்பாட்டுக்காக செலவிடப்படும் தொகைகளில் வெட்டு விழக்கூடாது. உலகளாவிய ரீதியில் ஏற் பட்டுள்ள பொருளாதார நெருக்கடி களால், இந்நாடுகளின் சமுதாய மேம்பாட்டுத்திட்டங்கள் பாதிப்புக்கு இலக் காகிவிடக்கூடாது''.

- இவ்வாறு உலக வங்கியின் தலைவர் ரொபர்ட் சோலிக், வாஷிங்டனில் நடைபெற்ற நிதி மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர்களின் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

''[illegible] நாடுகளில் ஏற்பட்டுள்ள [illegible]தார நெருக்கடிகள் குறித்து கூடிய கவனம் செலுத்தப்படுகிறது. அதே வேளை, வறிய நாடுகளைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். அவற்றின் மீட்சிக்கான ஆக்கபூர்வமான திட்டங்கள், பணிகள் ஆகியவற்றிலும் கூடிய அக்கறை செலுத்த வேண்டும்'' என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

லத்தீன் அமெரிக்க நாடுகளிலும், ஆசிய நாடுகளிலும் முன்னரும் மோசமான பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. அச்சமயங்களில் சுகாதாரம், கல்வி, உணவு ஆகியவற்றிற்குச் செலவிடப்படவேண்டிய தொகைகள் பெரிதும் குறைக்கப்பட்டுள்ளன. இந்தத் தவறு மேலும் இடம்பெற்றுவிடக்கூடாது'' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வலியுறுத்துகிறது பா.ஜ.க.!

பெங்களூர், ஏப். 28

**அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுக்கப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற இந்தியாவின் யோசனையை ஏற்க மறுத்து வரும் இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் - என்று பா.ஜ.கவின் மூத்த தலைவர்களில் ஒருவரான யஷ்வந்த் சின்கா வலியுறுத்தியுள்ளார்.**

பெங்களூரில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இதனைக் கூறினார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் டில்லி வந்தபோது, நாங்கள் அவரிடம் அங்கு நடைபெற்று வரும் போரை தவிர்க்க வேண்டும் என்று கூறினோம். அங்கு பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என்று கேட்டோம்.

ஆனால், அங்கு தமிழர் பிரச்சினைக்கு இராணுவம் மூலம்தான் தீர்வு காண்போம் என்று ராஜபக்ஷ கூறினார். இந்தப் போரினால் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். அங்கு போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும், அமைதி பேச்சு நடத்த வேண்டும் என்றும் இந்தியா தொடர்ந்து கூறி வருகிறது. போரை நிறுத்துமாறு உலக நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன.

சமீபத்தில் பிரதமரின் தூதர்கள் இலங்கைக்குச் சென்று போரை நிறுத்துமாறு கூறினர்.

ஆனாலும், அங்கு தொடர்ந்து இலங்கை அரசு போரை நடத்தி வருகிறது. இதனால், இந்தியாவின் பேச்சை இலங்கை அரசு ஏற்க மறுக்கிறது. அடுத்த நாடுகளின் பிரச்சினையில் மற்ற நாடுகள் தலையிடுவதற்கு உள்ள அதிகாரம் வரையறுக்கப்பட்டவை என்றாலும், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தியாவின் கருத்தைக் கேட்க மறுப்பதால், கடும் கண்டனத்தை தெரிவிக்கும் வகையில் இலங்கை மீது பொருளாதார தடையோ அல்லது வேறு மாதிரியான தடையோ விதிக்க வேண்டும். இலங்கையில் இருக்கும் இந்தியத் தூதரை வாபஸ் பெறவேண்டும்.

இலங்கையில் விடுதலைப் புலிகளையோ அல்லது தலைமறைவுக் குற்றவாளியாக இருக்கும் பிரபாகரனையோ நாங்கள் ஏற்கவில்லை. அதே போன்று, அங்கு தனி ஈழத்தை அமைக்க வேண்டும் என்றும் நாங்கள் கூறவில்லை. அதே சமயம், ஒருங்கிணைந்த இலங்கையில் தமிழர்கள் சுதந்திரமாகவும், முழு உரிமையுடனும் வசிக்க வழிவகை செய்ய வேண்டும் என்பதுதான் எங்களின் கோரிக்கை.

உலக நாடுகளின் உதவியுடன் இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் அமைதி பேச்சு நடத்த வேண்டும். ஆனால், விடுதலைப் புலிகள் தீவிரவாத அமைப்பாக உள்ளதால் அதில் இந்தியா பங்கேற்கக் கூடாது.

இலங்கையில் நிலவும் பிரச்சினையையும், ஜம்மு காஷ்மீர் பிரச்சினையையும் ஒன்றாகக் கருத முடியாது - என்றார்.

# 'என்னைக் கொல்லச் சதிவலை' ஜெயலலிதா கூறுகிறார்



தருமபுரி, ஏப். 28

தேர்தல் பயணத்தின் போது தம்மைக் கொலை செய்ய தீவிரவாதிகள் திட்டமிட்டிருக்கின்றனர் என உளவுத் துறை மூலம் தகவல் வந்துள்ளது - என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

தருமபுரி, கிருஷ்ணகிரியில் ஞாயிற்றுக் கிழமை நடந்த தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டங்களில் அவர் பேசியபோதே இதைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

வெயிலில் மக்களை சிரமப்படுத்தியதற்கு வருந்துகிறேன். சிரமப்படுத்த வேண்டும் என நான் விரும்பவில்லை. உங்கள் இடத்துக்கே வந்து சந்திக்கவே விரும்புகிறேன். ஆனால், இப்போது, இந்தத் தேர்தல் பிரசாரப் பயணத்தில் என் உயிருக்கு ஆபத்து இருக்கிறது எனவும், பயங்கரவாத அமைப்புகள் என்னைக் குறிவைத்துள்ளன எனவும் மத்திய அரசின் உள்துறை மூலமாக அதிகாரபூர்வமாகவே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் பயணத்தின்போதே, என்னை எப்படியும் தீர்த்துக் கட்டிவிட வேண்டும் என்று சில தீவிரவாத சக்திகள் திட்டமிட்டிருக்கின்றன என உளவுத் துறை மூலம் தகவல் கிடைத்திருக்கிறது என்று மத்திய அரசே எனக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

எனவே, உச்சகட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யுமாறும், மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

என் மீது தாக்குதல் நடத்தப்படுவது பற்றி ஒருபோதும் கவலைப்பட்டதில்லை. இருப்பது ஒரு உயிர். அது போவதும் ஒரு முறை. மக்களோடு நான் இருக்கையில் உயிர் போவதில், எனக்கு மகிழ்ச்சிதான். ஆனால், அத்தகைய ஒரு தாக்குதல் தீவிரவாதிகளால் என் மீது நடத்தப்பட்டால், என்னோடு சேர்ந்து எண்ணற்ற அப்பாவிப் பொதுமக்களும் பலியாக நேரிடுமே என்ற கவலையில்தான் இப்படி நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது - என்றார்.

# சென்னையில் தேர்தல் பிரசாரச் சி.டிக்கள்; இலங்கைத் தமிழர் உட்பட 6 பேர் கைது

சென்னை, ஏப். 28

சென்னையில் தேர்தல் ஆணையத்தின் அனுமதி பெறாமல், சட்டவிரோதமாக கணனி மூலம் பிரசார சி.டி. தயாரித்த இலங்கைத் தமிழர்கள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

கோபி செட்டிபாளையம், ஈரோடு ஆகிய பகுதிகளில் பொலிஸார் நடத்திய அதிரடி சோதனையின்போது, பெரியார் திராவிடர் கழகக் கட்சிப் பிரமுகர்கள் 2 பேரை பொலிஸார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து சட்ட விரோதமாகத் தயாரிக்கப்பட்ட தேர்தல் பிரசார சி.டிகளும் கைப்பற்றப்பட்டன.

இதுபோன்ற சி.டி.களை பதுக்கி வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் சென்னை உட்பட தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. அப்போது இதுபோன்ற சட்டவிரோதப் பிரசார சி.டிகளை சென்னை கே.கே. நகரில் உள்ள ஒரு கும்பல் கணனி மூலம் தயாரிக்கிறது என பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதைத்தொடர்ந்து, பொலிஸார் நடத்திய சோதனையில் ஏராளமான சட்டவிரோத சி.டிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்தப் பிரசார சி.டிகளை பொலிஸார் போட்டு பார்த்தனர். அதில், மத்திய-மாநில அரசுகளுக்கு எதிராக காட்சிகள் இடம் பெற்றிருந்தன. இயக்குநர் சீமானை கைது செய்தமை தவறு என்பது போல் காட்சிகளும் காட்டப்பட்டிருந்தன.

மனோகரா படத்தில் சிவாஜியை சங்கிலியால் இழுத்து வரும் காட்சி, இயக்குநர் சீமானை சங்கிலியால் கட்டி இழுத்து வருவது போல் மாற்றியமைக்கப்பட்டிருந்தது.

ஈழத்தமிழர்களின் விடுதலை போராட்டமும் - துரோக வரலாறும், யாருக்கு வாக்களிப்போம், தமிழினத் துரோகிகள், புதிய பராசக்தி, சீமான் மனோகரா, மீண்டும் கண்ணகி போன்ற தலைப்புகளில் 6 வகையான சி.டிகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

இதையடுத்து கன்னித்தமிழ் கணனி நிறுவனத்தின் நிறுவுநர் கபிலன் (வயது - 45), இயக்குநர் கமலதாசன் (38) மற்றும் சுரேஷ் பாபுகுமார் (36), சரவணசுந்தர் (42), பாலசுந்தரம் (27), திவாகரன் (30) ஆகிய 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைதான 6 பேரும் மீதும் 6 சட்டபிரிவுகளின் கீழ் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். நேற்றுமுன்தினம் காலை இவர்கள் 6 பேரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்றக் காவலில் புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

# இலங்கைக்குத் தூதுவர்கள் சென்று வந்தமை அரசின் வெறும் தேர்தல் நாடகம் - ராமதாஸ்

சென்னை, ஏப். 28

இந்தியப் விசேட தூதுவர்கள் இலங்கை சென்று வந்தமை தேர்தல் நாடகம் - என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் இதுவரை 2 லட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு மட்டும் கடந்த 3 மாதங்களில் 4,500 தமிழர்கள் கொல்லப்பட்[illegible]ளனர் என்று ஐ.நா. அதிகாரப்பூர்வமாக வெ[illegible]ட்டுள்ளது. உலகில் வேறு எங்கும் இ[illegible] உயிரிழப்பு நடந்ததில்லை. எந்த இன[illegible]தப் பேரழிவை சந்தித்ததில்லை. அதனால்தான் இந்திய அரசு உடனடியாகத் தலையிட்டு போரை தடுத்து நிறுத்த வேண்டும் என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

வருங்காலப் பிரதமர் என்றும் இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரம் என்று வர்ணிக்கப்படும் ராகுல்காந்தி, இலங்கையில் தமிழர்கள் அழிக்கப்படுவதை மிகச் சாதாரணமாக கூறியிருக்கிறார். காங்கிரஸின் கண்களுக்குத் தமிழர்கள் அழிக்கப்படுவது மிகச் சாதாரணமான விடயமாகத் தெரிகிறது. இதற்கு தி.மு.க. தலைவர் என்ன சொல்லப் போகிறார்?

ஈழத் தமிழர்களுக்கு சுய உரிமை வழங்குவோம் என்றும் இலங்கை அரசு கூறுவது கூட கபட நாடகம். தமிழீழம்தான் இதற்குத் தீர்வு என்று நாங்களும், ம.தி.மு.கவும் தொடர்ந்து கூறிவருகிறோம். இப்போது அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவும் இதற்குத் தனது ஆதரவைத் தெரிவித்திருக்கிறார். இந்தப் பிரச்சினையில் தன்னுடைய பங்களிப்பு என்ன என்பதைக் கருணாநிதி பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தினர் பொது வேலைநிறுத்தம் அறிவித்தபோது, சட்டவிரோதம் என்றார். அரசு இயந்திரத்தை பயன்படுத்தி இப்போது அவரே வேலை நிறுத்தம் நடத்தியுள்ளார்.

நாங்கள் வேலை நிறுத்தம் நடத்தியபோது ஆட்சிக்கு எதிராகச் சதி நடக்கிறது என்றார். இவர் நடத்திய வேலை நிறுத்தம் யாருக்கு எதிரான சதி?

எம்.கே.நாராயணனும், சிவ்சங்கர் மேனனும் இலங்கைக்கு அனுப்பப்பட்டதும், அவர்கள் பேசி வந்ததும் அனைத்தும் தேர்தலுக்காக நடத்தப்பட்ட நாடகமே. இந்தச் சந்திப்புக்கு பின்னர் கொழும்பு, டில்லியிலிருந்து வெளியிடப்பட்ட அதிகார பூர்வமான அரசு அறிவிப்புகளில் போர் நிறுத்தம் பற்றிப் பேசியதாகவோ, வலியுறுத்தியதாகவோ எந்தக் குறிப்பும் இல்லை.

ஆனால் போர் நிறுத்தம் பற்றிப் பேசினர் எனவும், அதுபற்றி மகிழ்ச்சியடைகிறோம் எனவும் முதல்வர் கருணாநிதியும், ப.சிதம்பரமும் மட்டுமே கூறுகிறார்கள். நல்லது நடக்கும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார்கள். போரை நிறுத்தச் சொல்லாமல் நல்லது எப்படி நடக்கும்?

இலங்கைப் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, போர்நிறுத்தம் செய்ய வேண்டும் என்று இந்தியப் பிரதிநிதிகள் வலியுறுத்தவே இல்லை என்று கூறியிருக்கிறார்.

இப்போது மட்டுமல்ல, ஒரு முறை கூட இந்தியா போரை நிறுத்த வேண்டும் என்று கூறவில்லை. கூறியிருந்தால் போரை நிறுத்தியிருப்பார்கள். இந்தியா செய்ய மறுப்பதை, நிறைவேற்றத் தவறியதை அமெரிக்கா செய்ய முயற்சிக்கிறது. இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தப்பட வேண்டும், போரால் தீர்வு ஏற்படாது என்று கூறியிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது.

இதன் பின்னராவது இந்திய அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். அரசுக்கு தவறாக வழிகாட்டிக் கொண்டிருக்கும் அதிகாரிகளை மாற்ற வேண்டும்.

பிரபாகரன் தீவிரவாதி அல்லர், அவர் ஒரு போராளி. அவர் இன்னும் 20 ஆண்டுகள் போராடுவார். அ.தி.மு.க. கூட்டணி இந்தத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் வெற்றி பெறும் - என்றார்.

# நடுக்கடலில் படகில் தத்தளித்த இலங்கை இளைஞர்கள் மீட்பு

கடலூர் அருகே நடுக்கடலில் தத்தளித்த 2 இலங்கை இளைஞர்கள் மீட்கப்பட்டு இராமேஸ்வரம் அகதிகள் முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கடந்த 24ஆம் திகதி கடலூர் அருகே நடுக்கடலில் மர்மப் படகு காணப்பட்டது. அந்தப் படகிலிருந்த 2 பேரை ஒரு கப்பல் காப்பாற்றி கரை சேர்த்தது. அவர்களிடம் விசாரணை நடத்தியபோது படகில் தத்தளித்தது இலங்கை முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த டன்சன் (வயது 39), சுதன் (வயது - 27) என தெரியவந்தது.

'கியூ' பிரிவினரிடம் அவர்கள் கொடுத்த வாக்குமூலம் வருமாறு -

இலங்கை முல்லைத்தீவுப் பகுதியில் கடும் சண்டை நடந்து வருவதால் உயிருக்குப் பயந்து போன நாங்கள் மற்றும் ரங்கன் ஆகிய 3 பேரும் நாரிழைப் படகொன்றில் கடந்த 20ஆம் திகதி முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து அருகில் உள்ள யாழ்ப்பாணத்துக்குத் [illegible] சென்று கொண்டிருந்தோம். அ[illegible] நடுக்கடலில் படகு எஞ்சின் திடீரெனப் பழுதடைந்தது.

இதனால் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தோம். காற்று வீசும் திசை நோக்கி படகு மெதுவாக நகர்ந்து சென்றது. இப்படி ஒரு நாள் அல்ல, 2 நாள் அல்ல 3 நாள்கள் நடுக்கடலில் உண்ணாமல், உறங்காமல் தத்தளித்தோம். பசித்தபோது கடல் நீரைப் பருகிப் பசியைப் போக்கினோம்.

இந்த நிலையில் கடந்த சனியன்று இரவு கடலூர் அருகே தனியார் நிறுவன கப்பல் ஒன்று நின்று கொண்டிருந்தது. நாங்கள் வந்த படகு கப்பலை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இதைப் பார்த்து எண்ணெய் வள ஆய்வு பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளுக்கு எங்கள் மீது சந்தேகம் ஏற்பட்டது. உடனே அவர்கள் எங்களைப் பிடித்து விசாரித்தனர். அவர்களிடம் நாங்கள் இலங்கையில் இருந்து உயிர் தப்பி வந்த சம்பவத்தைச் சொன்னோம். எங்கள் மீது சந்தேகம் ஏற்பட்டதால் பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர் - என்றனர்.

இளைஞர்கள் 2 பேரும் இராமேஸ்வரம் முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# ஈழத் தமிழருக்கு இந்தியா படுதுரோகம்; கம்யூனிஸ்ட் ராஜா சாடல்

புதுச்சேரி, ஏப். 28

இலங்கையில் நடக்கும் போருக்கு இந்தியா இராணுவ உதவிகளை வழங்கி வருகிறது. இது தொடர்பாக தி.மு.கவின் நிலை என்ன - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் டி.ராஜா கேள்வியெழுப்பியுள்ளார்.

தேர்தல் பிரசாரத்துக்காக புதுச்சேரிக்கு ஞாயிற்றுக்கிழமை வந்திருந்த அவர் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும். பேச்சின் அடிப்படையில் அரசியல் தீர்வு காண வேண்டும். இலங்கைப் பிரச்சினையை மத்திய அரசு கைவிட்டுவிட்டது.

இலங்கை அரசுக்கு இந்திய அரசு தொடர்ந்து இராணுவ உதவிகளையும், நிதியுதவியும் செய்து வருகிறது. இதை இலங்கை அரசே கூறுகிறது. மேலும் இந்திய அதிகாரிகளை நம்பி நம் நாட்டு அரசு, இப் பிரச்சினையில் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது. ஏற்கனவே இந்திய வெளியுறவுச் செயலராகவிருந்த தீட்சித், இப் பிரச்சினையில் குழப்பத்தை ஏற்படுத்தினார். இப்போது சிவசங்கர் மேனன், எம்.கே. நாராயணன் ஆகியோர் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் கொள்கையில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு இந்தியா துரோகம் செய்து வருகிறது. இராணுவ உதவிகளை அளித்து வருகிறது. இது தொடர்பாக தி.மு.க. பதில் சொல்ல வேண்டும். காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்துள்ள தி.மு.கவுக்கு இலங்கைப் பிரச்சினை தொடர்பான நிலை என்ன?

தமிழகத்தில் தேசிய பாதுகாப்புச் சட்டம், அரசியல் ரீதியாக தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. பொடா சட்டத்தைப் போன்றுதான் இதுவும் பயன்படுத்தப்படுகிறது. இலங்கைத் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதி நேற்றுக்காலை திடீர் உண்ணாவிரதம் மோதல் தவிர்ப்பு அறிவிப்பு வந்ததும் கைவிட்டார்



சென்னை, ஏப்.28

இலங்கையில் உடனடிப் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி தமிழக முதல்வர் கருணாநிதி நேற்றுக் காலை முதல் மேற் கொண்டிருந்த உண்ணாவிரதம் நண்பகலுடன் கைவிடப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மோதல்களை நிறுத்துவதாக இலங்கை அரசு அறிவித்திருக்கும் செய்தி வந்ததால் உண்ணாவிரதத்தை தாம் முடித்துக்கொள்வதாக முதல்வர் அறிவித்தார்.

சென்னை கடற்கரையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடத்தில் நேற்றுக் காலை முதல்வர் திடீரென உண்ணா விரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தார்.

அப்போது, விடுதலைப் புலிகள் அறிவித்த போர்நிறுத்தத்தை ஏற்காமல் இலங்கை இராணுவம் தமிழர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவது தமக்கு மிகுந்த மன வேதனையை அளிக்கிறது என அவர் தெரிவித்தார்.

போர்நிறுத்த அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்த்து காத்திருந்தார் எனவும் அத்தகைய அறிவிப்பு வராததால், இலங்கைத் தமிழர்களுக்காக தம்மையே அர்ப்பணிக்க முடிவு செய்தார் எனவும் அவர் குறிப் பிட்டார்.

இந்நிலையில், கருணாநிதியின் உண்ணாவிரத செய்தி அறிந்து அவருடைய மகன் மு.க.அழகிரி மதுரையில் திடீரென உண்ணாவிரதத்தை தொடங்கினார். அதையடுத்து, திருநெல்வேலியில் சட்டப் பேரவைத் தலைவர் ஆவுடையப்பன் உண்ணாவிரதத்தை தொடங்கினார். தஞ்சையில் அமைச்சர் உபயதுல்லாவும், பட்டுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.எஸ். பழனிமாணிக் கமும் உண்ணாவிரதம் இருந்தனர். பொள்ளாச்சியில் சாலைமறியலில் ஈடுபட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட் டனர்.

முதல்வருடன் தொலைபேசியில தொடர்புகொண்டு பேசிய பிரதமர் மன்மோகன் சிங், உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு அவரைக் கேட்டுக்கொண்டார்.

தி.மு.க. கூட்டணி கட்சித் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எனப் பலரும் நேரில் வந்து உண்ணாவிரதத்தை கைவிடுமாறு முதல்வர் கருணாநிதியிடம் கேட்டுக்கொண்டனர்.

இந்த நிலையிலேயே முதல்வரின் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று நண்பகலுடன் முடிவுக்கு வந்தது.

## ஹொக்கி நடுவர் பரீட்சை முடிவுகள் வெளிவந்தன

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ்.மாவட்ட ஹொக்கி சங்கத்தினால் நடத்தப்பட்ட நடுவர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

சித்தியடைந்தோரின் விவரம் வருமாறு:-

ஆர்.குகன், எஸ்.சதீஸ்கண்ணா, ஏ.கமலகுமரன்; ஆர்.கே. சாம்சன், எஸ். நிசாந்தன், வி.ஆர்.எல். டினேஸ், ஏ.ரூபவர்ணன், எஸ். சிறீரஜீவன், கே. சசிக்குமார், ஜி.ஏ.கிறேசியன், ரி.சசிகரன், எல்.ரூபகாந்தன், எம். வினோகாந்தன், எம்.ஜே.இதயகுமார், ஆர். சஜீவன், எஸ்.செல்வச்சந்திரன், கே.பகீரதன், எஸ். சிவதீஸ், எஸ். சிறிபிரசன்னா. (1)

## தமிழகத்தில் சித்த மருத்துவத்தில் முதுமாணி கற்றைநெறி இங்கிருந்தும் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப்.28

தமிழ்நாடு, பாளையங்கோட்டை அரசாங்க சித்தமருத்துவக் கல்லூரியில், 2009, 2010 கல்வியாண்டில் சித்தமருத்துவத்தில் முதுமாணிப் பட்டப்(M.D) பயிற்சிக்கு வெளி நாட்டு மாணவர்கள் சேர்க்கப்படுவர் என்று இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் திணைக்களம் யாழ். ப்ல்கலைக்கழகத்துக்கு அறிவித்துள்ளது.

இலங்கை, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஐவர் தெரிவு செய்யப்படுவர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பான முழுவிவரங்களையும் www.tnhealth org. என்ற இணையத் தளத்தில் அறிந்துகொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் ஐந்தாம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும்.

அனுமதிப்பரீட்சை மே மாதம் 23 ஆம் திகதி நடைபெறும். பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவக் கல்லூரியு டன் இணைக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனமாகும். (அ)

## மொனறாகலவில் தமிழ் வர்த்தகர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஏப்.28

மொனறாகல மாவட்டத்தில் இராமையா விஷ்வமூர்த்தி என்ற வர்த்தகர் அடையாளம் தெரியாத ஆயுதக்குழு ஒன்றினால் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார். இதனையடுத்து மொனறாகல பகுதியில் உள்ள இந்திய வம்சாவழித் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்ச நிலை உருவாகியுள்ளது.

வர்த்தகரான இராமையா (43 வயது) மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த அடையாளம் தெரியாத இருவரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவித்த காவல்துறையினர், இது தொடர்பாக மேல திக தகவல்கள் எதுவும் கிடைக்க வில்லை எனக் கூறினார்.

மொனறாகலவில் வசிக்கும் இந்திய வம் சாவழித் தமிழர்களுக்கு எதிராக அண்மைக்காலத்தில் சிங்களவர்களால் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள வன்முறைகளின் ஒருபகுதியாகவே இந்தப் படுகொலை இடம்பெற்றிருக்கின்றது என மலையக அரசியல் தலைவர் ஒருவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். (அ)

# புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை ஏற்குமாறு இலங்கை அரசை வலியுறுத்துகிறது பிரிட்டன்

## பொதுமக்களின் பாதுகாப்பே முக்கியம் என்கிறார் மில்லிபான்ட்

கொழும்பு, ஏப்.28

விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள யுத்த நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டு இலங்கை அரசு பதிலுக்கு யுத்தநிறுத்தத்தை அறிவிக்க வேண்டுமென பிரிட்டன் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாளை புதன்கிழமை பிரான்ஸ், சுவீடன் வெளிவிவகார அமைச்சர்களுடன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் முன் வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை விஜயத்தின் போது மோதலில் சிக்கியுள்ள பொதுமக்களின் நிலை மற்றும் மனிதாபிமான விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்தவுள்ளார் எனத் தெரிவித்துள்ள மில்லிபான்ட் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

மனிதாபிமான காரணங்களுக்காக யுத்தநிறுத்தம் செய்யவேண்டுமென்ற எமது வேண்டுகோளை மீண்டும் விடுக்கிறோம்; தொடர்கிறோம்.

விடுதலைப் புலிகளின் ஒருதலைப் பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்பை நான் அவதானித்துள்ளேன்.

இதனால் நான் இலங்கை அரசைத் தனது யுத்தநிறுத்த அறிவித்தலை முன் வைக்குமாறு வேண்டுகோள் விடுக்கிறேன். இதன்மூலம் மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்கள் பாதுகாப்பாக வெளியே றலாம்.



பொதுமக்களின் பாதுகாப்பே மிக முக்கியமானது. பொதுமக்களின் பாதுகாப்பை அனைத்து சந்தர்ப்பங்களிலும் உறுதி செய்வதற்காக இரு தரப்பும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை முழுமையாகப் பின்பற்ற வேண்டும்.

### பொதுமக்களின் பாதுகாப்பே முக்கியமானது

ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஆணையாளர் ஜோன் ஹோம்ஸின் தற்போதைய இலங்கை விஜயத்தை நான் வரவேற்கிறேன்.

எமது பிரதமர், இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் ஆராய்ந்ததன் அடிப்படையில் நாளை 29 ஆம் திகதி புதன்கிழமை பிரான்ஸ், சுவீடன் வெளிவிவகார அமைச்சர்களுடன் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளேன்.

இலங்கையின் மனிதாபிமான நிலை மற்றும் மோதல் நடைபெறும் பகுதிகளில் மக்களுக்கான பாரிய ஆபத்து நிலை குறித்து நான் ஆராய் வேன்.

மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் வெளியேறியதும் அவர்களைப் பொது அமைப்புகள் மேற்பார்வை செய்வதற்கான அனுமதியை வழங்குமாறு இலங்கை அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

சிறப்பான மருத்துவ வசதிகளுக்கான வாய்ப்புகள், வெளிப்படையான பதிவு முறை, சர்வதேச கண்காணிப்பு முகாம்களிலிருந்து வெளியே சென்று வருவதற்கான நடமாட்ட சுதந்திரம் போன்றவற்றை உறுதிசெய்வதன் மூலம், இடம்பெயர்ந்தவர்களின் முகாம்களின் தரத்தை முன்னேற்றுவது என்ற தனது உறுதிமொழியை அரசு நிறைவேற்ற வேண்டும் - என்றார்.

## மேல் மாகாண சபைத் தேர்தல்:

# ஐக்கய தேசயக் கட்சியில் போட்டியிட்ட நான்கு தமிழரும் முஸ்லிம் மூவரும் தெரிவு

கொழும்பு, ஏப்.28

நடந்து முடிந்த மேல்மாகாணசபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்களும் அரசின் சார்பில் ஓர் உறுப் பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஓர் உறுப்பினரும் என 9 பேர் தெரிவாகி யுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் முஸ்லிம் உறுப்பினர்கள் மூவரும் தமிழ் உறுப்பினர்கள் நால்வரும் தெரிவாகியுள்ள நிலையில் அரசின் சார்பில் நவ்ஸர் பௌஸி மாத்திரம் தெரிவாகியுள்ளார்.

பிரபாகணேசன், குமரகுருபரன், எஸ். ராஜேந்திரன், ராம் ஆகிய நான்கு தமிழ் உறுப்பினர்களும் மற்றும் ஏ.ஜே.எம். முஸம்மில், பைரூஸ் ஹாஜியார், முஜிபுர் ரஹ்மான் ஆகிய மூன்று முஸ்லிம் உறுப்பினர்களும் ஐ.தே.கவில் தெரிவான சிறுபான்மை இன உறுப்பினர்களாவர். முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் முகமட் அர்ஷாத் தெரிவாகியுள்ளார்.

மேற்குறிப்பிட்டுள்ள நான்கு தமிழ் உறுப்பினர்களுள் ராமைத் தவிர ஏனைய மூன்று உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசனின் மேலக மக்கள் முன்னணியின் சார்பில் ஐ.தே.கட்சி வேட்பாளர்களாக தேர்தலில் நிறுத்தப் பட்டவர்களாவர்.

அவரால் நிறுத்தப்பட்டுள்ள மூவரும் தெரிவுசெய்யப்பட்டமை இங்கு குறிப்பிடக்கூடியதாகும்.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் அரசின் சார்பில் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள் போட்டியிட்ட போதிலும் நவ்ஸர் பௌஸியைத் தவிர எவரும் தெரிவாகவில்லை.

# நான்காவது ஆட்டத்திலும் வென்று வெற்றி நடைபோடுகிறது டெக்கான் அணி

## எட்டுப் புள்ளிகளுடன் முதலிடத்தில்

டர்பன், ஏப்.28

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் இரண்டாவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸுடனான ஆட்டத்தில் ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தனது நான்காவது தொடர் வெற்றியை பதிவு செய்தது டெக்கான் சார்ஜர்ஸ் அணி.

டர்பனின் கிங்ஸ்மேற் மைதானத்தில் நேற்று நடைபெற்ற போட்டியில் தோனி தலைமையிலான் சென்னை சுப்பர் கிங்ஸும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெக்கான் சார்ஜர்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸை துடுப் பெடுத்தாடுமாறு அழைத்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் இருபது ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இரண்டு பந்துகளை எதிர்கொண்ட பார்த்திவ் பட்டேல் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தார். ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஹைடன் ஓர் ஓட்டத்தால் அரைச்சத வாய்ப்பை தவறவிட்டு ஒஜாவின் பந்து வீச்சில் 8 பௌண்டரிகளுடன் 49 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

சுரேஸ்ரெய்னா ஒரு பௌண்டரி 2 சிக்ஸர்கள் அடங்கலாக 25 ஓட்டங்களையும் ஜக்கப் ஓரம் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களைப் பெற்றார்.(4 பௌண்டரிகள், 2 சிக்ஸர்கள்)

மோர்கல் (13), பத்ரிநாத்(8) என ஆட்டம் இழக்க சென்னை சுப்பர் சிங்ஸ் 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைப்பெற்றது.

டெக்கான் சார்ஜர்ஸ் அணி சார்பில் பந்து வீசிய ஒஜா 11 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை எட்வர்ட்ஸ், ஆர்.பி.சிங், வேணுகோபால் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றி பெறுவதற்கு 166 ஓட்டங்களைப் பெறவேண்டும் எனக் களமிறங்கிய டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கில்கிறிஸ்டும் கிப்ஸும் நல்ல ஆரம்பத்தை அளித்தனர். 5 பௌண்டரிகளையும் 3 சிக்ஸர்களையும் விளாசிய கில்கிறிஸ்ட் 44 ஓட்டங்களுடன் ரெய்னாவின் பந்து வீச்சில் முரளியிடம் பிடி கொடுத்து ஆட்டம் இழக்க 56 பந்துகளை எதிர்கொண்ட கிப்ஸ் 6 பௌண்டரிகள் 2 சிக்ஸர்களுடன் 69 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழக்காது இறுதிவரை களத்தில் இருந்தார்.

லக்ஷ்மன் 4 ஓட்டங்களையும் சர்மா (18), ஸ்மித்(12) என ஆட்டம் இழக்க 19.3 ஓவர்கள் நிறைவில் டெக்கான் சார்ஜர்ஸ் 169 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

சென்னை சுப்பர் கிங்ஸ் சார்பில் பந்துவீசிய ரெய்னா 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைகைப்பற்ற முரளிதரன், பாலாஜி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களைப் பெற்ற கிப்ஸ் தெரிவானார்.

இப்போட்டியுடன் நான்காவது போட்டியையும் வெற்றிகொண்ட டெக்கான் சார்ஜர்ஸ் டெல்லி டேர் டெவில்ஸ் அணியை இரண்டாவது இடத்துக்கு பின்தள்ளி 8 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பேச்சு மூலமான தீர்வுமீது எமக்குள்ள நம்பிக்கையை உணர்த்தவே ஒருதலைப்பட்ச போர் நிறுத்தம்

## விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன்

கொழும்பு, ஏப்.28

நாம் தோற்கும் நிலையிலோ அல்லது சரணடையும் நிலையிலோ இல்லை. எமது தேசிய பிரச்சினைக்கு அரசியல் பேச்சு மூலமான தீர்விலேயே நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இதனைச் சர்வதேச சமூகத்துக்கு உணர்த்தவே எமது ஒரு தலைபட்ச போர் நிறுத்தத்தை நாம் ஒரு செய்தியாக விடுத்துள்ளோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் நேற்றிரவு பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் கூறியதாவது:-

அரசு நேற்றும் எட்டுத் தடவைகளுக்கு மேலாக விமானத் தாக்குதலை மக்கள் குடியிருப்புப் பிரதேசங்கள் மீது நடத்தியது. விமானத் தாக்குதலையோ கனரக ஆயுதத் தாக்குதலையோ இனி நடத்தமாட்டோம் என அறிவித்ததன் பின்னரும் 3 தடவைகள் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதுடன் ஷெல் தாக்குதல்களையும் நடத்தியுள்ளனர். இதனால் மக்கள் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்தும் உள்ளனர்.

எமது மக்களின் பாதுகாப்புக்காகவும் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கவும் ஆரம்பிக்கப்பட்ட புலிகள் இயக்கம் யாரிடமும் சரணடையாது. மக்களின் முடிவே எமது தீர்மானமுமாகும். அரசியல் ரீதியான பேச்சுக்களுக்கு சர்வதேசத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டே நாம் போர் நிறுத்தம் அறிவித்தோம். பேச்சு வார்த்தை மூலமான தீர்வுக்கு நாம் அன்று தொடக்கம் இன்று வரை எமது ஆதரவைத் தெரிவித்து வந்துள்ளோம்.

நாம் ஆயுதங்களை ஒப்படைக்கப் போவதில்லை. நாம் மீண்டும் பழைய நிலையை எய்துவோம் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அத்துடன் இது போன்ற நிலைமை எமக்கு புதியதும் அல்ல. சோதனைகளையும் வேதனைகளையும் நாம் முன்னரும் சந்தித்துள்ளோம் - என்றார் நடேசன். (அ-6)

# வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் பகுதிகளில் நேற்றைய தாக்குதல்களில் 272பேர் பலி!

கொழும்பு, ஏப்.28

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதுகாப்பு வலயத்தில் முப்படைகளும் இணைந்து இன்று பல முனைகளில் நடத்திய தாக்குதல்களில் 272 பொதுமக்கள் பலியான அதேவேளையில், மேலும் பலர் படுகாயமடைந்தனர் என்று இணையத்தளங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

நேற்றைய தாக்குதல் சம்வங்கள் குறித்து அவை மேலும் பின்வருமாறு விவரித்தன.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை 3.45 மணிக்கு புதுக்குடியிருப்பு கிழக்கில் உள்ள இரட்டை வாய்க்கால், வலைஞர்மடம் மற்றும் முள்ளி வாய்க்கால் பகுதிகள் மீது இராணுவத்தினரும், கடற்படையினரும் தாக்குதல் நடவடிக் கையை மேற்கொண்டு முன்நகர்வுக்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை 8.30 மணி வரையிலான காலப்பகுதியில் மட்டும் விமானப் படையின் விமானங்கள் எட்டுத் தடவை இப்பகுதிக்கு வந்து கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களை மக்கள் பெருமளவுக்கு செறிவாக வசிக்கும் பகுதிகளை நோக்கி நடத்திச் சென்றுள்ளன.

இரட்டைவாய்க்கால் பகுதியில் உள்ள குடியிருப்புக்களை நோக்கி இன்று காலை நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் சாளம்பன் என்ற இடத்தில் மட்டும் 37 பேர் கொல்லப்பட்டுள்ளனர். முள்ளிவாய்க்கால் பகுதியை நோக்கி சிறிலங்கா கடற்படை கப்பல்களில் இருந்து நடத்தப்பட்ட செறிவான எறிகணைத் தாக்குதல்களில் 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர். வலைஞர்மடத்தில் படையினர் நடத்திய தாக்குதல்களில் 15 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 172 பேர் காயமடைந்த நிலையில் முள்ளிவாய்க்கால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

## அரசு அறிவித்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்த நிறுத்தம் என திரிபுபடுத்தப்படுகிறது.

பயங்கரவாதிகளின் ஆதரவாளர்களுக்கு உற்சாகமளிப்பதற்காகவே அரசின் உண்மையான அறிக்கை திரிபுபடுத்தப்படுகிறது.

மீதமுள்ள வலைஞர்மடத்தின் தென் பகுதி மற்றும் வெள்ளமுள்ளிவாய்க்கால் பகுதிகளைக் கைப்பற்றும் போது பேரழிவு ஏற்படுவதைத் தவிர்ப்பதே அரசின் நோக்கமாகும்.

முல்லைத்தீவு கைப்பற்றப்பட்ட பின்னர் படையினர் செயற்படும் விதத்திலேயே இனியும் செயற்படுவர்.

படையினர் தற்போது வெற்றியை நெருங்கியுள்ளனர். மோதல் நடவடிக்கைகள் முடிவுக்கு வருவது எந்த வகையிலும் சர்வதேச ரீதியில் தடை செய்யப்பட்ட அமைப்புக்கும் அதன் தலைவருக்கும் சுவாசிப்பதற்கும் இடமளிக்காது.

மேலும் அரசு எந்தவித சர்வதேச அழுத்தங்களுக்கும் அடிப்பணிந்து இதனை மேற்கொள்ளவில்லை.

உலகின் பாரிய பணயக் கைதி மீட்பு நடவடிக்கையின் வெற்றியை கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டது-என்று அவர்கள் தெரிவித்தனர். (அ-சி)

## ஐ.நா.வின் ஹோம்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹோம்ஸ் கொழும்பு ஐ.நா. அலுவலக இணைப்பாளர் நீல் புருனேயுடன் வவுனியா வந்து மனிக் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளவர்களுடன் கலந்துரையாடினார். அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்தார். அதன் பின்னர் ஓமந்தைச் சோதனை நிலையத்துக்குச் சென்ற அவர், வன்னியிலிருந்து வருபவர்களை படையினர்விசாரணைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளைப் பார்வையிட்டார். அங்கு பணியாற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனும் ஹோம்ஸ் கலந்துரையாடினார்.

அதன்பின்னர் செட்டிக்குளம் புனர்வாழ்வு நிலையத்துக்கு அவர் சென்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினார்.

இதேவேளை-

பிரிட்டிஷ் சர்வதேச விவகாரங்களுக்கான அமைச்சர் மைக் போஸ்டர் நேற்று முற்பகல் வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டார். வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், காமினி மகா வித்தியாலயம் ஆகியவற்றில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ள 6,000 பேரைச் சந்தித்து அவர்களின் நிலைமை குறித்து ஆராய்ந்தார்.

முகாம்களில் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்த அவர் அவர்களுக்குத் தேவையான உதவிகளை தமது அரசு மூலம் வழங்க நடவடடிக்கை எடுக்கப்படும் - என்று தெரிவித்தார். (அ-1)

## பிரபாகரனின் விளையாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் பிரபல தொலைக்காட்சியான சி.என்.என்னுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே ஜனாதிபதி இப்படிக் கூறியுள்ளார்.

பிரபாகரன் உயிருடன் பிடிக்கப்பட்டால் முதலில் அவர் இலங்கையில் வழக்கு விசாரணைக்கு முகம்கொடுக்க நேரிடும். அதன் பின்னர் அவர் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படலாம்- என்றும் ஜனாதிபதி பேட்டியின் ஒரு கட்டத்தில் தெரிவித்தார்.

எமது அரசாங்கம் போர்நிறுத்தம் எதனையும் அறிவிக்கவில்லை. இப்போது பிரபாகரனைப் பற்றியோ அல்லது வேறு எவரைப் பற்றியோ கவலைப்படவில்லை அது பெரும்பாலும் முடிவுக்கு வந்து விட்டது, என்றே கருதுகிறேன்- என்றார் ஜனாதிபதி. (அ-1)

## ஐ.நா.மனிதாபிமானக் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறும் பகுதிகளுக்கு அனுப்புவது குறித்து இலங்கை அரசுடன் இணக்கப்பாட்டைப் பெறமுடியவில்லை. இது குறித்து நான் ஏமாற்றமும் கவலையும் அடைகின்றேன்.

அத்துடன், கனரக ஆயுதங்களை தான் இனிமேல் பயன்படுத்துவதில்லை என இலங்கை அரசு அறிவித்த உறுதிமொழி தொடர்ந்து கடைப்பிடிக்கப்படவேண்டும்.

கனரக ஆயுதங்கள் பாவிப்பு நிறுத்தம் தொடர்பில் இலங்கை அரசு விடுத்த உறுதிமொழி தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்படும் என எதிர்பார்க்கின்றேன்.

கடந்த காலங்களில் இந்த உறுதிமொழி பின்பற்றப்படவில்லை. இலங்கை அரசு இந்த உறுதி மொழியைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது மிக முக்கியமானது.

பாதுகாப்பு வலயத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் சிக்கியுள்ளனர் என ஐ.நா. மதிப்பிட்டுள்ளது. ஐ.நாவின் இந்தப் புள்ளி விவரங்கள் சரியானவை.

விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்களும் வெற்றியளிக்கவில்லை - என்றார். (அ-சி)

# கிணற்றுக் குழிக்குள் தவறி விழுந்த சிறுவர்கள் பரிதாபகரமாக உயிரிழப்பு

## மட்டக்களப்பில் சம்பவம்

கொழும்பு, ஏப்.28

மட்டக்களப்பு மாவட்டம் புலிபாய்ந்தகல் பிரதேசத்தில் கைவிடப் பட்டிருந்த கிணற்றுக்குழியொன்றினுள் தவறி விழுந்த இரு சகோதரர்கள் உட்பட 3 சிறுவர்கள் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளனர்.

பூலாக்காடு கிராமத்தில் நேற்றுமுன் தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மரணமான இச்சிறுவர்கள் பிள்ளையான் பிரதீபன(வயது - 9), அவரது சகோதரரான பிரசாந்த்(வயது-7) மற்றும் கோணமலை நிமலநாதன் (வயது - 10) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## தொழிற்பூங்கா திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் தொழிற்பூங்கா திறப்பு விழா இன்று மு.ப. 11 மணிக்கு நவீல்ட் வீதி, கைதடியில் ஆ.மகேந்திரன் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு தொழிற்பூங்காவைத் திறந்து வைக்கவுள்ளார். தொழில் விடயங்களை கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்ளும் யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப.கிரிதரன் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக நவீல்ட் பாடசாலை அதிபர் வீ.எஸ்.மகேந்திரன், சிறு கைத்தொழில் பதில் பிரதிப் பணிப்பாளர் ஜெயமனோன், லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் சுனாமி வீடமைப்புத் திட்டத் தலைவர் கே.துரைராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (1-6)

## லண்டனில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் கைதுசெய்தனர் எனவும், இந்த விவகாரம் தொடர்பாக பிரித்தானிய வெளியுறவு மற்றும் பொதுநலவாய அலுவலகத்திடம் இந்தியத் தூதரகம் விவரித்துள்ளது என்றும் இந்தியத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-சி)

## மிகவும் ஆபத்தான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுக்குக் கொண்டுவந்திருப்பதாக அரசாங்கம் அறிவித்திருப்பதையும், விடுதலைப் புலிகள் அறிவித்த ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தையும் 'ஒரு முதலாவது கட்ட நடவடிக்கை' என வரவேற்றிருக்கும் ஒன்றியத்தின் வெளிவிவகாரத் துறை அமைச்சர்கள், சிறிலங்கா அரசாங்கம் அரசியல் பேச்சுக்களுக்குச் செல்ல வேண்டும் எனவும், விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்தையும் வன்முறைகளையும் கைவிட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நேற்றைய கூட்டத் தொடரில் கலந்து கொண்ட பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட், பொது மக்களின் உயிரிழப்புக்கள் அதிகளவில் காணப்படுகிறது என்றும், இது சர்வதேச சமூகத்தைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தக் கூட்டத் தொடரில் கலந்து கொண்ட சுவீடன் வெளிவிவகார அமைச்சர் கால் பில், இலங்கையில் உடனடி மனிதாபிமான போர் நிறுத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தினார். (அ-சி)

ADICT (2008 Batch)
மாணவர் கவனத்திற்கு

எமது கணனி நிறுவனத்தில் 2008ம் ஆண்டு A/L பரீட்சைக்கு தோற்றிய பின்னர் Advanced Diploma in ICT கணனிக் கற்கைநெறியை பயின்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள்யாவும் Trinity University இனது இலங்கைக்கான பிரிவினால் எமக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்பதை அனைத்து மாணவர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருவதுடன் உங்கள் சான்றிதழ்களை இன்று முதல் எமது நிறுவனத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இக்கற்கை நெறியை பயின்ற 40 மாணவர்களுள் முதல் தர பிரிவில் (First Class) சித்தியடைந்த எமது மாணவர் விபரம் வருமாறு :-

01. T.SHARMILA - MANIPAY
02. M.SANGARY - SANGUVELY
03. S.THULASI - SANGUVELY
04. G.KUKANANTH - SANDILIPAY
05. J.AHILAVARATHAN - MANIPAY
06. S.ROHINI - MANIPAY
07. T.DAYANI - SANGUVELY
08. S.KALAIARASY - MANIPAY
09. S.JANANI - NAVALY
10. R.SRIKIRIESHAN - MANIPAY
11. S.JALINI - MANIPAY
12. T.PIRAVINA - UDUVIL
13. V.NISANTH - MANIPAY

UNI
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay
T.P :- 060 - 221 - 6433

ஏசியன் கல்வி நிலையம்
மீசாலை
O/L DAY CLASS
ஆரம்பமாகிவிட்டன.
நிர்வாகி.

CHEMISTRY => S.Vasu
மின் இரசாயனம்
ஆரம்பம்:- 29.04.2009
Wed 4.30 p.m
[Wed, Thur, 4.30-5.30 p.m]
NEC
Clock Tower Road, Jaffna

இணையற்ற சேவையினூடு
நிகரற்ற சாதனையாளர்களை
உருவாக்கிய நிறுவனத்தில்
O/L DAY CLASS
பகல் நேர வகுப்பு
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
அதிபர்.
The Express Institute
Irupalai, Kopay.

CHEMISTRY => S.Vasu
A/L 2009 DAY Paper Class
ஆரம்பம்:- 28.04.2009 (Tue) 5.30 p.m
Tue, Wed, Thr, Sat, Sun (5.30-6.30 p.m)
NAVALAR Anaipanthy, Jaffna.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கந்தையா

(ஓய்வுபெற்ற அதிபர்)

மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா நேற்று(27.04.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(28.04.2009) புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
க.பாலமோகன்(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்

General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

# பொருளியல் - 1

ஆசிரியர்:-
V.முரளி B.A.Hons (Eco.Sp), M.A (Eco),
Co/St.Benedict's College, Col-13.

★★★ உள்ளே......
★ கொழும்பு வலய தமிழ் வினாத்தாள் 01 இன் பகுதி 01 இன் தொடர்ச்சியும் பகுதி 11 இன் உம். (கொ.வ.நி)
★ புவியியல் பகுதி 11.
★ இரசாயனவியலின் கொழும்பு வலய வினாத்தாள் 01 இன் பகுதி 01. ( கொ.வ.நி)
★ கொழும்பு வலய கணக்கீடு வினாத்தாள் 01 இன் பகுதி 01 இன் தொடர்ச்சியும் பகுதி 11 உம். (கொ.வ.நி)
★ கணக்கீடு பகுதி 11 இன் கடந்தவார விடைக்குறிப்புக்களின் தொடர்ச்சி.
★ மத்திய வைப்புத்திட்ட கம்பனியின் கட்டுரைத் தொடர்ச்சி.
★ பௌதிகவியலின் பொறியியல் வினாத்தொகுப்புத் தொடர்ச்சி.

## பகுதி - 1

சுருக்கமான விடை தருக.

01. சந்தைப்பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் செயற்பாடுகளாக அமையக்கூடியது,
   1) பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துதல்.
   2) வேலையின்மையைக் குறைத்தல்.
   3) அரச உடைமைகளை தனியாருக்கு விற்பனை செய்தல்.
   4) விலைப் பொறிமுறையினால் உற்பத்தி செய்து வழங்காது பொதுப்பண்டங்களை உற்பத்தி செய்தல்.
   5) பொருளாதாரத்தால் உற்பத்திசெய்யப்பட்ட வளங்களை மக்களிடையே சமமாக பங்கிட்டு வழங்குதல்.

02. பற்றாக்குறையான வளம் பின்வருவனவற்றுள் எது?
   1) காலம். 2) உழைப்பு.
   3) நீர் 4) ஆடம்பரப் பண்டம்.
   5) மேற்கூறிய அனைத்தும்.

03. பண்டத்தின் விலை குறைவடைய கேள்வி ஒடுக்கம் ஏற்படுமாயின் அப்பண்டம்,
   1) ஆடம்பரப்பண்டம். 2) இழிவுப்பண்டம்.
   3) பொதுப்பண்டம். 4) கிஃபன் பண்டம்.
   5) பொருளாதாரப் பண்டம்.


04. அதிகரித்துச் செல்லும் அளவுத்திட்ட விளைவு விதியின்போது,
   1) மொத்த உற்பத்தி அதிகரிக்கும்.
   2) நீண்டகால சராசரிச் செலவு குறைவடையும்.
   3) குறுங்காலத்தில் எல்லைச்செலவு அதிகரிக்கும்.
   4) உள்ளீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்க வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்புக் குறைவாகும்.
   5) சந்தர்ப்பச்செலவு அதிகரிக்கும்.

05. வருமானமானது 1000/= ரூபாவிலிருந்து 1500/=வாக அதிகரிக்கின்றபொழுது பண்டத்தின் மீதான நுகர்வோன் செலவு 500/-விலிருந்து 600/-ரூபாவாக அதிகரிக்கின்றது எனில், வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி யாது?
   1) 4 2) 2 3) 0.5
   4) 0.4 5) எல்லாம் தவறு.

06. நிறுவனம் ஆனது சாதாரண இலாபத்தினை பெற்றுக்கொள்ளும் நிலை,
   1) எல்லைச்செலவும் சராசரி செலவும் சமனாகும்போது.
   2) எல்லைச்செலவும் எல்லை வருமானமும் சமனாகும்போது.
   3) சராசரி வருமானமும் எல்லை வருமானமும் சமனாகும்போது.
   4) சராசரி வருமானமும் சராசரி செலவும் சமனாகும்போது.
   5) எல்லை வருமானமும் விலையும் சமனாகும்போது.

07. குறுங்காலத்தில் நிறுவனமானது வெளியீட்டினை அதிகரிக்கின்றபொழுது ஏற்படவல்லது,
   1) சராசரி நிலையான செலவு குறைவடையும்.
   2) சராசரி மொத்த செலவு குறைவடையும்.
   3) சராசரி மாறும் செலவு குறைவடையும்.
   4) மொத்தச்செலவு குறைவடையும்.
   5) எல்லைச்செலவு குறைவடையும்.

08. நிறுவனமானது 100 அலகினை உற்பத்தி செய்கின்றபொழுது ஒரு அலகிற்கான மாறும் செலவு யாது?
   1) 10
   2) 20
   3) 30
   4) 40
   5) மேற்கூறிய எவையுமல்ல.




09. நிறுவனத்தின் மொத்தச் செலவு தொடர்பான அட்டவணை தரப்பட்டுள்ளது.


| உற்பத்தி அளவு (அலகு) | மொத்த செலவு (ரூபா) |
|---|---|
| 0 | 90 |
| 1 | 200 |
| 2 | 340 |
| 3 | 450 |


3 அலகினை உற்பத்தி செய்கின்றபொழுது நிறுவனத்தினது சராசரி மாறும் செலவு யாது?
   1) 120/= 2) 150/= 3) 360/=
   4) 458/= 5) 790/=

10. தொலைக்காட்சிப் பெட்டியின் விலை அதிகரிப்பினை ஏற்படுத்தக்கூடியது எது?
   1) தொலைக்காட்சிப் பெட்டிக்கு பதிலாக பதிலீட்டு பண்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.
   2) வினைத்திறன் வாய்ந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரித்தமை.
   3) தொலைக்காட்சிகளுக்கான இணைப்பு சாதனங்களின் நிரம்பல் அதிகரித்தமை.
   4) தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான கேள்வி அதிகரித்தமை.
   5) உற்பத்தியாளர்கள் உற்பத்தியை அதிகரிப்பது என தீர்மானம் மேற்கொண்டமை.


11. பொருளாதாரத்தில் கேள்வியினை அதிகரிக்க அரசு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கையாக அமையக்கூடியது எது?
   1) பாதீட்டு மிகை.
   2) சேமிப்பினைத் தூண்டுதல்.
   3) செலவினைக் குறைத்தல்.
   4) வரியினைக் குறைத்தல்.
   5) முதலீட்டினைக் குறைத்தல்.

12. இலங்கையின் வருமான வரி முறையினை (Tax System) விளக்கும் மிகச்சரியான வரைபு எது?






3)




4)




5)




13. அரசாங்கத்தின் பொருளாதார இலக்குகளாக கருத முடியாதவை எவை?
   1) பொருளாதார வளர்ச்சி. 2) நிறை தொழில் மட்டம்.
   3) வருமான சமமின்மை. 4) விலை உறுதிப்பாடு.
   5) பொருளாதார உறுதிப்பாடு.

14. QD = 400 - 4P எனில், நெகிழ்ச்சியானது 1இற்கு சமனாகக் காணப்படுமாயின் பண்டத்தினது விலை யாது?
   1) 50 2) 100 3) 200 4) 250

15. S = -200 + 0.25y, I = 300m, G = 150 எனில், சமனிலை தேசிய வருமானம் யாது?
   1) 1800m 2) 2200m 3) 2600m 4) 1500m

16. வளி மாசடைதல், வாகனங்களின் இரைச்சல் போன்றவை பின்வருவனவற்றுள் எவற்றுள் உள்ளடக்கப்படும்,
   1) தனியார் செலவு.
   2) சந்தர்ப்ப செலவு அல்லது அமையச் செலவு.
   3) நிலையான செலவு.
   4) வெளிவாரியான செலவு.
   5) மாறும் செலவு.

17. அபிவிருத்தியடைந்த நாட்டில் மக்களது வருமானம் அதிகரிக்கின்றபொழுது எப் பண்டத்தின் மீதான செலவின் நாட்டம் அல்லது சதவீதம் குறைவடையும்,
   1) உணவு வகைகள்.
   2) தனிப்பட்ட போக்குவரத்துச் செலவு.
   3) சுற்றுலாச் செலவு.
   4) களியாட்டச் செலவுகள்.
   5) பொழுதுபோக்கு வசதிகள் தொடர்பான செலவு.

18. அரசாங்கம் அடைந்துகொள்ள முனையும் மிகப்பொருத்தமான இரு இலக்குகள் எது?

| | உயர்வு | குறைவு |
|---|---|---|
| 1) | சென்மதி நிலுவை பற்றாக்குறை | வேலைவாய்ப்பு |
| 2) | பொருளாதார வளர்ச்சி | பணவீக்கம் |
| 3) | வேலைவாய்ப்பு | பொருளாதார வளர்ச்சி |
| 4) | பணவீக்கம் | சென்மதி நிலுவை பற்றாக்குறை |
| 5) | வருமான சமமின்மை | அரச சேமிப்பு |

19. மொத்த உள்நாட்டு உற்பத்தி, சனத்தொகை தொடர்பான அட்டவணை தரப்பட்டுள்ளன. சரியான கூற்றை குறிப்பிடுக.

| நாடுகள் | GDP | சனத்தொகை |
|---|---|---|
| எதியோப்பியா | $ 6,257 mill | 55 mill |
| | $ 83,823 mill | 38 mill |
| நியூசிலாந்து | $ 41,304 mill | 3.4 mill |

   1) நியூசிலாந்து உயர்ந்த வாழ்க்கைத்தரத்தைக் கொண்டுள்ளன.
   2) போர்த்துக்கல் நியூசிலாந்தைவிட இரண்டு மடங்கு வாழ்க்கைத்தரத்தைக் கொண்டதாக விளங்குகின்றது.
   3) சனத்தொகை வாழ்க்கைத்தரத்தை நிர்ணயிக்க போதுமானதல்ல.
   4) சனத்தொகை அதிகரிக்க வாழ்க்கைத்தரம் அதிகரிக்கும்.
   5) மேற்கூறிய எல்லாம் தவறு.

20. 2008ஆம் ஆண்டின் பாதீட்டு பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் எத்தனை சதவீதம்?
   1) 8.0 2) 7.7 3) 7.0
   4) 6.7 5) 6

தொடர்ச்சி அடுத்த வாரம் தொடரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

# தமிழ் - 01

கொழும்பு வலய பரீட்சை வினாத்தாள்

## பகுதி - 1

**தமிழ் கடந்த வார தொடர்ச்சி.....**

## பகுதி - 11

03. மானம் என்றஅதிகாரத்தினூடாக
   அ. தாம் தாழ்வதற்கு ஏதுவான செயல்களைச்.செய்யாமையின் சிறப்பு
   ஆ. உயர் குடிப்பிறந்தார் வறுமை வந்த போதும் தம்மியல்பினின்றும் வேறுபடாதி தன்மை
   இ. மானத்தின் பொருட்டு இறப்பதன் சிறப்பு

04. திருவடி சூட்டுபடலத்தில் பரதன் இராமனை அரசு ஏற்குமாறு வருத்திக் கூறுதலில் இருந்து இராமன் பரதனை மறுத்துக் கூறும் வரையுள்ள பகுதியில்
   அ. பரதன் இராமனை அரசு ஏற்குமாறு வருந்தி அழைத்த விதம்.
   ஆ. பரதன் வேண்டுகோளுக்கு இராமன் கூறிய பதில் நியாயங்களையும் விளக்குக.

05. இராஜநாயகம் குறுபான் கொடுத்த படலத்திலிருந்து
   அ. கஃபாவின் சிறப்பு
   அ. முகமுதுவின் சிறப்பு
   இ. சுலைமான் நபியின் சிறப்பு

06. இலங்கையர்கோனின் பாதரசம் என்ற சிறுகதையில் திருவிழாவிற்குச் செல்லும் நல்லம்மா, செல்லையா ஆகிய இருவருக்கும் இடையே நிலவும் அந்நியோன்யமும் நல்லம்மா மீது செல்லையா கொண்டிருக்கும் ஆழமான காதலும் வெளிப்படுத்தப்படும் முறையையும் விளக்குக.

07. இரட்சணிய யாத்திரிகத்தில் இயேசுபிரான் சிலுவை சுமந்த வகையினையும் பெண்களின் துன்ப நிலையையும் விளக்குக.

08. பாரதியாரின் புதுமைப்பெண் கவிதையில் பெண்விடுதலைக் கருத்துக்கள் வெளிப்படும் வகையினை தெளிவுபடுத்துக.

09. பின்வருவனவற்றில் மூன்றிற்கு சிறுகுறிப்பு வரைக.
   1) குற்றாலக் குறவஞ்சியில் வசந்தவல்லியின் அழகு.
   2) திருவாசகத் திருப்பள்ளியெழுச்சியில் காலைக் காட்சியும் அடியார்களது நிலையும்.
   3) சிலப்பதிகாரத்தில் கோப்பெருந்தேவியின் வருகை.
   4) ''உண்டாலம்ப'' பாடலில் சான்றோரின் சிறப்பு.
   5) கலிங்கத்துப் பரணியில் குலோத்துங்க சோழனின் வீரம்.

## தமிழ்மொழி - 11

**முதலாம் பகுதியிலுள்ள மூன்று வினாக்களுக்கும் இரண்டாம், மூன்றாம் பகுதியிலிருந்து ஒவ்வொரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி - 1

01. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பை தெரிந்து 350 - 400 சொற்கள் கொண்ட கட்டுரை அமைக்குக.
   அ. பேராசிரியர் க.கைலாசபதியின் தமிழ்ப்பணிகள்.
   ஆ. புகலிடத்தமிழ் இலக்கியங்கள்.
   இ. சூழல் மாசடைதல்.
   ஈ. தமிழ் வளர்ச்சிக்கு அச்சு ஊடகங்களின் பங்களிப்பு.
   உ. இன்றைய மாணவ சமுதாயத்துக்கு ஆங்கிலக்கல்வியின் அவசியம்.
   ஊ. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

02. பின்வரும் (அ) உரைப்பகுதியையும் (ஆ) செய்யுளையும் படித்து அவை ஒவ்வொன்றின் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

நல்ல பாட்டொன்றை நாம் படிக்க வேண்டிய முறையில் படித்தால் அது எமக்கு ஒரு சிறந்த இன்பத்தை அளிக்கும் என்பதை பாட்டைப் படித்து அனுபவித்த அறிஞர்கள் கூற்றாகும். இறைவன் கட்டுப்பாட்டைக்கேட்டு உருகும் இயல்பினனாதலின் ''பாட்டுக் குருகும் தமிழ் சொக்கநாதர்'' என்று குமரகுருபர சுவாமிகள் இறைவனைப் பாராட்டுகின்றார். ஒரு சிறந்த பாட்டைப் படிக்கும்போது மாசு மறு அற்ற இன்பத்தோடு கூடிய ஒரு அனுபவத்தை நாம் பெறுகின்றோம். எம்முடைய முயற்சியின் பயன் உண்மையில் அது ஒன்றுதான்; அவ்வின்பம் எத்தகையது என்பது பாட்டைப்படித்து அதன் பயனாகப் பெற்ற இன்பத்தை அனுபவித்த பின்பு தான் அப்பாட்டின் நயங்களை ஆராயப்புக வேண்டும். அங்ஙனம் ஆராய்தலை தான் நலன் ஆய்தல் என்று சொல்லுவது நல்ல பாட்டொன்றைப் படித்தபோதும் அது நம்மை உருக்கவில்லை என்று கண்டால் அது பாட்டின் பிழை எனக் கருதலாகாது; உண்மையில் அது நம்முடைய பிழைதான் பாட்டிலே உள்ள உணர்ச்சி அனுபவத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் நாம் எம்மை முதலில் வைத்துக் கொண்டு அதனைப்படிக்க வேண்டிய முறையில் படித்தால் அடைய வேண்டிய பயனை நாம் தடையின்றி அடையலாம் இல்லாவிடின் நாம் அதனை அடைய முடியாது.

   1) இப்பந்தியில் ஆசிரியர் கூறியவற்றை உமது உரைநடையில் இருபது சொற்களுள் சுருக்கி எழுதுக.
   2) நாம் பாட்டை எவ்வாறு படித்துப்பயன் பெறவேண்டும் என ஆசிரியர் கூறுகிறார்?
   3) நலன் ஆய்தல் என்றால் என்ன?

   ஆ. வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்
   பட்டுருவுங் கோல் பஞ்சிற் பாயாது - நெட்டிருப்புப்
   பாரைக்கு கோல் விடாப்பாறை பசுமரத்தின்
   வேருக்கு நெக்கு விடும்

   1) இச்செய்யுள் கூறுங்கருத்தை உமது நடையில் 30 சொற்களுக்குக் குறையாமல் விரித்து எழுதுக.
   2) இப்பாடலில் புலவர் கூற எடுத்துக்கொண்ட பொருள் எவ்வாறு வெளிப்படுத்தப் படுகிறது?

03. பின்வரும் பதினைந்து வினாக்கள் அ, ஆ, இ என மூன்று பகுதிகளைத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாகப் பத்து வினாக்களுக்கு விடை தருக.
   அ. 1) பின்வரும் சொற்களில் ''க'' இருவேறு விதமாக உச்சரிக்கப்படுகின்றது. உச்சரிப்பு வேறுபாட்டுக்கு ஏற்ப அச்சொற்களை வகைப்படுத்துக.
   2) கழி, களி ஆகிய சொற்களின் பொருள் வேறுபாடு புலப்படும் வகையில் அவற்றை வாக்கியங்களில் அமைத்துக்காட்டுக.
   3) ஆடு + குட்டி இச்சொற்கள் இயல்பாகவும் விகாரப்பட்டும் புணர்வதற்கு உதாரண வாக்கியங்கள் தருக.
   4) பின்வருவனவற்றுள் பகுபதங்களைத் தெரிந்து அவற்றைப் பிரித்துக்காட்டுக.
   காலம், நீளம், மணம், அகலம், சுடுசோறு, பவளவாய், நீநிலம், நாடு கடந்தான்.

   ஆ. 1) நண்டு, நாற்று, நாகரிகம், நன்மை, நண்ணல், நவ்வி, நங்கை, நன்னல் இவற்றில் உடனிலை மெய்மயக்கத்தையும் வேற்றுநிலை மெய்மயக்கத்தினையும்தெரிந்து எடுத்துக்காட்டுக.
   2) ரவி கனடா போயிருக்கிறான் இனி அமெரிக்கா போகப் போகிறான். இதில் இடம் பெற்றுள்ள துணை வினைகளை எடுத்துக்காட்டுக.
   3) வவுனியா, வானொலி, பட்டாசு, பாடசாலை, கடமை, கட்டுரை, நீர்வீழ்ச்சி இவற்றில் கூட்டுப் பெயர்களை எடுத்துக்காட்டுக.
   4) வகர மெய் நெட்டுயிர்களுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வருவதற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.
   5) என்னை, எங்களை ஆகிய சொற்களை புணர்ந்துள்ளவற்றைப் பிரித்துக்காட்டுக.

   இ. 1) பாடும் என்னும் சொல் முற்றாகவும் எச்சமாகவும் வர வாக்கியங்கள் எழுதுக.
   2) வானம் இருண்டிருக்கின்றது. இன்று மழை பெய்யாது ஆகிய இரு வாக்கியங்களையும் பொருத்தமான இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி இணைத்தெழுதுக.
   3) ''ஒவ்வொரு மனிதரும் தம் நாட்டிற்கு உழைத்திடல் அவசியம்'' இவ்வாக்கியத்தில் உள்ள மயக்கத்தைச் சுட்டிக்காட்டித் திருத்தி எழுதுக.
   4) அவளது கன்னம், அவளது கடிகாரம்
   இவ்விரு தொடர்களிலும் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபுகளையும் அதன் பொருளில் உள்ளவேறு பாட்டையும் எடுத்துக்காட்டுக.
   5) ''நீ இவ்வேலையைச் செய்து முடித்தால் நான் உன்னைச் சுற்றுலாவிற்கு அழைத்து செல்வேன்'' இங்கு ஆல் உருபு எப்பொருளில் அமைந்துள்ளது.

## பகுதி - 11

04. அ. சங்கமருவிய காலம் அறநூற்காலம் என்ற கூற்றினை ஆராய்க.
   ஆ. சங்கமருவிய காலத்தின் தொடர்ச்சியே பல்லவர் காலம் என்ற கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

05. அ. நாயக்கர்கால இலக்கியப் பண்புகளைத் தருக.
   ஆ. ஐரோப்பியர் காலத்தில் தமிழ் உரைநடை வளர்ச்சி பற்றி எழுதுக.

06. அ. இருபதாம் நூற்றாண்டு தமிழ்க்கவிதையின் சிறப்பியல்புகளைத் தருக.
   ஆ. அவ் இயல்புகள் பாரதிதாசனின் கவிதைகளில் காணப்படுமாற்றை விளக்குக.

## பகுதி - 111

07. அ. கி.பி 19ஆம் நூற்றாண்டு இலங்கைத்தமிழ் இலக்கியங்களின் போக்குகளை ஆராய்க.
   ஆ. அந்நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கான ஆறுமுகநாவலரின் பங்களிப்பினை மதிப்பிடுக.

08. அ. 1960கள் வரை இலங்கையில் தமிழ்ச்சிறுகதை வளர்ந்த வரலாற்றினை விளக்குக.
   ஆ. தமிழ்ச் சிறுகதையின் உருவ உள்ளடக்க வளர்ச்சிக்கு இலங்கையர்கோன் ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுக.

09. பின்வரும் இருவரினதும் தமிழ்த் தொண்டினை எழுதுக.
   அ. சி.வை தாமோதரம்பிள்ளை.
   ஆ. நவாலியூர் சோமசுந்தரப்பிள்ளை.
   இ. சி.வி வேலுப்பிள்ளை.
   ஈ. பேராசிரியர் ம.மு உவைஸ்
   உ. கே.டானியல்

நன்றி
'கொழும்பு வணிகவள
நிலையம்.

விடைக்குறிப்புக்கள் அடுத்தவாரம் வெளிவரும்......

# க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான வினா-விடை

# புவியியல்-02

ஆசிரியர்:-
L.C.JANJABEEL B.A (Hons), Geography (sp),
Toppur - Trincomalee
Former Lecturer in Jamiah Naleemiya, Beruwela.

## பௌதிகப் புவியியல், பகுதி-11

### பகுதி ''அ'' - சூழல் மூலகங்கள்

01. 1) பாலைவனப் பிரதேசங்களில் காற்றினால் உருவாகின்ற மூன்று அரித்தல் நில உருவங்களை விளக்கப்படங்களின் உதவியுடன் விவரிக்குக.
   2) பாலைவனச் சூழலுக்கு ஏற்ப (1) தாவரங்களும் (2) விலங்கினங்களும் எவ்வாறு தம்மை இசைவாக்கம் செய்துகொள்கின்றன என்பதை விளக்குக.

02. 1) புவியோட்டினைச் சுருக்கமாக விவரிக்குக.
   2) சீயல், சீமா படைகளின் அமைப்பினை விவரிக்குக.
   3) புவியோட்டின் அசைவுகளைத் தகட்டோட்டக் கொள்கை (Plate Tectonic Theory) எந்தளவிற்கு விளக்குகிறது என்பதனை ஆராய்க.

03. 1) சுனாமி அலை எவ்வாறு சாதாரண கடலலையிலிருந்தும் வேறுபடுகின்றது என்பதை விளக்குக.
   2) கடலலையின் செயற்பாடு காரணமாக அரித்தலினால் ஏற்படும் இரண்டு நிலவுருவங்களையும் படிதலினால் ஏற்படும் இரண்டு நிலவுருவங்களையும் பெயரிடுக.
   3) மேலே இவ்வினாவின் பகுதி (2)இற்கு நீர் குறிப்பிட்ட நிலவுருவங்களில் வகை ஒன்றைத் தெரிவுசெய்து அவற்றின் உருவாக்கத்தை புனையா வரைபடங்களின் உதவியுடன் விவரிக்குக.

04. 1) மண் உருவாக்கத்திற்கு ஏதுவாயமையும் காரணிகளைச் சுருக்கமாக விவரிக்குக.
   2) இலங்கையின் ஈரவலயத்தில் காணப்படும் பிரதான மண்வகைகள் நான்கினைப் பெயரிடுக.
   3) பகுதி (2)இற்கு உம்மால் பெயரிடப்பட்டவற்றுள் எவையேனும் இரு மண்வகைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றின் பிரதான பண்புகளை விவரிக்குக.

05. 1) புவியோட்ட அசைவு என்றால் என்ன?
   2) புவியோட்ட அசைவுடன் தொடர்புபட்ட நான்கு நிலவுருவங்களைப் பெயரிடுக.
   3) நீர் குறிப்பிட்ட நிலவுருங்களில் இரண்டினைத் தெரிந்து, அவற்றின் உருவாக்கத்தினை விளக்கப்படங்களின் துணையுடன் விளக்குக.

06. 1) ஒரு வரிப்படத்தினைப் பயன்படுத்தி நீரியல் வட்டத்தின் செயன்முறையை விளக்குக.
   2) மேற்பரப்புக் கழுவு நீரோட்டத்தினைப் பாதிக்கும் மூன்று பிரதான பௌதிக அம்சங்களை இனங்கண்டு விவரிக்குக.

07. 1) மலைப் பனிக்கட்டி ஆற்றும் தொடர்பான மூன்று தின்னல் நிலவுருவங்களைப் பெயரிடுக.
   2) நீர் குறிப்பிட்ட மூன்று தின்னல் நிலவுருவங்களினதும் உருவாக்கத்தினைப் பொருத்தமான விளக்கப்படங்களின் துணையுடன் விவரிக்குக.

### பகுதி ''ஆ'' - சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும்

08. 1) கோளம் வெப்பமாதல் என்பதன் கருத்து யாது?
   2) கோளம் வெப்பமாதல் தொடர்பாக மனித இனம் ஏன் கவனமெடுக்க வேண்டும் என்பது பற்றிச்சுருக்கமாக எடுத்துக்கூறுக.
   3) கோளம் வெப்பமாதலைத் தடுப்பதற்கு உலக அரசுகள் மேற்கொள்ள வேண்டிய பிரதான நடவடிக்கைகளை விவரிக்குக.

தொடர்ச்சி அடுத்தவாரம் வெளிவரும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

# இரசாயனவியல் - 01 கொழும்பு வலய பரீட்சை வினாத்தாள்

01. a - துணிக்கையின் ஆரை வரிசை cm இல்,
1) $10^{-7}$ 2) $10^{-8}$ 3) $10^{-10}$
4) $10^{-6}$ 5) $10^{-12}$

02. $^{12}_{6}C$ சமதானியின் ஒரு அணுவின் திணிவு,
1) 6g 2) 12g 3) 1a.m.u
4) 12a.m.u 5) 6a.m.u

03. பன்சன் சுடரடுப்பில் $CO_2$ஐ கொடுக்காதது,
1) $NaHCO_3$ 2) $(NH_4)_2CO_3$ 3) MgCO
4) $PbCO_3$ 5) $BaCO_3$

04. 100ml, 3M $H_2C_2O_4$(aq) உடன் முற்றாக தாக்கமுறுவதற்கு தேவையான 2M NaOHஇன் கனவளவு mlஇல்
1) 300 2) 150 3) 100
4) 75 5) தரவு போதாது.

05. $2NH_{3(g)} \rightarrow N_{2(g)} + 3H_{2(g)}, \Delta H = +92kJ$ ஆயின் $NH_3$(g)இன் தோன்றல் வெப்பம் $kJmol^{-1}$இல்
1) +46 2) +92 3) -46
4) -92 5) பிணைப்பு சக்திகள் தராது கணிக்க முடியாது.

06. ஒரு கட்டமைப்பின் Cis - Trans சமபகுதியங்களைப்பற்றி அனேகமாக உண்மையானது,
1) அவை தளமுனைவாக்கிய ஒளிக்கற்றையை திசை திருப்பும்.
2) அவை ஒரே இரசாயன இயல்புகளைக் கொண்டிருக்கும்.
3) அவை ஒரே பௌதிக இயல்புகளைக் கொண்டிருக்கும்.
4) அவை ஒரே தொழிற்பாட்டு கூட்டங்களைக் கொண்டிருக்கும்.
5) மேலுள்ள எல்லாக்கூற்றும் பொய்யானவை.

07. பின்வருவனவற்றுள் அதிகூடிய pH உடையது,
1) 0.1MHCl 2) 0.1M HCOOH 3) $0.1MFeCl_3$
4) $0.1M(NH_4)_2SO_4$ 5) நீர்.

08. 0.9g உலோகம் M, HClஇல் கரைத்தபோது $M^{3+}$ அயனை உருவாக்குவதோடு STPஇல் $1120cm^3H_2$ ஐ வெளிவிட்டது. Mஇன் சாராணுத்திணிவு அண்ணளவாக,
1) 18 2) 27 3) 36
4) 56 5) 90

09. ஒரு மூலகத்தின் ஒட்சைட்டின் நீர்க்கரைசல் அமில இயல்புடையது. அம்மூலகத்தின் ஐதரைட்டின் நீர்க்கரைசல் கார இயல்புடையது. அம்மூலகம்.
1) கல்சியம். 2) இலிதியம். 3) நைதரசன்.
4) சிலிக்கன். 5) அயடீன்.

10. $0^0C$இலும் latmஇலும் எவ்வாயுவின் lgமிகக்கூடிய கனவளவைக் கொள்ளும்?
1) எதேன். 2) புளோரீன். 3) ஐதரசன் சல்பைட்.
4) ஒட்சிசன். 5) நேயன்.

11. ஒரு வெண்திண்மத்தின் கரைசலுக்கு $AgNO_3$(aq) சேர்க்க வீழ்படிவு பெறப்பட்டது. ஆனால் $Na_2SO_4$ சேர்த்தபோது வீழ்படிவு உருவாகவில்லை. இவ்வெண்திண்மத்திற்கு செறி $H_2SO_4$ சேர்த்து வெப்பமேற்ற கபில நிறவாயு வெளியேறியது. அத்திண்மம்,
1) $NaNO_3$ 2) CuBr 3) $CaBr_2$
4) NaBr 5) KCl

12. பின்வரும் சமன்பாட்டினை சமப்படுத்தும்போது பெறும் எண்கள் முறையே? $MnO_4^- + ?C_2O_4^{2-} + ?H^+ \rightarrow ?Mn^{2+} + ?CO_2 + ?H_2O$
1) 1, 3, 8, 1, 5, 4 2) 2, 5, 16, 2, 10, 8 3) 1, 2, 10, 1, 1
4) 2, 5, 10, 2, 16, 8 5) மேலுள்ள எதுவுமல்ல.

13. பின்வரும் தாக்கத்தொடரில் yஐ இனம் காண்க.

$CH_2 = CH_2$ கார $KMnO_4$ $X \xrightarrow[nrwpH_2SO_4,]{CH, COOH} Y$

1) $CH_3OCOCH_2CH_2COOCH_3$
2) $CH_2OHCH_2OH$
3) $CH_3COOC_2H_5$
4) $CH_3COOCH_2CH_2OCOCH_3$
5) $CH_3OCOCH_2CH_2OCOCH_3$

14. $C_7H_8O$ எனும் மூலக்கூற்று சூத்திரமுடைய Aromatic வளையத்தைக் கொண்ட அற்ககோல் வகை சமபகுதியங்கள் எத்தனை?
1) 3 2) 4 3) 5
4) 6 5) மேலுள்ள எதுவுமல்ல.

15. $25^0C$இல் $A(OH)_2$ எனும் அரிதிற் கரையும் அயன்சேர்வையின் கரைதிறன் பெருக்கம் $4 \times 10^{-12} mol^3/l^3$ ஆகும். $25^0C$இல் $A(OH)_2$இன் நிரம்பற் கரைசலின் POH
1) 4 - log2 2) 4 + log2 3) 10 - log2
4) 10 + log2 5) 12 - log4

16. அமில $KMnO_4$ஐ நிறநீக்கம் செய்துவம் 2, 4 - DNPH உடன் வீழ்படிவைத் தருவதுமான சேர்வை பின்வருவனவற்றுள் எது?
1) $CH_3COCH_2COOH$ 2) $CH_2 = CH - COOH$ 3) $CH_3CHOHCOOH$
4) $CH_3CH_2CH_2CHO$ 5) $CH_3COOCH_2CH_3$

17. நீரில் கரையாத ஆனால் HClஇல் கரைக்கப்பட்ட உலோகம் Mஇன் உப்பொன்றின் கரைசலினுள் $H_2S$ செலுத்த வீழ்படிவு இல்லை ஆனால், இக்கரைசலுக்கு நீர் சேர்த்து நன்கு ஐதாக்கிய பின் $H_2S$ செலுத்த மஞ்சள் வீழ்படிவு தோன்றியது எனின், Mஇன் உப்பு,
1) $CuSO_4$ 2) $BiCl_3$ 3) $CuCO_3$
4) $Al_2(CO_3)_3$ 5) $Pb(NO_3)_2$

18. A, B, C, Dஎனும் அடுத்துவரும் 4 மூலகங்களின் 2ஆம் அயனாக்கற் சக்திகள் த. பட்டுள்ளன.

| A | B | C | D |
|---|---|---|---|
| 1750 | 1820 | 640 | 7?0kJ/mol |

நீரில் கரைந்து ஒரு வன்காரத்தைத் தரும் ஒட்சைட்டை உருவாக்கக்கூடியது,
1) A 2) B 3) C
4) D 5) எதுவுமல்ல.

19. உலோக மூலகம் X ஒரே ஒரு ஒட்சியேற்ற நிலையை மட்டுமே சேர்வைகளில் கொள்ளும். Xஇன் அனேக உப்புக்கள் வெள்ளை நிறமுடையன. Xஇன் இலத்திரன் நிலையமைப்பு பின்வருவனவற்றில் எதுவாக இருக்கலாம்?
1) $ls^22s^22p^3$ 2) $ls^22s^22p^63s^23p^63d^34s^2$ 3) $ls^22s^22p^63s^23p^63d^{10}4_s^2$
4) $ls^22s^22p^63s^23p^2$ 5) $ls^22s^22p^63s^23p^63d^54s^2$

20. மூலகம் ஒன்றின் அவெண்ணைத் துணிய பயன்படும் முறை,
1) திணிவு நிறமாலை.
2) $\alpha$ - சிதறல் பரிசோதனை.
3) X கதிர் நிறமாலை.
4) மின்பகுப்பு விதிகள்.
5) பொருத்தமான விடை தரப்படவில்லை.

21. நீரும் அதனுடன் முற்றிலும் கலக்கும் தகவுள்ள சேதன திரவம் Lஇனதும் (சா.மூ.தி = 72) தொகுதி $50^0C$ இல் latmஇல் கொதித்தது. காய்ச்சி வடித்த திரவத்தில் திணிவுப்படி நீர்: L = 1 :12 ஆக அமைந்தால் $50^0C$இல் L இன் நிரம்பலாவி அமுக்கம் cmHgஇல்,
1) 57 2) 19 3) 76
4) 38 5) 85

22. M (s) $M^{2+}_{aq}$ // $H^+_{aq}$/ $H_{2(g)}$, Pt என்ற கலத்தின் நியம மின்னியக்க விசை 0.48 V ஆயின் பின்வரும் கூற்றுகளில் தவறானது,
1) $E^\theta_{M^{2+}}/m = +0.48V$
2) அனோட்தாக்கம் $M \rightarrow M^{2+} + 2e$
3) கலத்தாக்கம் $M + 2H^+ \rightarrow M^{2+} H_2$
4) கலத்தின் அகச்சுற்றில் Mஇன் மின்வாயிலிருந்து Hமின் வாய்க்கு நேரயன்கள் செல்லும்.
5) $H^+_{aq}$ / $H_2$ மின்வாய் நேர் முனைவாகும்.

23. ஒரு லீற்றர் $Ca_3(PO_4)_2$இன் நிரம்பற் கரைசலில் $2 \times 10^{-5}$ mol இருப்பின் $Ca_3(PO_4)_2$இன் கரைதிறன் பெருக்கம் mol / l சார்பாக
1) $4 \times 10^{-10}$ 2) $1.08 \times 10^{-23}$ 3) $1.08 \times 10^{-27}$
4) $1 \times 10^{-25}$ 5) $3.45 \times 10^{-23}$

24. $N_2O_{4(g)}$ $2NO_{2(g)}$ என்ற சமநிலையில் 0.5mol $N_2O_4$ உம் 0.25mol $NO_2$ உம் காணப்பட்டதாயின் $N_2O_4$இன் கூட்டற் பிரிகை வீதம்,
1) 50 2) 33.33 3) 66.67
4) 25 5) கணிக்க முடியாது.

25. புறப்பன் -2- ஓல் ஆனது புறப்பன் -1- ஓல் அக மாற்றப்பட பயன்படக்கூடிய தாக்கிகளின் ஒழுங்கமைப்பு
1) $H_2SO_4/HBr/H_2SO_4$ 2) $H_2SO_4/HBr, H_2O_2/NaOH$
3) $NaOH/HBr, H_2O_2/H_2SO_4$ 4) $Al_2O_3/H_2SO_4$
5) $Al_2O_3/HBr/NaOH$

26. $BiCl_3$ ஆனது மிகை நீரில் கரைக்கப்பட்ட பின்வரும் சமநிலையில் $BiCl_{3(aq)} + H_2O_{(l)}$ $BiCl'' + 2HCl_{(aq)}$இதன் Kcஇற்கு சிறப்பாக பொருந்துவது
1) $\dfrac{[BiOCl][HCl]^2}{[BiCl_3][H_2O]}$ 2) $\dfrac{[HCl]}{[BiCl_3][H_2O]}$
3) $\dfrac{[HCl]^2}{[BiCl_3]}$ 4) $\dfrac{[HCl]}{[BiCl_3][H_2O]}$
5) $\dfrac{[BiOCl][HCl]}{[BiCl_3][H_2O]}$

27. பின்வருவனவற்றுள் மிகையான எப்பதார்த்தத்துடன் 2mol $H_2O$ தாக்கும்போது குறைவான கனவளவு வாயு வெளிவிடப்படும் (ஒரே வெப்ப அமுக்கத்தில்)
1) $BaH_2$ 2) $AlH_3$ 3) NaH
4) $CH_3MgBr$ 5) Ba

28. பென்சீன் டயசோனியங் குளோரைட்டு கரைசலை வெப்பமேற்றும்போது எந்நோக்கல் நோக்கப்படும்,
1) மஞ்சள் நிறதிரவம் தோன்றும்.
2) நிறமற்ற வாயுக்குமிழி வெளியேறும்.
3) செங்கபில வாயுக்குமிழி வெளியேறும்.
4) செந்நிறச் சாயம் தோன்றும்.
5) மேலுள்ள எதுவுமல்ல.

29. ஐதான குளிர்ந்த கார $KMnO_4$இன் நிறத்தை நீக்கும் சாத்தியம் கூடியது,
1) தொலுயீன். 2) சினமல்டிகைட். 3) அசற்றல்டிகைட்.
4) எதனோல். 5) பென்சீன்.

30. ஆவர்த்தன அட்டவணையில் காபனும், சிலிக்கனும் ஒரே கூட்ட மூலகங்கள் சோடியம் சிலிக்கேற்றின் சூத்திரம் யாது?
1) $NaSiO_2$ 2) $NaSiO_3$ 3) $Na_2SiO_3$
4) $Na_2SiO_4$ 5) $NaSiO_4$

**31 - 40 வரையான வினாக்களுக்கான அறிவுறுத்தல்கள்.**
**1) a, b சரியாயின் 2) b, c சரியாயின் 3) c, d சரியாயின்**
**4) a, b சரியாயின் 5) வேறு**

31. பீனோலுடன் தாக்கமடையக் கூடியது/கூடியனவ?
a) $C_6H_5N_2HSO_4$ b) $CH_3CH_2ONa^+$ c) $CH_3MgBr$
d) $HNO_3$

32. எதேனைத் தயாரிக்கும் முறைகள் எது/ எவை?
a) கல்சியம் காபைட்டுக்கு நீர் சேர்த்தல்.
b) 1, 2 - இருபுரோமோ எதேனை அற்ககோல் சேர் எரிபொற்றாசுடன் வெப்பமேற்றல்.
c) 1, 1 - இருபுரோமோ எதேனை அற்ககோல் சேர் எரிபொற்றாசுடன் வெப்பமேற்றல்.
d) எதிலீன் கிளைக்கோலுக்கு அற்ககோல் சேர் எரிபொற்றாசுடன் வெப்பமேற்றல்.

தொடர்ச்சி அடுத்த வாரம் வெளிவரும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

# கணக்கீடு - 01

பொதுப்பரீட்சை முன்னோடி
வினாத்தாள்,
கொழும்பு வலயம்

## பகுதி - 1

### கடந்தவாரத் தொடர்ச்சி (14.04.2009).....

24. அட்டுறு முறையை காட்டிலும் காசுமுறை கணக்கீடு பின்பற்றப்படும் போது நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பின்பற்றப்படுகின்ற மீறப்படுகின்ற எண்ணக்கருக்கள் தலா இரண்டு விதம் தருக.

.................................................................................................................

.................................................................................................................

25. நிறுவனம் ஒன்றினது வியாபார நடவடிக்கை தொடர்பான பெறுமதிசேர் வரி வீதம் 10% குறித்த காலத்தில் 200,000 கிரயமான பொருட்களை கொள்வனவு செய்து கொள் விலையுடன் 50% இலாபம் சேர்த்து விற்பனை செய்திருப்பின் இது தொடர்பான கடன் படுநர் கணக்கு, கடன் கொடுநர் கணக்கு, Vat கணக்கு, வியாபார கணக்குகளில் இடம் பெறும் பதிவுத் தொகைகள் யாது?

.................................................................................................................

.................................................................................................................

26. பங்குடைமையின் அடிப்படை அம்சங்கள் எவை?

.................................................................................................................

.................................................................................................................

27. இருப்பு மதிப்பீடு தொடர்பில் SLAS - 05 இற்கு அமைய பின்பற்றக்கூடிய மதிப்பீட்டு முறை கள் இரண்டு எவை?

.................................................................................................................

28. A, B, C ஆகியோர் 4:3:2 எனும் விகிதங்களில் இலாப நட்டங்களை பகிர்பவர்கள் இவர்கள் தமது இலாப நட்ட விகிதங்களில் 5:3:2 என மாற்றினர். எனின், ABC இடையே இலாப இழப்பு இலாப சேர்க்கை தொடர்பான தாக்க விகிதம் யாது?

.................................................................................................................

29. பெறுமானத் தேய்வை தீர்மானிக்கும் காரணிகள் எவை?

.................................................................................................................

.................................................................................................................

30. சொத்துக்கள் பொறுப்புக்களை திரவ நிலைப்பட்டியலிடுவதற்கு அடிப்படையாக அமையும் எண்ணக்கருக்கள் இரண்டு தருக.

.................................................................................................................

* **31 - 35 வரையான வாக்கியங்களை சரியான பதங்களை இட்டு பூரணப் படுத்துக.**

31. வியாபாரக் கழிவானது பட்டியல்களில் பதியப்பட்ட போதும் ...................................... பதிவு ......................................

32. சொத்தொன்றின் முழுமையான கிரயம் என்பது ........................... ........................... ஆகியவற்றை உள்ளடக்கும்.

33. வங்கி தவறாக வரவு வைத்த 10,000 ரூபா காசோலை காசேட்டு மீதியை ............................... வங்கி கூற்று மீதியை.................................. காட்டும்.

34. விசேட நன்கொடை மூலம் பெறப்பட்ட நிதி உரிய செயற்பாட்டில் பயன்படுத்தப்பட்டு இருப்பின் ........................................ இருந்து ................................... க்கு மாற்றப்படும்.

* **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் கூறுக.**

36. கொடுக்கல்வாங்கல்களையும் நிகழ்வுகளையும் அவை நிகழ்ந்த சந்தர்ப்பத்திலேயே பதிவு செய்து வரலாற்றுக்கிரய அடிப்படை ஆகும். (..................)

37. சொத்துக்களிலான அதிகரிப்பு எப்போதும் உரிமையில் மாற்றத்தை தராது. (..................)

38. கடன்கொடுநர் கழிவு ஏற்பாடு தேறல் எண்ணக்கருவுக்கு அமைவானது. (..................)

39. பொறி ஒன்றின் தேறிய புத்தக பெறுமதி ஐந்தொகையில் காட்டப்படுவது தேறல் எண்ணக்கருவின் அடிப்படையாகும். (..................)

40. வருமானச்செலவுக் கணக்குகள் காசு அடிப்படையிலும் தயாரிக்கப்பட முடியும் (..................)

## கணக்கீடு - 01

### பகுதி - 11

* **1ஆம் வினாவுக்கும் வேறு நான்கு வினாக்களுக்கும் ஆக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. அஜிதன், ரஜிதன், விஜிதன் ஆகிய மூவரும் இலாப நட்டங்களை 5:3:2 என்ற விகிதம் பகிர்வது என்ற அடிப்படையில் பின்வரும் உடன்படிக்கையுடன் வியாபாரமொன்றை நடத்தி வருகின்றனர்.
   * மூலதன கணக்கு மீதிகட்கு ஆண்டுக்கு 12% வட்டி
   * பங்காளர் ஒவ்வொருவரும் மாதாந்தம் 5000 ரூபாவை சம்பளமாக பற்றுவ்தற்கு உரித்துடையவர்கள்.
   * அஜிதனின் வாகனம் பங்குடமையின் வியாபார தேவைக்கு பயன்படுத்துவதால் மாதாந்தம் 4000 ரூபா வாடகை அஜிதனுக்கு செலுத்தப்பட வேண்டும்.
   * பற்றுக்கட்கு ஆண்டுக்கு 6% வட்டி
   * பங்காளியின் மேலதிக கடன் முற்பணங்களுக்கு ஆண்டு 20% வட்டி

30.06.2008இல் விஜிதன் பங்குடமையில் இருந்து இளைப்பாற அத்தினத்தில் அனுஜன் இலாபத்தில் 1/5 பங்கினை பெறும் நோக்குடன் பங்குடமைப் பங்காளராக இணைந் தார் உடன்படிக்கையின் ஏனைய அம்சங்கள் மாற்றமில்லை. சேரல் விலகலின் பொரு ட்டு பங்குடமையின் நன்மதிப்பு 250,000 ரூபாவாக மதிப்பிடப்பட்டதுடன் தொடர்ந்து ஏடுகளில் காட்டுவது என தீர்மானிக்கப்பட்டது. 31/12/2008இல் முடிவுற்ற ஆண்டு க்கான வியாபார க/கு தயாரித்த பின் பரீட்சை மீதி வருமாறு:-

| பரீட்சை மீதி | 000 ரூபா | 000 ரூபா |
|---|---|---|
| மூலதனம் - அஜிதன் | | 400 |
| - ரஜிதன் | | 300 |
| - விஜிதன் | | 200 |
| - அனுஜன் | | 200 |
| நடப்புக்கணக்கு - அஜிதன் | | 50 |
| - ரஜிதன் | | 30 |
| - விஜிதன் | | 20 |
| பற்று - அஜிதன் | 148 | |
| - ரஜிதன் | 100 | |
| - விஜிதன் | 50 | |
| - அனுஜன் | 50 | |
| நிர்வாகச் செலவுகள் | 86 | |
| விநியோக செலவுகள் | 54 | |
| நிதிச்செலவு | 14 | |
| ஏனையசெலவு | 6 | |
| காணிகட்டடமும் தேய்வு ஏற்பாடும் | 500 | |
| பொறிகளும் தேய்வு ஏற்பாடு | 600 | 150 |
| தள்பாடமும் தேய்வு ஏற்பாடும் | 200 | 250 |
| இருப்பு | 60 | 50 |
| மொத்தலாபம் | | |
| வியாபார கடன்பட்டோரும் கொடுத்தோரும் | 140 | 580 |
| அறவிடமுடியாக்கடனும் ஐயக்கடன் ஏற்பாடும் | 10 | 120 |
| நன்மதிப்பு | 100 | 20 |
| வங்கி | 252 | |
| | 2370 | 2370 |

**மேலதிக தகவல்கள்**

1. அனுஜன் மூலதனமிட்ட தொகை தவிர சேரல் விலகல் தொடர்பில் எதுவித பதிவு களும் இடம்பெறவில்லை.
2. விலகும் பங்காளியின் தொகையில் 200,000 பங்குடமையில் கடனாக விடப்படு வதுடன் மிகுதி நிதியாண்டு முடிவில் கொடுத்து தீர்க்கப்படவேண்டும். (இவ் வாண்டுக்கு கடன் வட்டி இல்லை)
3. பங்காளரின் பற்றுக்களில் அவர்கள் சம்பளமாக எடுத்த தொகைகளும் அடங்கி உள்ளன. பற்றுக்கள் ஒரே சீரான அளவில் மாத நடுப்பகுதிகளில் பற்றப்பட்டன.
4. அஜிதனின் வாகன வாடகை செலுத்தப்பட்டது 48,000/= அவரது பற்றுக்களில் வரவு வைக்கப்பட்டது.
5. நிலையான சொத்துக்கள் மீது ஆண்டுக்கு 10% நேர்கோட்டு முறையில் தேய்விடப் படுகின்றது.
6. ஐயக்கடன் ஏற்பாடு கடன்பட்டோரில் 5% ஆகும்.

தயாரிக்குக.

1. 31/12/2008இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டக்கணக்கும் பகிர்கணக்கும் பங்காளர் நடப்பு கணக்குகள்
2. 31/12/2008இல் ஐந்தொகை (20 புள்ளிகள்)

---

02. அ. ரமேசன் நிறுவனத்தால் வியாபார கொடுக்கல்வாங்கல்கள் சில பின்வரும் கணக் கீட்டுச் சமன்பாட்டில் தரப்பட்டுள்ளன.

| | நிலையான சொத்து + | நடப்பு சொத்து = | மூலதனம் + | பொறுப்பு |
|---|---|---|---|---|
| 1. | 25,000 | (10,000) | 15,000 | |
| 2. | | (10,000) | | |
| | | 20,000 | | 10,000 |
| 3. | (2,500) | | (2,500) | |
| 4. | | (25,000) | (1,000) | |
| | | 24,000 | | |
| 5. | | (7,000) | (7,000) | |
| 6. | | 40,000 | 40,000 | |
| 7. | | (15,000) | 3,000 | (18,000) |
| 8. | | (12,000) | (12,000) | |

மேற்காட்டிய தாக்கங்களில் 1, 8 நடவடிக்கைகள் இலாபத்தில் தாக்கத்தை ஏற்படுத் தாதவை ஆகும்.

1. மேற்படி நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் விவரிக்குக.
2. இந்நிறுவனம் விற்பனைகள் மீது 50% இலாபம் வைத்து செயற்படுமென கருதி கொடுக்கல்வாங்கல்களை விபரித்தன்மையின் அடிப்படையில் வருமானக்கூற்றைத் தயாரிக்குக.
3. இக்காலப்பகுதியில் தேறிய சொத்தில் ஏற்பட்ட அசைவை கணிக்குக.

(08 புள்ளிகள்)

ஆ. நிறுவனம் ஒன்று கடன்படுனர் மீது கடன் வயது பகுப்பாய்வு அடிப்படையில் ஐயக் கடன் ஏற்பாட்டை மேற்கொள்கிறது 31/12/2008இல் கடன்படுனதரர்களின் பகுப் பாய்வும் அவற்றுக்குரிய ஏற்பாட்டு விகிதமும் வருமாறு:-

| கடன்காலம் | கடன்தொகை | ஐயக்கடன் ஏற்பாட்டு வீதம் |
|---|---|---|
| 0 < 30 நாட்கள் | 180,000 | 2% |
| 31 < 90 நாட்கள் | 90,000 | 5% |
| 91 < 180 நாட்கள் | 60,000 | 10% |
| 181 > நாட்கள் | 30,000 | 50% |

1. ஐயக்கடன் ஏற்பாட்டில் இருக்கவேண்டிய தொகை யாது?
2. ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கில் ஆரம்ப மீதியாக 25,000 ரூபா இருப்பின் இலாப நட்டக்கணக்கில் தாக்கல் செய்யவேண்டிய ஐயக்கடன் தொகை யாது?

(02 புள்ளிகள்)

நன்றி
கொழும்பு வணிகவள
நிலையம்.

தொடர்ச்சி அடுத்தவாரம் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

# கணக்கீடு - 01

பொதுப்பரீட்சை முன்னோடி
வினாத்தாள் கொழும்பு வலயம்.

## பகுதி-11

## விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி (14.04.2009)....

04. அ. 1) கடன்படுநர் கணக்கொன்று செலவு மீதியாக மாறுவதற்கான காரணங்கள்,
1. கடன்படுநர் காசு அதிகமாக செலுத்துதல்.
2. காசு செலுத்தியதன் பின்னர் கழிவு அனுமதித்தல்.
3. காசு செலுத்தியதன் பின் உட்திரும்பல் இடம்பெறல்.
4. கொள்கலன் அடிப்படையில் வியாபாரம் இடம்பெறல்.

திருத்திய கடன்கொடுநர் கட்டுப்பாட்டு க/கு

| | | | |
|---|---|---|---|
| தவறு | 6,000 | மீதி | 68,000 |
| வெளித்திரும்பல் | 3,000 | பெற்றகழிவு | 1,800 |
| எதிரீடு | 5,000 | | |
| மீ/செ | 55,800 | | |
| | 69,800 | | 69,800 |
| | | மீ/வ | 55,800 |

கடன்கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கிணக்கக்கூற்று

| விவரம் | தொகை | தொகை |
|---|---|---|
| திருத்திய கடன்கொடுநர் கட்டுப்பாட்டு க/கு மீதி | | 55,800 |
| (+) தவறு | 7,000 | |
| வெளித்திரும்பல் | 3,000 | |
| காசு | 7,000 | 17,000 |
| | | 72,800 |
| (-) கழிவு | 1,800 | (1,800) |
| கடன்கொடுநர் பட்டோலை மீதி | | 71,000 |

பொதுநாட்குறிப்பு

| | விவரம் | வரவு | செலவு |
|---|---|---|---|
| 1. | கடன்கொடுநர் கட்டுப்பாட்டு க/கு | 6,000 | |
| | கொள்வனவு க/கு | | 6,000 |
| | (கொ/வு தினசேரி கூட்டி பதிந்தமை திருத்தப்பட்டது) | | |
| 2. | கடன்கொடுநர் கட்டுப்பாட்டு க/கு | 3,000 | |
| | வெளித்திரும்பல் க/கு | | 3,000 |
| | (வெளித்திரும்பல் 3,000 ஏடுகளில் பதியப்பட்டது) | | |
| 3. | கடன்கொடுநர் கட்டுப்பாட்டு க/கு | 5,000 | |
| | கடன்படுநர் கட்டுப்பாட்டு க/கு | | 5,000 |
| | (எதிரீடு 5,000 க/கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கில் பதியப்பட்டது) | | |
| 4. | தொங்கல் க/கு | 1,800 | |
| | கடன்கொடுநர் கட்டுப்பாட்டு க/கு | | 1,800 |
| | (பெற்றகழிவு 1800/=ஆல் கூட்டி பதிந்தமை திருத்தப்பட்டது) | | |

05. அ. கணக்கீட்டு கொள்கைகள்

நிறுவனமொன்றின் நிதி அறிக்கைகள் தயாரிப்பதற்கு அடிப்படையாக உள்ள ஆரம்பநியதிகள், வழக்காறுகள், சட்டதிட்டங்கள் என்பன கணக்கீட்டு கொள்கைகள் எனப்படும்.

ஆ. 1) நிதியறிக்கைகள் தயாரிக்கப்படும்போது பொதுத் தன்மையை ஏற்படுத்த.
2) இலகுவாக புரிந்துகொள்ள.

இ. 1) பொருத்தமற்றது.
அலகுசார் எண்ணக்கரு மீறப்பட்டுள்ளது.
2) பொருத்தமானது.
வரலாற்று கிரய எண்ணக்கரு
3) பொருத்தமானது.
அட்டுறு எண்ணக்கரு.
4) பொருத்தமற்றது.
பொருண்மை எண்ணக்கரு மீறப்பட்டுள்ளது.
5) பொருத்தமற்றது.
பாதுகாப்பு எண்ணக்கரு மீறப்பட்டுள்ளது.

ஈ. அறவிடமுடியா ஐயக்கடன் ஏற்பாட்டு க/கு

| | | | |
|---|---|---|---|
| அ.மு.க | 1,300 | மீ/வ | 2,400 |
| இ/ந க/கு | 1,200 | மீ.பெ.அ.மு.க | 2,800 |
| மீ/செ | 2,700 | | |
| | 5,200 | | 5,200 |
| | | மீ/வ | 2,700 |

06. அ.

| | | | | |
|---|---|---|---|---|
| A | 1,000 x 10 | 10,000 | 1,000 x 7 | 7,000 |
| B | 800 x 12 | 9,600 | 800 x 14 | 11,200 |
| C | 1,600 x 8 | 12,800 | 1,600 x 10 | 16,000 |
| D | 1,500 x 15 | 22,500 | 1,500 x 14 | 21,000 |
| | | 54,900 | | 55,200 |

1) மொத்த இருப்பு அடிப்படையில் இறுதி இருப்பின் பெறுமதி 54,900
2) உருப்படி அடிப்படையில் ஐந்தொகையில் காட்டப்படவேண்டிய இறுதி இருப்பின் பெறுமதி 50,400

| | |
|---|---|
| A | 7,000 |
| B | 9,600 |
| C | 12,800 |
| D | 21,000 |
| | 50,400 |

ஆ. அரவிந்தன் நிறுவனத்தின் 31.12.2006இல் உள்ளவாறான திருத்திய ஐந்தொகை

| பொறுப்பு | தொகை | தொகை | சொத்துக்கள் | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| மூலதனம் | 130,000 | | உபகரணம் | 160,000 | |
| (+) தேறிய இலாபம் | 64,800 | 194,800 | தேய்வு | (36,200) | 123,800 |
| கடன்கொடுநர் | 46,000 | | தொக்கு | 30,000 | |
| அட்டுறு வாடகை | 9,000 | 55,000 | க/படுநர் | 56,000 | |
| | | | வங்கி | 40,000 | 126,000 |
| | | 249,800 | | | 249,800 |

தேறிய இலாபத் திருத்தக்கூற்று

| விவரம் | தொகை | தொகை |
|---|---|---|
| தேறிய இலாபம் | | 60,000 |
| (+) கடன் விற்பனை | 6,000 | |
| கழிவு | 5,000 | |
| உபகரண கொ/வு | 20,000 | 31,000 |
| | | 91,000 |
| (-) சம்பளம் | 4,000 | |
| கொ/வு | 3,500 | |
| வாடகை | 9,000 | |
| தேய்வு | 1,200 | |
| உட்திரும்பல் | 2,500 | (26,200) |
| தேறிய இலாபம் | | 64,800 |

தொங்கல் க/கு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 5,000 | சம்பளம் | 4,000 |
| கழிவு | 5,000 | உ/த | 8,500 |
| க/கா | 2,500 | | |
| | 12,500 | | 12,500 |

இ. நிலையான சொத்தொன்றின் கிரயத்திலிருந்து சொத்தின் இறுதி பெறுமதியை கழிக்கவரும் தொகையாகும்.

தேய்மானம்:

ஒரு சொத்தின் பயன்தரு ஆயுட்காலத்திற்கேற்ப தேய்விடத்தக்க பெறுமதியை முறையாக ஒதுக்குதலாகும். அதாவது, நிலையான சொத்தின் கிரயத்திலிருந்து அதன் இழிவுப்பெறுமதியினை கழிக்க வரும் பெறுமதியினை சொத்தின் பயன்படுத்திய ஆயுட்காலத்தில் நியாயமான முறையில் பகிர்ந்து கொள்ளுதல் பெறுமானத்தேய்வு எனப்படும்.

-நிறைவுற்றது-

# பங்குச்சந்தை தொடர்பான கட்டுரைத் தொடர்

## பங்குகளை ஒப்படைத்தலின் கடந்தவாரத் தொடர்ச்சி (14.04.2009)

இதற்கு வாடிக்கையாளரால் பொருத்தமான முறையில் பூர்த்திசெ[illegible]பட்ட உள்ளகக் கணக்கு ஒப்படைப்புப் பத்திரம் ஒன்றின் துணைப்பிரதி[illegible] தமது பங்கு பற்றுநர் மூலம் மத்திய வைப்புத் திட்டத்திற்குச் சமர்ப்பிக்க[illegible]டும். துணைப்பிரதியில் முத்திரை பொறித்து பங்கு பற்றுநருக்கு மீள அனுப்புவதன் மூலம் மத்திய வைப்புத் திட்டம் அதனைப் பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்துகின்றது. ஒப்படைப்புப் பதிவு செவ்வையானதும் பூரணமானதும் என்பது உறுதியான பின் பங்குகள் ஒப்படைக்கப்படும். இலங்கைக்கு நேர வித்தியாசமான வலயங்களில் இருந்து செயற்படக்கூடிய வாடிக்கையாளர்களின் நன்மை கருதி, அவ்வாறான வாடிக்கையாளர்களினால் மேற்கொள்ளக்கூடிய பங்குக் கைமாற்றம் தொடர்பான மத்திய வைப்புத்திட்டக் கணக்கினூடாக தன்னியக்க ஒப்படைப்புகளைச் செய்துகொள்வதற்கு பங்குச்சந்தை மூலம் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவ் ஒப்படைப்பு முதலாம் பங்குக் கைமாற்றம் நிகழ்ந்து, இரு வியாபார நாட்கள் நிறைவுபெற முன் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். முதலாம் பங்குக் கைமாற்றலின்போது குறிப்பிடப்பட்ட பணத் தீர்வுக்கான மூலங்களில் எவ்வித மாற்றங்களும் இல்லை என்பதை உறுதிப்படுத்துதல் இவ்வாறான ஒப்படைக்கு அவசியமாகின்றது. பங்குகள் மத்திய வைப்புத் திட்டக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் மத்திய வைப்புத் திட்டத்தில் தனிப்பட்ட ஒப்படைகளையும் (Private Transfers) மேற்கொள்ள முடியும். இவ்வாறான ஒப்படைப்புகளுக்கு பிணைகள் பரிமாற்று ஆணைக்குழுவின் அனுமதி இன்றியமையாதது.நாள் இறுதியில் மேற்கொள்ளக்கூடிய அவ்வாறான அனைத்து ஒப்படைப்பு கைமாற்றல்களும், அவற்றின் மூல ஆவணங்களும் கணினி அறிக்கையுடன் ஒப்பிடப்படும். அனைத்துப் பங்குகளுக்கான ஒப்படைப்புக்களும் செவ்வையாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. என்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பாதுகாப்பு நோக்கம் கருதி, கொழும்புப் பங்குச்சந்தை தொழிற்படும்போது, ஒப்படைப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு மத்திய வைப்புத்திட்டம் அனுமதிப்பதில்லை.

### தீர்வக நடவடிக்கை

பங்குப்பத்திரங்கள் இன்றி வியாபார நடவடிக்கைகளில் (Scripless Trading) ஈடுபடக்கூடிய சந்தர்ப்பம் ஒன்றை மத்திய வைப்புத்திட்டம் அறிமுகம் செய்து உள்ளது. தாள் அடிப்படையான ஒப்படை அட்டவணையைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பழைய முறைக்கு மாறாக, மத்திய வைப்புத் திட்டத்தில் வாடிக்கையாளர்களின் மூலம் பங்கு கைமாற்றல்கள் இடம்பெறுகின்றன. உதாரணமாக, ஒரு வாடிக்கையாளர் குறித்த ஒரு தொகைப் பங்குகளைக் கொள்வனவு செய்திருப்பின், அவரது கணக்கில் குறித்த பங்குகளுச் செலவுப்பதிவு செய்யப்படுவதோடு கொள்வனவு, விற்பனையாளர் கண[illegible]ல் அதேயளவில் வரவுப்பதிவு ஒன்றும் செய்யப்படும். கொள்வனவு, விற்ப[illegible] தொடர்பாகச் சரியான வாடிக்கையாளர்களின் இலக்கங்களைக் குறிப்பிடுவ[illegible] ஒவ்வொரு பங்குபற்றுநர்களினதும் பொறுப்பாக அமைகின்றது.தன்னியக[illegible] வியாபார முறையினால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்குத் தரகர்கள் குறித்த வாடிக்கையாளர்களின் கணக்கு இலக்கத்தைக் கணினிக்கு நேரடியாகப் பிரயோகிக்க வேண்டும். இத்தகவல்கள் கணினிக்கு வழங்கப்பட்ட பின் வாடிக்கையாளர்களின் கண்க்குகளில் அதற்கான பதிவுகள் செய்யப்படும். முதலாந்தர பங்கு வழங்கலின்போது பங்குகளுக்காக விண்ணப்பிக்கும் முதலீட்டாளர்கள் உரிய விண்ணப்பப் படிவங்களை நிரப்பும்போது, தமது மத்திய வைப்புத் திட்டக் கணக்கு இலக்கத்தை உரிய கூட்டில் குறிப்பிடுவது மிக முக்கியமாகும். கணக்கு இலக்கத்தைக் குறிப்பிடுவதன் மூலம் முதலீட்டாளர்கள் பங்குகளை நேரடியாக மத்திய வைப்புத் திட்டத்தில் வைப்பு செய்துகொள்ள முடியும். பங்குப்பத்திரங்கள் தபாலில் காணாமற்போய்விடும் என்ற அச்சம் இம்முறையின் மூலம் நிவர்த்தி செய்யப்படுகின்றது. தமது பங்குகளைத் தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் இரண்டாந்தரச் சந்தையில் விற்பனை செய்வதற்கு இம்முறையில் வாய்ப்புகள் உள்ளன. மத்திய வைப்புத் திட்டம் ஒவ்வொரு நாள் இறுதியிலும் மேற்கொண்ட அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் ஒப்பந்தக் குறிப்புகளை (Contract Note) தயாரிக்கின்றது. ஒவ்வொரு கொள்வனவுக்கும் கொள்வனவுக் குறிப்பும் (Bought Note), விற்பனைக்கும் விற்பனைக் குறிப்பும் (Sold Note) மும்மூன்று பிரதிகளாகத் தயாரிக்கப்படுகின்றன. அவ் ஒப்பந்தக் குறிப்புகள் குறித்த வாடிக்கையாளருக்கு அடுத்த வியாபார நாளில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்க முன் பங்கு பற்றுநர்களால் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

### கொடுக்கல் வாங்கல்களை நிறைவுசெய்தல்

மத்திய வைப்புத் திட்டத்தின் மூலம் கணக்குகளைத் தீர்த்தல் இரு முறைகளில் நிகழ்கின்றன. வியாபாரத் தினத்திலிருந்து மூன்று நாள்களுக்குள் (T+3) கொள்வனவுகளுக்கும், நான்கு நாள்களுக்குள் (T+4) விற்பனைகளுக்கும் கணக்கு தீர்த்துவைக்கப்படும்.

மாணவர்களே உங்கள் விடைகளை இவ் விடைத்தாளுடன் ஒப்பீடு செய்து விளக்கமின்மைகள் இருப்பின் 071-4273035, 071-6850005. என்ற இலக்கத்திற்கு காலை 9.00 தொடக்கம் 5.00 மணிவரை தொடர்பு கொண்டு விளக்கங்களைப்பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - ஓகஸ்ட், 2009.
General Certificate of Education (Advance Level) Model Examination - August, 2009.

# பௌதிகவியல்


ஆசிரியர்:-
சி.சிந்தனைச்செல்வன் (B.Sc) Dip in Edu, Dip in IT
கொ/விவேகானந்தா கல்லூரி.

## பொறியியல் MECHANICS

கடந்தவாரத் (14.04.2009) தொடர்ச்சி......

68. $W_1$ என்னும் நிறையுடைய ஒரு நீளமான சீரான வளை PQ மீது தாங்கிகள் $S_1,S_2$இல் ஓய்ந்துள்ளது. தாங்கிகளிலிருந்து இரு பக்கங்களிலும் வளையின் சமநீளங்கள் வெளி நீட்டப் பட்டுள்ளன. $S_1$ இற்கு சற்றுவெளியே $W_2$ நிறையுடைய ஒரு பெட்டி வைக்கப்பட்டுள்ளது. $S_1,S_2$ இலுள்ள மறுதாக்கங்கள் $R_1,R_2$ ஆகும். இப்பொழுது பெட்டி மெதுவாக முனை Pஐ நோக்கி அசைக்கப்படுகிறது. வளை சரியத் தொடங்கவில்லை.


A - $R_1 + R_2$ எப்பொழுதும் $W_1 + W_2$ இற்குச் சமனாகும்.
B - $R_1$ ஆனது எப்பொழுதும் $R_2$ஐ விடப் பெரியதாகும்.
C - பெட்டி Pஐ அணுகும்போது $R_1$ சிறியதாக $R_2$ பெரியதாகும்.இக்கூற்றுக்களில் சரியானவை





1) A,B,C எல்லாம். 2) A,B மட்டும். 3) B,C மட்டும். 4) A மட்டும். 5) C மட்டும்.

69. 3N நிறையுடைய சீரான வளை PT ஆனது நிலைக்குத்து விசைகளின் தாக்கத்தால் கிடை நிலையில் பேணப்படுகிறது. விசைகளுள் இரண்டு படத்தினால் காட்டப்பட்டுள்ளன. P,Q,R,S,T என்பன வளையில் சம இடைவெளியிலுள்ள புள்ளிகளாகும். வளையைச் சமநிலையில் பேண எப்புள்ளியில் 3N நிலைக்குத்து விசை பிரயோகிக்கப்பட வேண்டும்?

1) P 2) Q
3) R 4) S
5) T





70. 20N நிறையுடைய ஒரு வட்டத்தட்டு அதன் விளிம்புக்கு இணைக்கப்பட்ட ஓர் இழையினால் தாங்கப்பட்டுள்ளது. தட்டின் மீது ஓர் இணையை உருவாக்கும் வகையில் P,Q என்னும் விசைகள் தாக்குகின்றன. P,Q என்பன ஒவ்வொன்றும் 10N பருமனுடையவை. அவை தட்டின் விளிம்புக்குத் தொடலியாக கிடையாகத் தாக்குகின்றன. தட்டைச் சமநிலையில் வைத்திருக்கும் அமைப்பு எது?





71. ஓர் உடலின் மீது 12N, 8N விசைகள் தாக்குகின்றன. அவற்றினது விளையுளின் ஆகக் குறைந்த பெறுமானம்,
1) 20N 2) 8N 3) 4N
4) 2N 5) பூச்சியம்.

72. ஓர் உடலின் ஈர்வைமையம்,
1) எப்பொழுதும் உடலினுள் இருக்கும்.
2) எப்பொழுதும் உடலுக்கு வெளியே இருக்கும்.
3) எப்பொழுதும் உடலின் மேற்பரப்பில் இருக்கும்.
4) உடலினுள் அல்லது உடலின் மேற்பரப்பில் இருக்கும்.
5) உடலினுள் அல்லது உடலின் மேற்பரப்பில் அல்லது உடலுக்கு வெளியே இருக்கலாம்.


73. படத்தில் காட்டப்பட்ட $\vec{PQ}, \vec{QR}, \vec{SR}, \vec{TS}, \vec{TP}$ ஆகிய 5 காவிகளினதும் கூட்டுத்தொகை,
1) பூச்சியம்.
2) $\vec{TS}$ 3) $2\vec{TS}$
4) $\vec{TR}$ 5) $2\vec{TR}$





74. இரு இழைகளால் W நிறையுள்ள ஒரு பொருள் தாங்கப்பட்டுள்ளதைப் படம் காட்டுகிறது. இழையில் உள்ள இழைகள் $T_1,T_2$ ஆகும். பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A. $T_1 + T_2 > W$
B. $T_1^2 + T_2^2 = W^2$
C. $T_1 > T_2$
இவற்றுள் சரியானவை,
1) A மட்டும். 2) A, B மட்டும்.
3) A, C மட்டும். 4) B, C மட்டும்.
5) A,B,C எல்லாம்.





75. ஒவ்வொன்றும் 1kg திணிவுடைய $S_1S_2$ என்னும் இரு விற்றராசுகள் படத்தில் காட்டப்பட்டுள்ளதுபோல் ஒன்றாக இணைக்கப்பட்டு கீழ் நுனியில் 4kg திணிவுடைய ஒரு குற்றி இணைக்கப்பட்டுள்ளது. பின்வருவனவற்றுள் எது சரியானது?
1) தராசு $S_1$ பூச்சியத்தை வாசிக்கும், தராசு $S_2$ ஆனது 4kg ஐ வாசிக்கும்.
2) தராசு $S_1,S_2$ இரண்டும் 4kg ஐ வாசிக்கும்.
3) தராசு $S_1,S_2$ இரண்டும் 5kg ஐ வாசிக்கும்.
4) தராசு $S_1$ஆனது 6kg ஐ வாசிக்க $S_2$ ஆனது 5kg ஐ வாசிக்கும்.
5) தராசு ஆனது $S_1$, 5kg ஐ வாசிக்க $S_2$ ஆனது 4kg ஐ வாசிக்கும்.





76. இலேசான இழைகளால் ஒரு நிறை W தொங்கவிடப் பட்டிருப்பதைப் படம் காட்டுகிறது. XY என்னும் இழையிலுள்ள இழுவை,
1) W tan 30°
2) W Cos 60°
3) W tan 30°
4) W tan 60°
5) W Sin 60°





77. W நிறையுடைய AB என்னும் சீரான கோல் ஒன்று ஒப்பமான வளையம் ஒன்றினூடு செல்லும் இலேசான நீளா இழையினால் தொங்கவிடப்பட்டுள்ளது. இழையின் இரு முனைகளும் கோலின் இரு முனைகளுக்கும் இணைக்கப்பட்டுள்ளன. கோலின் நுனியில் ஒரு நிறை W தொங்கவிடப்பட்டுள்ளது. இந்நிலைமையைச் சரியாக வகை குறிக்கும் படம் (கோலின் நடு புள்ளி C ஆகும்.)





78. m திணிவுடைய பொருள் ஒன்று கிடையுடன் θ சாய்ந்துள்ள ஒப்பமான சாய்தளம் ஒன்றில் வைக்கப்பட்டு F என்னும் கிடைவிசையினால் நிலையாகப் பிடிக்கப்பட்டுள்ளது. அப்பொருளின் மீது தாக்கும் மறுதாக்கம்,
1) $F + mg\tan\theta$
2) $F\sin\theta + mg\cos\theta$
3) $F\sin\theta - mg\cos\theta$
4) $F\sin\theta + mg\sin\theta$
5) $F\cos\theta - mg\sin\theta$




79. மத்தியில் சுழலையிடப்பட்ட சீரான வளை ஒன்றைப் படம் காட்டுகிறது. அதில் இரு சுமைகளும் தொங்கவிடப்பட்டுள்ளன. தொகுதியைச் சமப்படுத்த மூன்றாவது சுமை ஒன்று தொகுதிக்கு இணைக்கப்படுகிறது. அச்சுமையினது திணிவும் மையத்திலிருந்து அதன் தூரமும்,
1) 1kg, 10cm
2) 1kg, 50cm
3) 2kg, 10m
4) 2kg, 30cm
5) 3kg, 10cm





80. ஒரு மீனும் 30N நிறையும் ஒரு சீரான வளையிலிருந்து தொங்கவிடப்பட்டிருப்பதைப் படம்காட்டுகிறது. வளை அதன் நடுப்புள்ளியில் சுழலையிடப்பட்டுள்ளது. மீனின் நிறை,
1) 15N
2) 20N
3) 30N
4) 40N 5) 50N





81. 8N, 6N ஆகிய விசைகளின் விளையுளாக இருக்க முடியாதது?
1) 2N 2) 6N 3) 8N
4) 10N 5) 16N

82. சமனில்லாப் புயங்களையுடைய தராசு ஒன்று பொருளொன்றின் திணிவைத் துணியப் பயன்படுத்தப்பட்டது. ஒரு தட்டில் நிறுக்கப்பட்டபோது அது 900g தோற்ற நிறையைக் கொடுத்தது. அடுத்த தட்டில் வைத்து நிறுக்கப்பட்டபோது அது 961 g தோற்ற நிறை உடையதாகக் காணப்பட்டது. இப்பொருளின் உண்மையான திணிவு,
1) 900g 2) 920g 3) 930g
4) 930.5g 5) 940g

83. ஒரு பலகையிலான எளிய பாலம் ஒன்றின் மீது ஒரு பையன் நிற்பதைப் படம் காட்டுகிறது. பலகை வளைந்து உள்ளது. இதனால் பலகையின் மீது இழுவையும் அல்லது உதைப்பும் ஆக்கப்படுகிறது. புள்ளிகள் X இலும் Y இலும் தாக்கும் விசைகளின் தன்மையை சரியாக வகை குறிப்பது பின்வருவனவற்றுள் எதுவாகும்?
Xஇல் விசை Y இல் விசை
1) உதைப்பு உதைப்பு
2) உதைப்பு இழுவை.
3) இழுவை உதைப்பு.
4) இழுவை இழுவை.
5) இழுவை பூச்சியம்.




84. மத்தியில் தாங்கப்பட்ட சீரான வளை ஒன்றைப்படம் காட்டுகிறது. வளையில் உள்ள அடையாளங்கள் 1m சம இடைவெளிகளில் உள்ளன. 6N, 2N சுமைகள் காட்டப்பட்டுள்ள தானங்களில் தொங்கவிடப்பட்டுள்ளன. பின்வருவனவற்றுள் எம் மேலதிக சுமை வளையை சம நிலையில் பேணும்,
1) X இல் 20N 2) Y இல் 6N
3) Y இல் 7N 4) Z இல் 4N
5) X இல்10N




85. ஒரு காவியினது பருமன் ஒரு போதும்,
1) நேராக இருக்காது. 2) மறையாக இருக்காது. 3) பின்னமாக இருக்காது.
4) ஓரலகாக இருக்காது. 5) பூச்சியமாக இருக்காது.

86. கரடான நிலத்திலும் ஒப்பமான நிலைக்குத்துச் சுவரிலும் ஓர் ஏணி சமநிலையில் இருப்பதைப் படம் காட்டுகிறது. முனை B இல் மறுதாக்கம் 30N ஏணியின் நிறை 40N ஆகும். முனை A இலுள்ள மறுதாக்கம்.
1) 30N
2) 40N
3) 50N
4) 60N
5) 70N




தொடர்ச்சி அடுத்த வாரம் தொடரும்......

மாணவர்களே உங்கள் விடைகளை இவ் விடைத்தாளுடன் ஒப்பீடு செய்து விளக்கமின்மைகள் இருப்பின் 071-4273035, 071-6850005, என்ற இலக்கத்திற்கு காலை 9.00 தொடக்கம் 5.00 மணிவரை தொடர்பு கொண்டு விளக்கங்களைப்பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org